
KALKI 13-4-75 60 காசு
கல்கி
சித்திரைச்
சிறப்பிதழ்

50,000 ரூபாய் மதிப்புள்ள பரிசுகள் பெறுங்கள்

பாரியின் 'ஏற்ற தருணம் எது' போட்டியில்

2 முதற் பரிசுகள் — ரூ 10,000 மதிப்புள்ள நகைகள், உங்கள் விருப்பம் போல்

2 இரண்டாவது பரிசுகள் — ரூ 5,000 மதிப்புள்ள நவீன குக்கிங் ரேஞ்ச் அல்லது ரெப்ரிஜிரேட்டர்

50 ஆறுதல் பரிசுகள் -- ரூ 400 மதிப்புள்ள காஞ்சீபுரம் பட்டுச்சேலைகள்



முழு விவரங் களடங்கிய நுழைவுத்தாட்கள் உங்கள் அருகாமையிலுள்ள பாரி விற்பனையாளரிடம் பெறுங்கள்.

பாரியின் 'ஸ்வீட் பாங்க்' தரமான பாரி மிட்டாய்கள் அடங்கியது. கண்ணைக் கவரும் ஆறு அழகிய வண்ணங்களில். 450 கிராம் மிட்டாய்களுக்கு விலை ரூ 12 தான்!

முந்துங்கள்! போட்டி முடியும் நாள் ஜூன் 15, 1975

பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், சென்னை

Parry's

SAA/PRS/1665

ஒவ்வொரு நாளும் உங்கள் சருமம் சிறிது ஈரப்பசை - யையும், சிறிது இளமையையும் இழக்கின்றது.



புதிய ஜான்ஸன்ஸ்* பேபி லோஷன் ஒவ்வொரு நாளும் ஏற்படுகின்ற அந்த இழப்பை ஈடுசெய்கின்றது.


ஒரு பெண்மணியின் விலையில்லாப் பொக்கிஷம் அவளது சருமம். எனினும், வயதாக ஆக, அதை அழகாகவே வைப்பது கடினமாகும். வருங் காலத்தில் உங்கள் சருமத்தை அழகாக வைக்கவேண்டுமானல், அதை இன்று முதலே நன்று பராமரிக்கவேண்டும். ஆகையால்தான் உங்களுக்குத் தேவை புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன். இந்த விசேஷ அழகு லோஷன் சருமத்திற்கு இன்றியமையாத ஈரப் பசையை நிலை நிறுத்துகிறது.

அதோடு, கடுமையான குளிர் மாதங்களில் உங்கள் சருமத்தை மிருதுவாகவும், இளமையுடனும், அழகொளி வீசும்படியும் வைக்கிறது— ஆண்டு முழுவதும் கூட. எனவே, ஒவ்வொரு காலையிலும் இரவிலும் புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன் உபயோகியுங்கள். உங்கள் முகம், கழுத்து மற்றும் கைகளில் உபயோகித்து, உங்கள் சருமத்திற்குப் பனிபோன்ற புதுமையை அளித்திடுங்கள்.



புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன்

உங்கள் சருமத்தை மிருதுவாக, இளமை தவழ, அழகொளி வீச வைக்கின்றது.


உங்கள் வீட்டில் மூட்டைப் பூச்சிகளா ?
ராலீஸ் ஹவுஸ்ஹோல்டு பூச்சிக் கொல்லிகள் மூலம் அவற்றிலிருந்து விடுதலை பெறுவீர்.
மூட்டைப் பூச்சிகள்
டிக்-20
கரப்பான்கள் மற்றும் எறும்புகள்
ஹெக்ஸிடோல் பி 10
கொசுக்கள்
ரிப்ளெக்ஸ்
செல்லுகள்
சூபர் டெர்மெக்ஸ்
ராலீஸ் இந்தியா லிட்.
வருடக்கணக்காக பூச்சிக்கள் கட்டுப்படுத்தலுக்கே !

RADEUS/R-SP.8

கல்கி

சித்திரைச் சிறப்பிதழ்

ஆனந்த பங்குனி, 30 ★ ஏப்ரல் 13, 1975

"கல்கியில் வெளியாகும் கதைகளில் உள்ள
பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே!
சம்பவங்களும் கற்பனையே.





புத்தாண்டில்—

பொலியட்டும் புதுமை; துலங்கட்டும் தூய்மை!

இனிக்கட்டும் இளமை; இதயத்தில் கடமை!

வாழ்த்தின் உருவகமாக மேலட்டைக்கு வண்ணப்படம் வழங்கியவர்: உத்தரா




AIL
CRANE
STEEL
300

நேற்றுப் பிறந்தவரல்ல!

கல்கி

மலர் 34

இதழ் 37

கல்கத்தா பல்கலைக் கழக அரங்கில் பேசுவதற்காக ஜெயப்பிரகாசர் காரில் ஏறிச் சென்றார். போலீஸ் பார்த்துக்கொண்டிருந்தது.

ஜெயப்பிரகாசருக்குக் கறுப்புக் கொடி காட்டிக்கொண்டும், எதிர்ப்புக் கோஷமிட்டுக் கொண்டும் யுவ காங்கிரஸ், சாத்ர பரிஷத் ஆசாமிகள் சென்றார்கள். போலீஸ் பார்த்துக் கொண்டு நின்றது.

அந்தக் குண்டர்கள் ஜெயப்பிரகாசரை வரவேற்கக் குழுமியிருந்த நவ நிர்மாண சமிதியினர் மீது கற்களை வீசிக் காயப்படுத்தினார்கள். போலீஸ் பார்த்துக் கொண்டு நின்றது!

அந்தக் காலிகள் ஜெயப்பிரகாசரின் கார் மீது ஏறிக் குதித்தார்கள்; கார்க் கண்ணாடிகளை உடைத்தார்கள். போலீஸ் பார்த்துக் கொண்டு நின்றது!

அந்தக் கயவர்கள் ஜெயப்பிரகாசரின் உருவத்தைச் செய்து கொளுத்தினார்கள். போலீஸ் பார்த்துக் கொண்டு நின்றது!

அந்த ரௌடிகள் நவ நிர்மாண சமிதித் தொண்டர்களைக் கீழே தள்ளி அடி அடியென்று அடித்து நொறுக்கினார்கள்; மண்டையைப் பிளந்து ரத்தம் பெருகியோடச் செய்தார்கள். போலீஸ் பார்த்துக் கொண்டு நின்றது!

இதற்குப் பெயர் ஜனநாயகமாம்! நடப்பது சட்டத்தின் ஆட்சியாம்! இங்கு நீதிக்கு முதலிடமாம்! நாடு சிரிக்கிறது, நகரம் சிரிக்கிறது, ஏன், நானிலமே சிரிக்கிறது!

'போலீஸாரின் கையாலாகாத்தனமில்லை இது; அவர்கள் கை கட்டிப் போடப்பட்டிருந்த நிலை' என்று ஜே. பி. சொல்கிறார்.

மேற்கு வங்க அரசுக்கும் இந்திரா அம்மையாருக்கும் அவருடன் குலாவுகிற கம்யூனிஸ்டுகளுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்: இன்று நீங்கள் போலீஸார் கையைக் கட்டிப் போட்டு விடலாம். அவர்களும் ஜே. பி.க்கும் அவரது தொண்டர்களுக்கும் இழைக்கப்படும் அநீதிகளைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்து விடலாம். ஆனால் இந்த அக்கிரமத்தை யெல்லாம் பார்த்துக் கொண்டு பாரத மக்கள் சும்மா இருக்க மாட்டார்கள். உங்கள் நடவடிக்கைகள் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்கிற கதையேயன்றி வேறில்லை.


ஜே. பி. நேற்றுப் பிறந்தவரா என்ன? உங்களுடைய மிரட்டல் உபாயங்கள் அவரை மருண்டு போகச் செய்யாது. டானிக் கொடுத்தது போலாகும்! பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்குமுறைக்கு உங்கள் மிரட்டல் உபாயங்கள் உறைபோடக் காணாது. அந்தப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கே ஈடு கொடுத்துச் சிங்கத்தின் பிடரியைப் பிடித்து உலுக்கியவர் ஜே. பி.! அதை மறவாதீர்கள்.


பெயரைக் கேட்டாலே நடுங்குகிற அளவுக்குப் பயங்கரமான கொள்ளைக்காரர்களின் வாசஸ்தலமாக விளங்கிய சம்பல் பள்ளத்தாக்குகளில் தன்னந் தனியாகச் சென்று அந்தப் பயங்கரவாதிகளுடன் அன்பு வாதம் நடத்தி மனம் மாறச் செய்தவர் ஜே. பி. அதை நினைவில் வையுங்கள்!

'இயக்கம் எதற்கு, எதிர்க் கட்சிகளை ஒன்றுபடுத்தித் தேர்தல் களத்திலேயே வெற்றி தேடிக்கொள்ளலாமே' என்ற யோசனையை ஜே. பி. ஏற்காமலில்லை. அதற்கான முயற்சிகளை ஒரு புறம் நடத்திக் கொண்டே யிருக்கிறார். ஆயினும் இயக்கத்தையும் கைவிடவில்லை.

ஆட்சியின் ஆணவப் போக்குக்கு மக்களின் எழுச்சிதான் பதில் என்ற ஜே. பி.யின் கருத்துக்கு வலுவளிக்கிற முறையிலேயே இந்திரா அம்மையாரும் மேற்கு வங்க சர்க்காரும் நடந்து கொண்டிருக்கின்றனர்.

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்


அமெரிக்கப் பாது
காப்புக் குடை


டில்லியில் பொம்மலாட்டம்!
க
வ
மகா
ர்
காடு
ணர்

என்ன சேதி?

மொரார்ஜியின் உபவாசம்

நெருக்கடி காலச் சட்டம் ரத்து செய்யப்படவேண்டும்; குஜராத்தில் அடுத்த மாத இறுதிக்குள் தேர்தல் நடக்க வேண்டும் என்ற இரு கோரிக்கைகளின் அடிப்படையில் மொரார்ஜி தேசாய் உண்ணாவிரதம் இருக்கப் போவதாய் அறிவித்திருக்கிறார்.

முடிந்தவரை பதவியில் நீடிப்போம்; இருக்கிறவரை அகப்பட்டதைச் சுருட்டுவோம் என்கிற வர்க்கத்தைச் சேர்ந்த தற்கால அரசியல் வாதியல்ல மொரார்ஜி தேசாய். படித்த சொற்பொழிவையே மீண்டும் மீண்டும் நாலு தடவை படிக்கும் அசட்டு அரசியல்வாதியும் அல்ல. சுதந்திரப் போராட்டக் காலத்தில் காந்திஜியின் இயக்கங்களுக்குத் தோள் கொடுத்து, எடுத்த காரியம் யாவினுக்கும் கைகொடுத்துப் புகழ் பெற்றவர். அத்தகைய தேசபக்தர் இன்று உபவாசம் மேற்கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்ததில் வியப்பில்லை.

உபவாசம் இருப்பது என்று அவர் தீர்மானிக்கிறவரையிலும் அதற்குப் பின்னரும் கூட முரட்டுப் பிடிவாதத்துடன் அசைந்து கொடுக்காமல் இருக்கும் இந்திரா அம்மையாரின் போக்குத்தான் வியப்பதற்குரியது. ஜனநாயகப் போர்வையில் இப்படியும் ஓர் எதேச்சாதிகாரப் போக்கு!

வறட்சிப் பணிக்குக் குஜராத் தேர்தல் குந்தகமாகும் என்பது நொண்டிச் சமாதானமே யன்றி வேறில்லை. நாட்டில் நெருக்கடி காலச் சட்டத்தைக் காலவரை யின்றி நீடித்து மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கோ நொண்டிச் சமாதானம்கூட ஏதுமில்லை!

அநாகரிகக் கேள்வி

இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.ஸி. தெலுங்கு வினாத்தாளைத் தயாரித்தவர் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றிக் கட்டுரை எழுதச் சொல்லிப் பதினைந்து வயது மாணவ மாணவிகளைக் கேட்டிருக்கிறார்!

தமிழ்க் கேள்வித் தாள்களைத் தயாரித்தவரோ இன்னும் ஒரு படி மேலே போய்க் கண்ணொளி வழங்குந் திட்டம் குறித்துக் கட்டுரை வரையுமாறு கேட்டிருக்கிறார்!

அட ஆண்டவனே! உனக்குக் கண் இல்லையா? இவர்களுக்கெல்லாம் ஒரு மதி ஒளி வழங்கு திட்டத்தை நீ நடத்தலாகாதா என்று அங்கலாய்க்கத் தோன்றுகிறது.

மாணவர்களுக்குப் பொது அறிவு இருக்க வேண்டியதுதான். மறுப்பதற்கில்லை. ஆனால் எதற்கும் ஒரு நாகரிக வரம்பு உண்டு. டாக்டர் கலைஞர் முதல்வர் கருணாநிதியின் புகழ் பாடினால்தான் பரீட்சையில் தேறலாம் என்றால் அநாகரிகத்தின் உச்ச கட்டத்தை இந்த அரசு அடைந்து விட்டது என்பதுதான் அர்த்தம்.

ராஜாஜி சொன்னார்; முதல்வர் வலியுறுத்தினார்!

கைத்தறி நெசவாளர்களுக்கு என்று தனியே சில ரகங்களை ஒதுக்கிவிட வேண்டும். ஆலைகள் இவற்றைத் தயாரிப்பதற்குத் தடை விதித்துவிட வேண்டும் என்று முன்பு ராஜாஜி சொன்னார். அதையே தமிழக முதல்வர் சென்னையில் கைத்தறிக் கண்காட்சியைத் திறந்து வைக்கையில் வலியுறுத்தியிருக்கிறார். இந்த யோசனைக்கு மத்திய அரசு ஆதரவு அளித்து அமல் படுத்தினாலன்றி லட்சக்கணக்கான கைத்தறித் தொழிலாளர்களின் வறுமை ஒழிய வழியே இல்லை.

வேடிக்கைப் பெயர் வேண்டாத வரி!

'க்வின் குவெனியல் ஸர்வே' என்பதாக ஒரு வேடிக்கைப் பெயரில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நகராட்சி, சென்னையிலிருக்கும் வீடுகளுக்குச் சொத்து வரியை அதிகரித்து வருகிறது. பெயரில் உள்ள வேடிக்கை, நோட்டீஸ் பெற்று வரி உயர்வை உணரும்போது இருப்பதில்லை.

வீட்டைக் கட்டி வாடகைக்கு விடுபவன் வாடகையை உயர்த்தினால் அப்போது வேறு மானால் வீட்டின் வருடாந்தர மதிப்பு உயர்ந்ததாகக் கருதி வரியையும் ஏற்றலாமே ஒழிய,

ராஜாஜி சிந்தனை

முதல் வேலை!

இறையுணர்வு என்கிற மண்ணில் வேர்விட்டுச் செழித்த மரம் இந்தியா. எல்லா மதங்களையும் சமநோக்குடன் பார்க்கும் சகிப்புத் தன்மையும் பெற்றது. இந்த இரட்டை அம்சங்களை நாம் கலைப்போமேயானால் ஒழுக்கக் கேடு விளையும்; சமூக நலனுக்கு ஊறு உண்டாகும். அநாதி காலம் தொட்டு மிக உயர்ந்த நிலையில் இருந்து வந்துள்ள இறையுணர்வை மீண்டும் அதற்குரிய இடத்தில் வைத்துப் போற்ற நாம் முயல வேண்டும். இதில் எந்த அளவுக்கு வெற்றி பெறுகிறோமோ, அந்த அளவுக்கு நடத்தையில் தூய்மையும் சுயநலமற்ற தேசபக்தியும் தோன்றும். இது நாட்டில் மெய்யான சுபிட்சத்தையும் குதூகலத்தையும் ஏற்படுத்தும்.

— பிராட்வே டைம்ஸ், மார்ச் 1959

கட்டிய வீட்டில் தானே குடியிருப்பவனுக்கும் வாடகையை உயர்த்த முடியாத நிலையில் இருப்பவனுக்கும் வரிச் சுமையை உயர்த்திக் கொண்டே போவது எப்படி நியாயமாகும்?

காலப் போக்கில் வீடுகளின் மதிப்பு உயர்வது அரசாங்கத்தின் அபத்தமான பணவீக்கப் பொருளாதாரத்தின் விளைவு. எனவே மதிப்பு உயர்வை யொட்டி வரி போடுவதென்றால் மத்திய அரசுக்குத்தான் வரி விதிக்க வேண்டும். வீட்டுச்சொந்தக்காரனுக்கு அல்ல, மேலும் வீட்டைக் கட்டினவனுக்கு அதன் மதிப்பு உயர்வது என்பது பெயரளவில்தான். அதை விற்றாலன்றி அதன் மதிப்பு உயர்வினால் அவன் பைசாக் காசு பயனடையப் போவதில்லை. அவனைப் பொறுத்தவரை அதன் மதிப்பு அவன் அதைக் கட்டியபோது செலவழித்த தொகைதான். இவ்வாறிருக்கச் சொத்து வரியை மட்டும் ஏகத்தாறுக உயர்த்திக்கொண்டே போகிறார்கள். ஏற்கெனவே எக்கச் சக்கமான விலைவாசி உயர்வுகளால் நிணறிக் கொண்டிருக்கும் மத்தியதர வகுப்பினரை இந்த ஐந்தாண்டு அரக்கன் வேறு தப்பாமல் வந்து அச்சுறுத்துகிறான்.

சதி செய்தாராம், சொல்கிறார்கள்!

இந்திரா காந்தியைக் கொல்லப் பாரதிய லோக தளத் தலைவர் சரண் சிங் சதி செய்தாராம்! இந்திரா காங்கிரஸ் எம். பி.க்கள் இருவர் கூறியிருக்கிறார்கள்.

பாராளுமன்றப் பேச்சு என்ற பாதுகாப்பு இருக்கிறது என்ற தைரியத்தில் வாயில் வந்ததை யெல்லாம் பேசுவது என்று ஆரம்பித்துவிட்டால் இங்கே ஜனநாயகம் நாற்றமெடுத்துவிடும். பிரதமர் இந்தப் பொறுப்பற்ற போக்கை உடனே கண்டித்திருக்கவேண்டும்; செய்யவில்லை. உள்துறை அமைச்சரும் மேத்தாவோ மேற்படி எம். பி.க்கள் கூறியதைத் தீவிரமாகக் கவனத்தில் கொள்வதாகக் கூறியுள்ளார். ஆக அவரும் சரண் சிங் மீது சந்தேகப்படுவதாக ஆகிறது.

மானமுள்ள அரசாக இருந்தால் உடனே குற்றச்சாட்டு பற்றி விசாரணை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது மாசு கற்பித்துப் பேசிய மந்திரியையும் எம். பி.க்களையும் ராஜிநாமாச் செய்யச் சொல்லி மன்னிப்பும் கேட்க வைக்க வேண்டும்.

இவரைப் பற்றி

ஃபைசல்

1932ம் ஆண்டு சௌதி அரேபியாவை உருவாக்கிய இபின்சௌத் மன்னரின் புதல்வர் ஃபைசல்.



செல்வம் கொழிக்கும் உலக நாடுகளில் முன்னணியில் நிற்கும் சௌதி அரேபியாவை அவர் 11 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். 'கரும் பொன்' (**Black Gold**) என வழங்கப்பெறும் எண்ணெய்ச் செல்வத்தின் மூலம் சௌதி நாட்டின் வருமானம் ஆண்டுக்கு 3000 மிலியன் டாலர்! மேற்கு ஆசிய அரபு மன்னர்கள் பலர் உல்லாசப் பிரியர்கள். ஊர் சுற்றுவதிலும் கேளிக்கைகளிலுமாகப் பொழுதைக் கழிக்கும் 'ஷேக்'குகளிலிருந்து முற்றும் மாறுபட்டவர் மன்னர் ஃபைசல். இவர் அமெரிக்காவின் நண்பராக விளங்கிய போதிலும் இஸ்ரேலின் பரம விரோதியாகவே இருந்து வந்திருக்கிறார். இஸ்ரேல் கைப்பற்றியுள்ள பல பகுதிகளை அவர்களிடமிருந்து விடுவித்து, ஜெருசலத்திலுள்ள இஸ்லாமிய ஆலயங்களில் தாம் தொழுகை நடத்தப் போவதாகச் சபதம் செய்தவர். அந்த நோக்கத்துடனேயே இஸ்ரேலுக்கு எதிரான போர்களில் அரபு நாடுகளுக்குப் பெருமளவில் நிதி உதவி வழங்கியுள்ளார்.

இஸ்லாம் வகுத்த 'ஷரீஅத்' என்ற சட்டத்தின் அடிப்படையில் நாட்டை ஆண்டு வந்தார், ஃபைசல். திருட்டுக் குற்றம் என்றால், திருடியவனின் கையை வெட்டி எறிவது, விபசாரம் செய்தவர்கள் மீது மக்கள் கற்களை எறிதல், கொலை செய்தவனின் தலையைக் கொய்தல் இம்மாதிரி கடுமையான 'ஷரீஅத்' தண்டனைகளின் மூலம் நாட்டில் குற்றங்கள் மலியாமல் தடுக்கலாம் என்று உறுதியாக நம்பி, அவ்வண்ணமே செயல்பட்டார். மதப் பற்று மிக்க இம்மன்னர் உலக முஸ்லிம்கள் பலருக்கும் தலைவராகத் திகழ்ந்தார். ஒட்டகப் பந்தயத்தில் இவருக்கு மோகம். உடன் பிறந்தவரின் மகனே இவரைச் சுட்டுக் கொன்றதாகக் கூறப்படுகிறது.

ஆர். குசேலர்

பிரதாப சந்திரன் கொலை வழக்கில் குற்றமற்றவர் என்பதாக விடுவிக்கப்பட்ட குசேலர் சென்னையிலும் சுற்றுப்புறமும் உள்ள தொழிற்சாலைகளின் சார்பில் செயல்படும் 80க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களின் தலைவர். எம். ஏ., பி.எல். வயது 38. முன்பு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்த இந்தச் சுறுசுறுப்புள்ள தொழிற்சங்கத் தலைவர் இன்று எந்தக் கட்சியிலும் சேராமல் விலகி நிற்கிறார். சுய விளம்பரத்தை விரும்பாதவர். 1963ல் திருமணம் ஆயிற்று. குழந்தைகள்: மூன்று பெண்களும் ஒரு பையனும். வழக்குரைஞரான இவருக்கு அந்தத் தொழிலில் 'பிராக்டீஸ்' செய்ய அவகாசமே இல்லாத அளவுக்குத் தொழிற்சங்க வேலைகள் மிகுதியாக உள்ளனவாம். இனிய சுபாவமுள்ளவர். இரவு பகல் பாராது தொழிற்சங்க வேலைகளில் மூழ்கியிருப்பாராம். இரவு மூன்றரை மணிக்குப் படுக்கச் சென்றாலும்கூட, காலையில் வழக்கம்போல் எழுந்து அன்றாட வேலைகளைக் கவனிக்கத் தொடங்குவார். இவர் தலைவராக உள்ள 80க்கு மேற்பட்ட தொழிற் சங்கங்களுள் சிம்ஸன், பாரி, டன்லப் முதலிய நிறுவனங்களின் தொழிற் சங்கங்கள் குறிப்பிடத்தக்கவை.



— பாணன்

முருகப் பெருமான்

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி
காமகோடி சங்கராசாரிய ⑤
ஸ்வாமிகள்

அச்சுப் புஸ்தகங்கள் வருகிற வரையில் மகா பண்டிதர்களாக இருந்த பலர் ஓர் ஏட்டுச் சுவடி கூட இல்லாமல், ஞாபகத்திலிருந்தே சகல சாஸ்திரங்களையும் கற்றுச் சொல்லி வந்தார்கள். இப்போது புஸ்தகம் என்று ஒன்று வந்துவிட்டதால், 'பார்த்துக் கொள்வதற்குத்தான் (for ready reference) புஸ்தகம் இருக்கிறதே' என்று எவரும் எதையும் இப்படி மனசுக்குள் ஆழமாக வாங்கிக் கொள்ளாத நிலைமையையே பார்க்கிறோம். இன்று வெளியே லைப்ரரிகள் அதிகம். அக்காலத்திலோ எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்கூட ரொம்பப் பேர் தாங்களே 'வாக்கிங் லைப்ரரி'களாக இருந்து வந்தார்கள்.

சுலோக ரூபத்தில் வெகு அழகாக 'அமர கோச'த்தை எழுதினான் அமரஸிம்மன். அதிலே ஹிந்துமத தெய்வங்களின் பெயர்கள் வருகிற போது, ஒவ்வொரு தெய்வத்துக்கும் வேறு என்னென்ன முக்கியமான பெயர்கள் உண்டோ, அத்தனையையும் கொஞ்சம்கூட மதபேத புத்தியில்லாமல் அடுக்கிக் கொண்டு போவான். அதைக் கேட்டாலே அகராதியாகத் தோன்றாது; அர்ச்சனை போல—நாமாவளி போல—தோன்றும். உதாரணத்துக்கு இதோ 'சம்பு' என்ற வார்த்தைக்குப் பிரதி பதங்களாக 'அமரம்' சொல்வதைக் கேளுங்கள்:

சம்பு: ஈச: பசுபதி: சிவ: சூலீ மஹேச்வர:
ஈச்வர: சர்வ ஈசான: சங்கர: சந்த்ரசேகர:
பூதேச: கண்டபரசு: கிரீசோ கிரிசோ ம்ருட:
ம்ருத்யுஞ்ஜய: க்ருத்திவாஸா: பிநாகீ
ப்ரமதாதிப:

அமரஸிம்மனே ஈச்வர நாமாக்களை ரொம்பவும் ஆசையோடு சொல்லிக் கொண்டு போகிற மாதிரி இருக்கிறது. ஆரம்ப மாணவர்களும் நினைவு வைத்துக் கொள்கிற மாதிரி சுலபமாக, லளிதமாகப் பதங்களைப் போட்டிருக்கிறான்.

'இந்திரா' என்ற வார்த்தை வந்தவுடன் இப்படியே மகாலக்ஷ்மியைப் பற்றிப் பொழிகிறான்; கேட்கவே லக்ஷ்மீகரமாக இருக்கும்:

இந்திரா லோகமாதா மா க்ஷீரோததனயா
ரமா!
பார்க்கவீ லோகஜனனீ க்ஷீரஸாகர கன்யகா
லக்ஷ்மீ: பத்மாலயா பத்மா கமலா ஸ்ரீ: ஹரி
ப்ரியா!!

—இப்படிப் போகிறது. டிக்ஷனரி மாதிரி இல்லை; ஸ்தோத்திரமாக இருக்கிறது!

இப்படிப் பட்சபாதமில்லாமல் அர்த்தம் சொன்ன அமரஸிம்மனுக்கும் ஒரே ஓர் இடத்தில் மட்டும் பட்சபாதம் வந்ததுதான் வேடிக்கை. 'பௌத்த மதம்' என்று வந்தால் மட்டும் கொஞ்சம் மட்டம் தட்ட வேண்டும் என்கிற எண்ணம் அவனுக்குப் போகவில்லை. நியாயமாகப் பார்த்தால் பௌத்தத்தைவிட ஹிந்து மதத்திடம்தான் அவனுக்கு விரோதம் அதிகம் இருக்க வேண்டும். ஏனென்றால், கடவுளைப் பற்றிச் சொல்லாமல் இருப்பது, யக்ஞத்தில்கூட ஹிம்சை கூடாது என்பது—ஆகிய கொள்கைகளில் ஜைனம் பௌத்தம் இரண்டுமே வைதிகத்துக்கு விரோதமானவை. அவற்றுக்குள் இம்மாதிரி ஒற்றுமை அம்சங்கள் நிறைய இருக்கின்றன.

பொதுவாக அடுத்த ஊரில் அல்லது அடுத்த தெருவில் நம் பரம விரோதியிருக்கிறான் என்றால்கூட அவனிடம் நமக்கு அதிகம் போட்டி யிராது, அதிக வயிற்றெரிச்சல் இராது; ஆனால் பக்கத்து வீட்டில் அல்லது எதிர் வீட்டில் நமக்குக் கிட்டத்தில் இருக்கிறானே, இவனுக்கு நம்மிடம் அத்தனை விரோதம் இல்லாவிட்டால்கூட, இவனைப் பார்த்துத்தான் நமக்கு அசூயை, ஆத்திரம் ஜாஸ்தியாக இருக்கும். இவனை எப்படி மட்டம் தட்டலாம் என்றே காத்துக் கொண்டிருப்போம். அமரஸிம்மன் ஹிந்து மத வார்த்தைகளுக்கு நியாயமாக அர்த்தம் பண்ணிவிட்டு, புத்த மத வார்த்தைகள் என்று வருகிற போது என்ன செய்தான்?

புத்தரைக் குறிப்பிடும் வார்த்தை வரிசையைச் சொல்ல நேர்ந்தபோது, அவருக்கென்றே பிரசித்தமாக இருக்கிற பெயர்களை—"ததாகதர்" (லட்சியத்திலேயே செல்கிறவர்) போன்றவற்றை — அமரஸிம்மன் சொல்லவேயில்லை. பொதுவான பெயர்களாகச் சிலவற்றை மட்டும், "இதைப் படிக்கிற எந்த மதஸ்தர் வேண்டுமானாலும் தன் ஸ்வாமி என்று நினைக்கும்படியிருக்கட்டும்" என்கிற மாதிரி சொல்லிவிட்டான். அதோடு நிற்கவில்லை. 'ததாகதர்', 'சாக்ய முனி' முதலான பெயர்களையெல்லாம் ஜினருடையதாக (மகாவீரருடையதாக) அடுக்குகிறான்! புத்தருடைய 'பாடி-கார்ட்'டாக (மெய்காவலராக) ஸுகதர் என்று இருந்தார். அவருடைய பெயரைக்கூட ஜினருடைய பெயர்களில் ஒன்றாகவே கொடுக்கிறான்.

ஆனால் ஹிந்து மதத்திடம் இப்படியெல்லாம் மனக் கோணல் (Prejudice) எதுவும் காட்டவில்லை. ஹிந்துக்களுக்குள்ளேயே வைஷ்ணவர்கள், சைவர்களுக்கிடையில் இருக்கக்கூடிய பரஸ்பர 'ப்ரெஜுடிஸ்'கூட இவனுக்கு இல்லை. ஈச்வரன் பெயர்களைச் சொல்கிற மாதிரியே மகாவிஷ்ணுவின் நாமாக்களைக் கொடுக்கிறான். அதனால்தான் சைவ வைஷ்ணவ பேதமில்லாமல் எல்லா மாணவர்களும் 'அமர'த்தை நெட்டுருப் போடும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது.

இப்படி எந்த ஸ்வாமிக்கும் ஏற்றத் தாழ்வு சொல்லாத பரமஹம்ஸனான அமரஸிம்மன் தன்னுடைய கோசத்தில் சுப்பிரமணியரையே "ஸ்வாமி" என்று சொன்னால் அதை ஒப்புக் கொள்ளத்தானே வேண்டும்?

தேவஸேனாபதி: சூர: ஸ்வாமீ கஜமுகானுஜ: என்கிறது அமரம். (தொடரும்)



VOLTAS
"அதிக இட வசதி, குறைந்த மின்சக்தி செலவு"
என்கிறார் வோல்டாஸ் ஓபல் 160 உபயோகிக்கும் ஒருவர்
1. இந்த வகையிலேயே மிக அதிக இடவசதி உள்ளது.
2. 24% குறைவான மின்சக்தி செலவு.
3. 35 நிமிடங்களில் விரைவாக ஐஸ்.
4. 6 குளிர்பானக் குப்பிகளுக்கு 30 நிமிடங்களில் குளுமை தரும் விசேஷ டிரே.
அவை உங்கள் உள்ளத்தையும் குளிரச் செய்யும்.
வோல்டாஸ் ஓபல்—100 லிட்டர் ஃப்ரிஜும் கிடைக்கிறது
தன்னிகரற்ற 4 அம்சங்கள்
வோல்டாஸ் ஓபல் 160
உங்கள் வசதிக்கெனவே உருவான ஃப்ரிஜ்
CMV-126-182 TAM
வோல்டாஸ் லிமிடெட், பம்பாய் • கல்கத்தா • சென்னை • புது டில்லி • பெங்களூர் • லக்னோ
பாட்னு • அகமதாபாத் • சிகந்தராபாத் • கொச்சி • கான்பூர் • ஜாம்ஷெட்பூர்.
உங்கள் பகுதியில், எங்கள் அதிகாரம் பெற்ற விற்பனையாளர் யாரென அறிய அருகாமையிலுள்ள வோல்டாஸ் அலுவலகத்துடன் தொடர்பு கொள்க.

கேரளம் தந்த தமிழக அன்னை

ஹாரிங்டன் சாலையில் உள்ள தமது வீட்டின் பின்புறத் தாழ்வாரத்தில் அமர்ந்திருக்கிறார் திருமதி அம்மு சுவாமிநாதன். தலை தும்பைப் பூவாக வெளுத்துள்ளது. சுமார் நாற்பது ஆண்டு காலம் பொதுப் பணியில் ஈடுபட்டு உழைத்து வந்துள்ளதன் விளைவாக இம்மூதாட்டியின் உடல் தளர்ச்சி அடைந்துள்ள போதிலும் உள்ளத்தில் உற்சாகம் குன்றவில்லை.

''இம்மாதம் எனக்கு எண்பத்தோரு வயது பூர்த்தியாகிறது'' என்று கூறும்போது திருமதி சுவாமிநாதனின் முகத்தில் சேவையினால் பெற்றுள்ள மன நிறைவு ஒளிர்கின்றது. 'வயது ஆகிறதே என்று கவலைப்படுவானேன் ?.... கோப்பையின் அடிப் பாகத்திலேதான் இனிப்பான சர்க்கரை இன்னும் பெரும் பகுதி கரையாமல் தங்கியிருக்கிறது' என்று ஓர் அமெரிக்க அறிஞர் கூறியது என் நினைவுக்கு வருகிறது.

''நீங்கள் பிறந்த ஊர் எது?'' என்று கேட்கிறேன்.

''மலபாரில் குந்திபுரத்தை அடுத்துள்ள ஆனைக்கரை என்னும் ஊரில் 1894 ஏப்ரில் 22ந் தேதி பிறந்தேன். முறையாகப் பள்ளி சென்று பயிலவில்லை. வீட்டிலேயேதான் படித்தேன்'' என்கிறார். எனினும் ஆங்கிலம் அழகாகப் பேசுகிறார். தாய்மொழி மலையாளம் தவிர, தமிழும் நன்ருகப் பேசுகிறார் — பெரும்பாலும் சென்னையிலேயே வசித்து வந்ததன் பயனுக.

பதினைந்தாவது பிராயத்திலேயே இவருக்குத் திருமணம் நிகழ்ந்தேறியது. கணவர் டாக்டர் சுவாமிநாதன் புகழ்பெற்ற வழக்கறிஞர். ''அமெரிக்காவில் சட்டத் துறையில் பி. எச்.டி. பட்டம் பெற்று, சென்னை ஆர்மீனியன் தெருவில் 'டாக்டர் சுவாமிநாதன் — வழக்குரைஞர்' என்று போர்டு போட்டுக் கொண்டு தொழில் நடத்தத் தொடங்கிய புதிதில் நோயாளிகள் சிலர் என் கணவரிடம் சிகிச்சைக்கு வர ஆரம்பித்தனர். பிறகுதான் பெயர்ப் பலகையில் 'டாக்டர்' என்று போட்டுக் கொள்வதை விடுத்தார்'' என்று சிரித்தவாறு கூறிவிட்டு, ''நான் ஓரளவு சமூகத் துறையிலும் அரசியல் துறையிலும் பணியாற்றினேன் என்ருல் அதற்குக் காரணம் என் கணவர் வழி காட்டியாக நின்று ஊக்கம் அளித்ததுதான்'' என்கிறார்.

இந்திய மாதர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர்ந்தது முதல் இவரது பொதுப் பணி தொடங்கியது. பின்னர் அச் சங்கத்தின் தலைவராகவும் ஆனார். அகில இந்திய மாதர் மகாநாடு (All India Women's Conference) தொடங்கியபோது அதில் உறுப்பினராக இருந்து பின்னர் அதன் செயலாளராகவும் சேர்மனுகவும் பதவி வகித்து மாதர் முன்னேற்றத்துக்கு உழைத்தார்.

இவரது அரசியல் பிரவேசம் 1930-ம் ஆண்டில். ''சுதேசி இயக்கம் என்னைக் கவர்ந்தது. அன்று முதல் இன்றுவரை தொடர்ந்து காங்கிரஸில் இருந்து வருகிறேன். 1934-39ம் ஆண்டுகளில் சென்னை நகராட்சி மன்றத்தின் காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இருந்தேன். 1939ல் அமைதி, விடுதலைக்காக வாஷிங்டனில் நிகழ்ந்த சர்வதேச மாதர் மாநாட்டுக்கு விருந்தினர் பிரதிநிதியாகச் சென்றிருந்தேன். அவ்வமயம் அமெரிக்காவில் கல்வி, சமுதாயப் பணி நிறுவனங்களையெல்லாம் விரிவாகச் சுற்றிப் பார்த்தது நல்லதோர் அனுபவமாக அமைந்தது எனக்கு'' என்கிறார்.

1942ல் விடுதலை இயக்கம் தீவிரமடைந்ததையொட்டி 1943ம் ஆண்டு இவர் கைது செய்யப்பட்டார். திருமதி மஞ்சுபாஷிணி, மாதவ மேனன் ஆகியோருடன் பதின்மூன்று மாதங்கள் சிறைவாசம் செய்துள்ளார். குறிப்பாக இன்ன குற்றத்துக்காக என்று காரணம் காட்டிக் கைது செய்யவில்லையாம். 'கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா விதி'களின்படி கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப் பட்டிருந்தாராம். '''நான் தலைமறைவாகி விட்டால் என்ன செய்வீர்கள்?' என்று அப்போதைய போலீஸ் அதிகாரி பாத்ரோவைக் கேட்டேன். 'முடியாத காரியம். போலீஸ் உங்களைக் கண்காணித்து வருகிறது' என்று கூறிய அவர் மறுநாள் எங்கள் வீட்டுக்கு வந்து டீ சாப்பிட்டுவிட்டு என்னைக் கைது செய்து கொண்டு போனார் !'' என்று கூறும் போது திருமதி அம்முசுவாமிநாதன் அந்தப் பழைய நிகழ்ச்சியை எண்ணிச் சிரிக்கிறார்.

1945ம் ஆண்டு சென்னைத் தொகுதியிலிருந்து மத்திய அசெம்பிளிக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இந்திய அரசியல் அமைப்பினை உருவாக்கிய தென்னிந்தியத் தலைவர்களுள் குறிப்பிடத் தக்கவர் இம்மூதாட்டி.

இவர் விஜயம் செய்த அயல்நாடுகள் பற்றிக் கூறுகிறார்: ''1948ல் இந்திய அரசு



எதியோப்பியாவுக்கு அனுப்பி வைத்த நல்லெண்ணத் தூதுகோஷ்டியில் இடம் பெற்றேன். 1949ல் கோப்பன் ஹேகனில் நடைபெற்ற சர்வதேச மகாநாட்டுக்கு விஜயம் செய்தேன். ஐ. நா. சபையின் சார்பில் 1949—50ல் ஜெனிவாவில் நிகழ்ந்த கூட்டத்தில் பாரதப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டேன்.'' 1953ல் பாராளுமன்ற மாதர் பிரதிநிதிகளுள் ஒருவராக ஜப்பானுக்குச் சென்று வந்த இவர், அடுத்த வருடம் மாதர் நல்லெண்ணத் தூதுக்குழுவில் இடம் பெற்றுச் சீனவுக்கும் சென்றுள்ளார்.

கல்வித் துறைக்கு இவர் அரும் பணி யாற்றியுள்ளார். இந்திய அரசின் மத்தியக் கல்வி ஆலோசனைக் குழுவில் ஐந்து ஆண்டுக் காலம் உறுப்பினராக இருந்திருக்கிறார். பாரதம் விடுதலை அடைந்த பிறகு, லோக் சபைக்குத் திண்டுக்கல் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். ராஜ்ய சபையிலும் இரு வருடங்கள் உறுப்பினராக நியமனம் பெற்றுப் பணியாற்றியுள்ளார்.

1960ம் ஆண்டு ராஜ்யசபை உறுப்பினர் என்ற வகையில் இவரது பதவிக் காலம் முடிவுற்றதும் தமிழ் நாட்டிலேயே குறிப்பாகச் சென்னை நகரிலேயே தங்கிப் பணியாற்றி வருகிறார். மத்திய திரைப்படத் தணிக்கை வாரியம், பாரத் சாரணர் இயக்கம், பல்வேறு சமூக, கல்வி நிறுவனங்கள் இவற்றின் மூலம் நற்பணியாற்றியுள்ள திருமதி அம்முசுவாமிநாதன், குடும்பக் கட்டுப்பாடு (சென்னைக் கிளை) சங்கத்தின் தலைவராகத் தற்சமயம் பணியாற்றி வருகிறார்.

இவருக்கு இரு புதல்வர்களும் இரு புதல்விகளும் உள்ளனர். மகன் திரு கோவிந்த் சுவாமிநாதன் பிரபல வழக்குரைஞர்—அட்வகேட் ஜெனரல். மூத்த பெண் டாக்டர் லக்ஷ்மி செஹ்கல் சுபாஷ் போஸின் இந்திய தேசியப் படையில் சேர்ந்து வீரப் பணியாற்றிப் புகழ் பெற்றவர். அடுத்த பெண் திருமதி மிருணாளினி சாராபாய் நாட்டியத்தில் உலகப் புகழ் பெற்றவர். திரு சுப்பராம் சுவாமிநாதன் தொழில் துறையில் பணியாற்றுபவர்.

''இதுவரை அம்மு சுவாமிநாதனை இருந்த நீங்கள் இப்போது 'அம்மா' சுவாமிநாதனை ஆகியிருக்கிறீர்கள் அல்லவா? அதுபற்றி விளக்கம் தெரிந்து கொள்ளலாமா?'' என்கிறேன்.

''அன்னை கஸ்தூரிபா தினம் 'தாய்மார்' தினமாகக் கொண்டாடப்படுவதையொட்டி கடந்த பிப்ரவரி மாதம் 22ம் தேதி திருமதி இந்திரா காந்தி சென்னைக்கு விஜயம் செய்த போது எனக்கு இந்தக் கௌரவம் கிட்டியது. இது சர்வதேச மாதர் ஆண்டு அல்லவா? அதையொட்டி இவ்வாண்டின் அன்னை (Mother of the Year) என்று என்னைக் கௌரவித்தார்கள். தேசிய மாதர் கௌன்சிலின் தமிழ் நாடு கிளையும் இன்னும் பல்வேறு மாதர் நிறுவனங்களுமாகச் சேர்ந்து ஏற்பாடு செய்த நிகழ்ச்சி இது.''

''திருமதி இந்திரா காந்தியை உங்களுக்கு முன்னமேயே தெரிந்திருக்குமே?''

''ஓ! ஐந்து, ஆறு வயதுச் சிறுமியாகவே திருமதி இந்திராவை நான் நன்கு அறிந்தவள். மேற்படி நிகழ்ச்சியின் போது இந்திரா பொன்னாடையை என் கையில் கொடுக்க வந்தபோது 'தமிழ் நாட்டு வழக்கம், பொன்னாடையைப் பிரித்துப் போர்த்த வேண்டும்' என்று நான் சொன்னதும் பிரதமர் இந்திரா சிரித்தவாறு அவ்வண்ணமே செய்தார்'' என்கிறார், 'அம்மா' திருமதி அம்மு சுவாமிநாதன்.

கேரளத்தில் பிறந்து பெரும்பாலும் தமிழ் நாட்டிலேயே வாழ்ந்து தமிழ் மக்களின்—குறிப்பாக, மகளிரின் நல்வாழ்வுக்கே உழைத்துப் பாரத ஒருமைப்பாட்டின் சின்னமாகத் திகழ்கிறார் 'அம்மா'.

பேட்டி: **ருக்மிணி பாலகிருஷ்ணன்**

ஐடா



மக்களின் பிணியை அகற்றவே தமது வாழ் நாளை அர்ப்பணித்த டாக்டர் ஐடாஸ்கட்டர் அம்மையார் பள்ளியில் படிக்கும்போது தமது தோழிகளிடம் கூறியது என்ன தெரியுமா?

''நான் எந்த நிலையிலும் டாக்டராக மாட்டேன். அதுவும் ஒரு தொழிலா?''

''நான் மிஷினரியாகி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற பைத்தியக்காரத்தனத்தை விரும்ப மாட்டேன்.''

''நல்ல தொழில், நல்ல வருவாய், ஆட்டம் பாட்டம், பார்ட்டிகள் நிறைந்த உல்லாச வாழ்வு—இதுதான் நான் விரும்புவது.''

இப்படிக் கூறியவர் பின்னால் மனம் மாறி வேலூர் கிறிஸ்தவ மருத்துவ மனை அமையக் காரணமாக இருந்தார். எப்படி?

இவர் இந்தியாவில் தம் தந்தையுடன் தங்கியிருந்தபோது இவரை டாக்டர் என்று நினைத்துக் கொண்டு ஓர் இரவில் மூன்று குடும்பத்தினர் உதவிக்கு அழைத்தனர். அழைப்பை இவர் ஏற்காததில் வியப்பில்லை. அன்று இரவு மூன்று மரணங்கள் தக்க மருத்துவ உதவி கிடைக்காததால் ஏற்பட்டதை இவர் மறுநாள் காலையில் உணர்ந்தார். உடனே தந்தையாரிடம் ஆசி பெற்று அமெரிக்கா சென்று மருத்துவம் படித்துத் திரும்பி வந்தார். வேலூர் ஆஸ்பத்திரியை நிறுவினார்.

-அருணதாசன்

வேறு ஒரு கழுதை!

நஸிருதின் முல்லா என்பவர் சிறந்த நகைச்சுவையாளர். அவரிடமிருந்த கழுதை ஒன்று ஒருமுறை காணாமல் போய்விட்டது.

''உம்முடைய கழுதையைக் காணோம் என்று இவ்வளவு வருந்துகிறீர்களே முல்லா, உம்முடைய முதல் மனைவி இறந்தபோது ஏற்பட்ட துக்கத்தை விடவா இது பெரிது?'' என்று சொல்லினர் மக்கள் அவரைத் தேற்றினர். அதற்கு முல்லா விக்கியபடி சொன்னார்:

''மனைவி இறந்தபோது நீங்கள் வந்து, 'அதற்கென்ன வேறு ஒருத்தியைப் பார்த்துத் தருகிறோம்' என்றீர்கள். ஆனால் இதுவரையிலும் யாரும் வந்து 'வேறு ஒரு கழுதையை வாங்கித் தருகிறோம்' என்று சொல்லவில்லையே அதுதான் இவ்வளவு வருத்தம்!''

- சரஸ்வதி பஞ்சு

சிறு துளி பெரு வெள்ளம்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

TNSC BANK

டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :

1. *சீசன் டெபாஸிட்டுகள்- ரூ.1000/-மும் அதற்கு மேலும்* — வருடத்திற்கு
   - 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை — 3.25%
   - 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை — 3.75%
2. தவணை டெபாஸிட்டுகள்- ரூ 100/-ம் அதற்கு மேலும்

காலம்	வருடத்திற்கு
91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக	5.75%
6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக	6.25%
9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக	7.25%
1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக	8.25%
3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை	9.25%
5 வருடங்களுக்கு மேல்	10.25%

3. சேவிங்ஸ் கணக்கு — 5.75%
4. நடப்பு (current) கணக்கு — வட்டி கிடையாது



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,

379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் : MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு), அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி


TNSCB : 122/75

பழரசம் பருகுங்கள்

ஸ்பென்ஸர்ஸ்

பழரசங்கள் மற்றும் ஸிரப்புகள்

உங்கள் விருந்தினருக்குப் புதுமையான விருந்து படையுங்கள். ஸ்பென்ஸர்ஸ் பழரசங்களையும் ஸிரப்களையும் பருகக் கொடுங்கள். அவர்கள் மட்டுமின்றி உங்கள் குடும்பத்தினரும் விரும்பிப் பருகுவார்கள். ஏனெனில் இவை புதுச்சுவை குன்றாத, தெவிட்டாத பானங்கள். சிக்கனமானவையும் கூட. வாயு கலந்த குளிர்பானங்களைக் காட்டிலும் மொத்தத்தில் விலை மலிவானவை. ஸ்பென்ஸர் தயாரிப்பு என்றால் தரத்தின் சிறப்பைப் பற்றிச் சொல்ல வேண்டாமல்லவா?



தரமுயர்ந்த
பானங்களைத்
தருவோர்

ஸ்பென்ஸர்ஸ்

FDS SP 2166 TAM

ஸ்பென்ஸர் & கோ. லிட்., சென்னை மற்றும கிளைகள்

ஐம்பத்தேழாம் அத்தியாயம்


இராஜகுல தர்மம்

மகேந்திர பல்லவருடைய விருப்பத்தைத் தெரிந்து கொண்டு அவரைச் சூழ்ந்திருந்த மந்திரிகளும் அமைச்சர்களும் சற்று விலகிச் சென்றார்கள். மறுபடியும் சக்கரவர்த்தி அழைத்தவுடனே திரும்பி வருவதற்கு ஆயத்தமாய்க் காத்திருந்தார்கள்.

சக்கரவர்த்திக்குச் சமீபமாக மாமல்லரும் அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் பரஞ்சோதியும் வணக்கத்துடன் நின்றார்கள்.

மகேந்திர பல்லவர் படுத்திருந்த மண்டபத்துக்கு ஒரு பக்கத்தில் அந்தப்புரத்தின் வாசல் இருந்தது. மகேந்திர பல்லவர் அங்கே திரும்பி நோக்கியதும் தாதி ஒருத்தி ஓடி வந்தாள். அவளிடம், ''மகாராணியை அழைத்து வா!'' என்று பல்லவேந்திரர் ஆக்ஞாபித்தார்.

பின்னர், மாமல்லரைப் பார்த்து, ''குழந்தாய்! நான் கண் மூடுவதற்குள்ளே இரண்டு காரியங்களை நிறைவேற்ற வேண்



டும் என்று தீர்மானித்திருந்தேன். அதில் ஒன்று நிறைவேறி விட்டது. சிவகாமியின் சபதத்தைப் பூர்த்தி செய்து அவளை வாதாபியிலிருந்து நீ அழைத்து வரும் விஷயத்தில் நம் மந்திரி பிரதானிகளால் ஏதேனும் தடை நேராதிருக்கும் பொருட்டு அவர்களிடம் உன் முன்னிலையில் வாக் குறுதி பெற்றுக் கொண்டேன். வாக் குறுதியிலிருந்து அவர்கள் பிறழ மாட் டார்கள். வாதாபிப் படையெடுப்புக்கு உனக்குப் பூரண பக்க பலம் அளிப் பார்கள்'' என்றார்.

மாமல்லர் மறுமொழி எதுவும் சொல்லவில்லை.


''மகனே! நான் செய்ய விரும்பும் இரண்டாவது காரியம் உன்னைப் பொறுத்திருக்கின்றது; நீதான் அதை நிறைவேற்றித் தர வேண்டும். மர ணத்தை எதிர்பார்க்கும் சக்கரவர்த்தி யின் கோரிக்கையை மந்திரி பிர தானிகள் உடனே ஒப்புக் கொண் டார்கள். என் அருமைப் புதல்வனாகிய நீயும் என் அந்திம கால வேண்டுகோளை நிறைவேற்றித் தரு வாயல்லவா?'' என்றார் மகேந்திரர்.

''அப்பா! என்ன வேண்டுமானாலும் எனக்குக் கட்டளை யிடுங்கள்; நிறை வேற்றுகிறேன். கோரிக்கை, வேண்டு கோள் என்று மட் டும் சொல்லா தீர்கள்!'' என்றார் மாமல்லர்.

''குமாரா! இந் தப் பெரிய சாம் ராஜ்யத்தை நிர் வகிக்கும் பொறுப்பு கூடிய சீக்கிரம் உன் தலையில் சாரப் போகிறது. ஆயிரம் ஆண்டுகளாகப் புகழ் பெற்ற காஞ்சி மாநகரின் சிம்மாச னத்தில் நீ வீற்றிருக்கும் காலம் நெருங்கி வந்திருக்கிறது....''

''அப்பா! இவ்விதமெல்லாம் தாங்கள் பேசுவதானால், நான் இங் கிருந்து போய்விட விரும்புகிறேன். எனக்குச் சிம்மாசனமும் வேண்டாம், சாம்ராஜ்யமும் வேண்டாம். தாங்கள் தான் எனக்கு வேண்டும். நெடுங்காலம் தாங்கள் திடகாத்திரமாக வாழ வேண்டும்.''

''மாமல்லா! நம்முடைய கண்களை நாமே மூடிக் கொண்டு எதிரே உள்ள தைப் பார்க்காமல் இருப்பதில் பய னில்லை. இனி நெடுங் காலம் நான் ஜீவித் திருக்கப் போவ தில்லை. அப்படி ஜீவித்திருந்தாலும் திடகாத்திரமாக







இருக்கப் போவதில்லை. சாம்ராஜ்ய பாரத்தை இனிமேல் என்னால் ஒரு நிமிஷமும் தாங்க முடியாது. அந்தப் பொறுப்பை நீதான் வகித்தாக வேண்டும்.''

''பொறுப்பு வகிக்க மாட்டேன் என்று நான் சொல்லவில்லையே? காஞ்சி சிம்மாசனத்தில் தாங்கள் இருந்து கொண்டு எனக்குக் கட்டளையிடுங்கள். நான் நிறைவேற்றாவிடில் கேளுங்கள்.''

''நல்லது, மகனே! இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் பொறுப்பை நிர்வகிப்பதற்குத் தகுதி பெற வேண்டுமானால் அதற்கு முக்கியமான ஒரு நிபந்தனை இருக்கிறது. அதை நீ பூர்த்தி செய்தாக வேண்டும்!''

''நிபந்தனையைச் சொல்லுங்கள், அப்பா!'' என்றார் மாமல்லர். அவருடைய உள்ளத்தில் ஏதோ ஒருவித வேதனை உண்டாயிற்று.

''குழந்தாய்! வளைத்து வளைத்துப் பேசுவதில் என்ன பயன்? நீ எனக்கு ஒரே மகன். வாழையடி வாழையாக வந்த பல்லவ வம்சம் உன்னோடு முடிவடைந்துவிடக் கூடாது. காஞ்சி சிம்மாசனத்தில் ஏறத் தகுதி பெறுவதற்கு நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். மாமல்லா! பாண்டிய இராஜகுமாரியை மணந்து கொள். நான் கண்ணை மூடுவதற்குள்ளே நீ இல்லறம் மேற்கொண்டு நான் பார்த்து விட வேண்டும். இல்லாவிட்டால் என் மனம் நிம்மதி அடையாது. என் நெஞ்சு வேகாது!'' என்றார் சக்கரவர்த்தி.

மேற்படி மொழிகள் மாமல்லரின் இருதய வேதனையைப் பன்மடங்கு அதிகமாக்கின. அவருடைய நெஞ்சில் ஈட்டியால் குத்தியிருந்தால்கூட அத்தனை துன்பம் உண்டாகியிராது.

சற்று மௌனமாய் நின்றுவிட்டு, ''அப்பா! ஏன் இப்படி என்னைச் சோதனை செய்கிறீர்கள்? என் மன நிலை உங்களுக்குத் தெரியாதா? சிவகாமியின் மேல் நான் அழியாத காதல் கொண்டிருப்பதை அறியீர்களா? ஒரு பெண்ணிடம் மனம் சென்றபிறகு, இன்னொரு பெண்ணை எப்படி மணப்பேன்? அப்படிச் செய்வது மூன்று பேருடைய வாழ்க்கையையும் பாழாக்குவதாகாதா? இத்தகைய காரியத்தைச் செய்யும்படி எனக்குக் கட்டளையிடுகிறீர்களா?'' என்று மாமல்லர் கேட்டார். அவருடைய வார்த்தை ஒவ்வொன்றும் இருதயத்தின் அடிவாரத்திலிருந்து நெஞ்சின் இரத்தம் தோய்ந்து வெளிவந்தது.

மகேந்திர பல்லவர் குமாரனை அன்புடனும் ஆதரவுடனும் தடவிக் கொடுத்தார். பிறகு, கனிவு ததும்பும் குரலில் கூறினார்: ''ஆம், நரசிம்மா! அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யும்படிதான் சொல்கிறேன். அந்தக் காரியத் தன்மையை நன்கு அறிந்து சொல்கிறேன். கேள், மாமல்லா! இந்த உலகத்தில் சாதாரண மனிதர்களுக்குத் தர்மம் வேறு; இராஜகுலத்தில் பிறந்தவர்களுக்குத் தர்மம் வேறு. சாதாரண ஜனங்கள் தங்களுடைய சொந்த சுகதுக்கங்களை உத்தேசித்துக் காரியம் செய்யலாம். ஆனால், இராஜ குலத்தில் பிறந்தவர்கள் அவ்வாறு செய்வதற்கில்லை. தங்கள் சுகதுக்கங்களை அவர்கள் மறந்துவிட வேண்டும். இராஜ்யத்தின் நன்மையைக் கருதியே இராஜ குலத்தினர் தங்கள் சொந்தக் காரியங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். மாமல்லா! யோசித்துப் பார்! சிவகாமியை நீ மணந்துகொள்வது இனிமேல் சாத்தியமா? வாதாபிக்கு நீ படை எடுத்துப் போவது இன்றோ நாளையோ நடக்கக் கூடிய காரியமா? வருஷக் கணக்கில் ஆயத்தம் செய்ய வேண்டியிருக்கும். அப்புறம் யுத்தம் எத்தனை காலம் நடக்குமோ? யார் சொல்ல முடியும்? அத்தனை நாளும் நீ கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பாயா? அதற்குப் பல்லவ நாட்டுப் பிரஜைகள் சம்மதிப்பார்களா?''

மாமல்லர் பெருமூச்சு விட்டார்; சிவகாமியின் மீது அவருக்குச் சொல்ல முடியாத கோபம் வந்தது. அந்தப் பாதகி தன்னுடன் புறப்பட்டு வர மறுத்ததனால்தானே இப்போது இந்தத் தர்மசங்கடம் தனக்கு நேரிட்டிருக்கிறது!

அவருடைய உள்ளப் போக்கை அறிந்து கொண்ட மகேந்திர பல்லவர், ''குமாரா! இராஜ குலத்தினர் தங்களுடைய சுக துக்கங்களைப் பாராமல்



அதுவே எழில் பராமரிப்பு ரகசியம்.

ட்ப்பார்-இண்டர்ப்ரான் லிட்.,
தபால் பெட்டி எண் 6582,
பம்பாய் 400 018

இராஜ்யத்துக்காகவே எல்லாக் காரியங்களும் செய்தாக வேண்டும் என்று உனக்குச் சொன்னேனல்லவா? அதை நானே என் வாழ்க்கையில் அநுசரித்து வந்திருக்கிறேன். இப்போதுகூட இராஜ்யத்தின் நன்மைக்காக ஒரு பயங்கரமான காரியத்தைச் செய்வதற்கு மனம் துணிந்திருந்தேன். அந்தப் பயங்கரமான காரியம் என்ன தெரியுமா?...'' என்று நிறுத்தினார்.

மாமல்லர் ஒன்றும் புரியாதவராய்த் தாயாரையும் தந்தையையும் மாறி மாறிப் பார்த்தார்.

''ஆம், குமாரா! இந்த வயதில் உன் தாயாருக்கு இன்னொரு சக்களத்தியை அளிப்பது என்று தீர்மானித்திருந்தேன். நீ வாதாபியிலிருந்து சிவகாமியை இப்போது அழைத்து வந்திருந்தால், அவளை நானே மணந்து கொள்ளுவது என்று முடிவு செய்திருந்தேன்!....'' என்றதும், மாமல்லர், ''அப்பா!'' என்று அலறினார்.

''மாமல்லா! என்னை மன்னித்துவிடு! இராஜ்யத்தின் நன்மைக்காகவே அந்தப் பயங்கரமான காரியத்தைச் செய்யத் துணிந்திருந்தேன். நீ சிவகாமியை மணக்காமல் தடுக்கும் பொருட்டே அவ்விதம் செய்ய எண்ணினேன். உன் அன்னையிடமும் சொல்லி அநுமதி பெற்றேன். ஆனால், அந்தப் புண்ணியவதி வாதாபியிலிருந்து வர மறுத்து என்னை அந்தப் பயங்கரச் செயலிலிருந்து காப்பாற்றினாள்!''

மாமல்லருடைய மனம் அப்போது வாதாபி மாளிகையில் தன்னந்தனியாக உட்கார்ந்திருக்கும் சிவகாமியிடம் சென்றது. ஆ! அவள் தம்முடன் புறப்பட்டு வர மறுத்தது எவ்வளவு நல்லதாயிற்று?

''குமாரா! இப்போது யோசித்துப் பார்! இராஜ்யத்தின் நன்மைக்காக நான் செய்யத் துணிந்ததைக் காட்டிலும் உன்னைச் செய்யும்படி கேட்பது பெரிய காரியமா? பாண்டிய குமாரியை மணப்பதனால் பல்லவ இராஜ்யத்துக்கு எவ்வளவு பலம் ஏற்படும் என்று சிந்தனை செய். நீ செய்வதற்குரிய மகத்தான பிரம்மாண்டமான காரியங்கள் இருக்கின்றன. வாதாபிக்குப் படையெடுத்துச் சென்று சளுக்கப் பூண்டை அடியோடு அழித்து வருவதென்பது சாமான்யமான காரியமா? அதற்கு எத்தனை துணைப் பலம் வேண்டும்? தென்னாட்டில் உள்ள எல்லா மன்னர்களும் சேர்ந்து பிரயத்தனம் செய்தாலொழிய அது சாத்தியப்படுமா? தெற்கே ஒரு சத்துருவை



வைத்துக் கொண்டுதான் வடக்கே படையெடுத்துச் செல்ல முடியுமா? நரசிம்மா! எந்த வழியில் பார்த்தாலும் பாண்டிய ராஜகுமாரியை நீ மணப்பது மிகவும் அவசியமாகிறது'' என்று இவ்விதம் இடைவிடாமல் பேசிய காரணத்தினால் மகேந்திர பல்லவர் பெருமூச்சு வாங்கினார். அவருடைய கஷ்டத்தைப் பார்த்த புவன மகாதேவி, ''பிரபு! இவ்வளவு நேரம் பேசலாமா? வைத்தியர் அதிகம் பேசக் கூடாது என்று கட்டளையிட்டிருக்கிறாரே?'' என்று சொல்லிவிட்டு, மாமல்லரைப் பார்த்து, ''குழந்தாய்! உன் தந்தையை...'' என்றாள். அன்னை மேலே பேசுவதற்கு மாமல்லர் இடம் கொடுக்கவில்லை.

''அப்பா! தாங்கள் அதிகமாகப் பேச வேண்டாம். பாண்டிய குமாரியை நான் மணந்து கொள்கிறேன்!'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னார்.

மகேந்திர சக்கரவர்த்தியின் முகம் மலர்ந்தது. புவன மகாதேவியோ தன் கண்களில் துளித்த கண்ணீரை மறைக்க வேறு பக்கம் திரும்பினாள்.

மகேந்திர பல்லவர் சமிக்ஞை காட்டியதும் தளபதி பரஞ்சோதியும் மற்ற மந்திரிபிரதானிகளும் அருகில் வந்தார்கள்.

''தலைவர்களே! அதிக நேரம் உங்களைக் காக்க வைத்து விட்டேன். அவ்வளவுக்கவ்வளவு உங்களுக்குக் குதூகலம் தரும் செய்தியைத் தெரிவிக்கப் போகிறேன். குமார சக்கரவர்த்திக்கும் பாண்டிய ராஜகுமாரிக்கும் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது. அதே பந்தலில் அதே முகூர்த்தத்தில் சேனாதிபதி பரஞ்சோதிக்கும் திருமணம் நடைபெறுகிறது!'' என்று மகேந்திர பல்லவர் கூறியதும், கேட்டவர்கள் அவ்வளவு பேரும் ஒரே குரலாக, ''வீர மாமல்லர் வாழ்க! சேனாதிபதி பரஞ்சோதி வாழ்க!'' என்று கோஷித்தார்கள்.

(தொடரும்)

முத்தான முத்து!

''நல்ல பெண் இல்லே, சீக்கிரம் தொட்டிலில் படுத்துத் தூங்கம்மா!''

''மாட்டேன்'' என்பதற்கு அடையாளமாகக் குழந்தை தலையை அசைத்தது. பூப்போன்ற கைகளால் சத்தம் எழாத வாறு கைகொட்டி, கன்னங் குழியச் சிரித்தது. ''தா....தூ....தா'',''தா...தூ....தூ....'' என்று மழலை ஆடியது. தத்தக்கப் பித்தக்க என்று தளர்நடை நடந்தது. சிறிது தூரம் போய்த் தொபுகடீரென்று கீழே உட்கார்ந்தது.

''போக்கிரிக் குட்டி, தூங்கமாட்டாளாம்! தலையை ஆட்டுவதைப் பாருங்களேன்!'' என்றாள் கமலா.

''கண்ணூ! நீ தொட்டிலிலே படுத்துக் கொள்வாயாம். அப்பா ஆட்டுவேனும்! நீ ஜோராய்த் தூங்கிடுவாயாம்! காலையிலே கா கான்னு காக்கா கத்தும்போது முழிப்பாயாம்!'' என்று சொல்லி குழந்தை கண்மணியைத் தூக்கித் தொட்டி லில் இடப்போனான் ராஜ். 'ஓ'வென அலறினாள் குழந்தை.

''ஒரே புழுக்கமா, கசகசன்னு இருக்கு! பட்டுச் சட்டையைக் கழற்றிவிட்டு, மேலுக்குக் கொஞ்சம் பவுடர் அடித்துவிடுகிறேன். அப்புறம் தொட்டிலில் போட்டு ஆட்டுங்கள்! தூங்கிவிடுவாள்!'' என்றாள் கமலா.

''குழந்தையின் சட்டையைக் கழற்றிவிடலாம்! குழந்தையோட அம்மாகூட புனைந்த துகில் சற்றே புறம்போகச் செய்திடலாம்!'' என்று ராகமிழுத்தவாறு கண்களைச் சிமிட்டினான் ராஜ். நாணம் கமலாவின் முகத்துக்குச் செஞ்சாயம் பூசியது.

''வெட்கமாயில்லே இப்படிப் பேசுவதற்கு!'' எனப் பொய்க் கோபம் காட்டிச் சிணுங்கினாள் கமலா.

''கமலாக் கண்ணுகிட்டே இந்த ராஜ் ஸார் ஏன் வெட்கப்படணுமாம்!'' என்றான் ராஜ்.

''இன்னைக்கு என்ன வந்து விட்டது உங்களுக்கு? நானும் காலையிலிருந்து பார்த்துக்கொண்டே இருக்கிறேன்...'' என முனகினாள் கமலா. அன்று காலை முதலே கன குஷியாகத்தான் இருந்தான் ராஜ்.

அன்று குழந்தை கண்மணியின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாநாள். பிறந்த தின விழாவுக்கு வருமாறு தனது பெற்றோர்களுக்கும், கமலாவின் பெற்றோர்களுக்கும்கடிதம் எழுதி யிருந்தான் ராஜ். தூரத்து ஊர்களில் இருந்த அவர்கள் இந்தச் சிரமமான காலத்தில், குழந்தையின் இரண்டாவது பிறந்த நாளுக்கு என்று வீணுகச் செலவு செய்து கொண்டு வருவா னேன்,அந்தப் பணத்தைக் குழந்தைக்கு நல்ல டிரஸ்கள் தைக்கவும், கோவிலுக்குச் செய்யவும் வைத்துக் கொள்ளுங்கள் என்று ரூபாயை அனுப்பி விட்டார்கள். எனவே, தனது நண்பன் ராகவனையும், அவன் மனைவி சந்திராவையும் அழைத்துக்கொண்டு கமலாவுடனும் குழந்தையுடனும் கோவிலுக்குப் போய்க் குழந்தை பெயருக்கு அர்ச்சனை செய்து, சுவாமிதரிசனம் செய்து திரும்பினான். கோவிலில் சந்திரா, ''ஆசைக்கு ஒரு பெண் பிறந்து இரண்டு வருஷங்கள் ஆச்சு. இனி ஆஸ்திக்கு ஓர் ஆண் எப்போ கமலா?'' எனக் கேட்டுச் சிரித்தாள்.

''இங்கே தொலையாத ஆஸ்தி,குபேர சம்பத்து இருக்கு! அதைஆள வாரிசு இல்லாததுதான் குறை!'' என்றாள் கமலா.

''என்ன இருந்தாலும் ஓர் ஆண் குழந்தையைப்போல் ஆகுமா? பெண் நாளைக்கு அடுத்த வீட்டுக்குப் போகிற வள்தானே!'' என்றாள் சந்திரா. தொடர்ந்து உங்களுக்கு என்ன குறைச்சல்? வீட்டுக்காரர் மாதந்தோறும் ஆயிரக் கணக்கில் சம்பாதிக்கிறார்!'' என்றாள்.

''பெண், ஆண் என்று வித்தியாசம் பார்ப்பது அக் காலம். இக் காலத்திலே பெண் குழந்தையும் ஆண் குழந்தை மாதிரி உதவும். அடுத்த வீட்டுக்குப் போனால் என்ன? அடிக்கடி நம் வீட்டுக்கு வந்து விட்டுப் போகிறாள் என்றாள் கமலா.



பொன்னியின் புதல்வர்

சுந்தா

இல்லறத்தைப் போல்
தொழிலறமும் சிலருக்கு
இணையான மணப் பூட்டாம்

37. இலக்கிய விவாகம்

அய்யாப் பிள்ளைக்குக் கல்யாணம்
அவரவர் வீட்டில் சாப்பாடு
கொட்டு மேளம் கோவிலிலே
பாக்கு வெற்றிலை கடையிலே.

இந்தக் குழந்தைப் பாடலைக் கல்கி சொல்லி, இதன்படியே நடந்த எளிய கல்யாணம் ஒன்றை வர்ணித்திருக்கிறார்.

சின்னப் பந்தல்; அதன் கால்களில் கட்டிய வாழைகள் மட்டுமே அதற்கு அலங்காரம். சின்னப் பந்தலுக்கு ஏற்ற சின்ன மணமேடை; அதன் நாலு மூலைகளிலும் அடுக்கிய கோலப் பானைகளே அதற்கு அலங்காரம்.

ஊர்வலம் கிடையாது; வாண வேடிக்கை கிடையாது; கொட்டு மேளம் கூடக் கிடையாது; அதற்குப் பதிலாய் பகவத் பஜனை.

மணமேடையில் அமர்வதற்கு முன்னால், பெண்ணும் மாப்பிள்ளையும் முறைப்படி மாலை மாற்றிக் கொண்டார்கள். ஆனால் மாற்றிக் கொண்டது பூமாலை அல்ல; வெறும் நூல் மாலை.

விவாக முகூர்த்தத்தின்போது பெண் வீட்டுப் புரோகிதர்கள் என்றும் பிள்ளை வீட்டுப் புரோகிதர்கள் என்றும் மேடை மீது இட நெரிசல் கிடையாது. லக்ஷ்மண சாஸ்திரியார் என்ற ஒரு புரோகிதர் மட்டுமே மணச் சடங்கை வேத முறைப்படி நடத்தி வைத்தார்.

இவ்வளவு எளிதாய் நடந்த அந்தக் கல்யாணத்தைப் பார்ப்பதற்காக ஆயிரம் மைல் பிரயாணம் செய்தார் கல்கி. ஐயாயிரம் மைல்கூடப் பிரயாணம் செய்திருப்பார். ஏனெனில் அவருடைய ''அண்ணா'' ராஜாஜியின் குமாரி லக்ஷ்மிக்கும் மகாத்மாவின் மகன் தேவதாஸ் காந்திக்கும் நடந்த கல்யாணம் அது. ''குழந்தைப் பிராயத்திலேயே தாயை இழந்தமையால் தாமே எடுத்து வளர்த்த புதல்வியை, இத்தனை காலமும் தமது வாழ்க்கையின் ஒளியாக விளங்கி வந்த லக்ஷ்மியை, ஸ்ரீ ஆச்சாரியார் தேவதாஸின் கரத்தில் அளித்த'' காட்சியைக் காண்பதற்காக எவ்வளவு தூரம்தான் அவர் பிரயாணம் செய்திருக்க மாட்டார்?

கல்யாணம் நடந்த இடம் பூனா நகருக்கு அருகே பர்ணகுடியை அடுத்த தோட்டம்; நடந்த தேதி 1933 ஜூன்

★ ''ஆனந்த விகடனின் இலக்கியத் தரம் அப்படியே ஒரே சீராய் இருக்கிறது எனத் தாங்கள் கருதுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆயினும் பரிசுப் போட்டிகளை நினைத்து வேதனைப் பட்டுக் கொண்டே இருக்கிறேன்:''

★ மாமனாரும் மருமகளும் : காந்திஜிக்கு வலப்புறத்தில் ஸ்ரீமதி லக்ஷ்மி தேவதாஸ் காந்தி. இடதுபுறம் ராஜாஜியின் மூத்த புதல்வி ஸ்ரீமதி நாமகிரி.









★ மாமனாரும் மாப்பிள்ளையும்: வலது கோடியிலிருந்து மேலாக இரண்டாவதாக ஸ்ரீ தேவதாஸ் காந்தி. மேல் வரிசையில் மையத்தில் ஸ்ரீமதி லக்ஷ்மி தேவதாஸ் காந்தி.

★ ஸ்ரீ தேவதாஸ் காந்தி, மகள் தாரா, மனைவி ஸ்ரீமதி லக்ஷ்மி தேவதாஸ் காந்தி.

16. அப்போது தான் நெடியதோர் உண்ணாவிரதம் முடிந்து, சற்றே தேறிக்கொண்டிருந்த அண்ணல் காந்தி, ஒரு கட்டிலில் சயனித்தபடியே, விவாக வைபவத்தில் கலந்து கொண்டார். தம்மை வணங்கிய மணமக்களை அவர், முதுகில் தட்டிக் கொடுத்து வாழ்த்தினார். தாமே நூற்ற நூல் மாலை, ஒரு தேங்காய், பகவத்கீதை, பஜனாவளி புத்தகங்கள் — இவைகளே அவர் அளித்த பரிசுகள்.

மிக எளிதாய் நடந்த அந்தக் கல்யாணத்தை அரிய பெரிய செய்தியாக இந்தியப் பத்திரிகைகளும், ஆங்கில, அமெரிக்கப் பத்திரிகைகளும் வெளியிட்டன. ஜாதி வேற்றுமை, மொழி வேற்றுமை, வடக்கு — தெற்கு வேற்றுமை முதலியவற்றைத் தகர்த்த சீர்திருத்த மணம் என்றும், இரு பெரும் தேசியத் தலைவர்களின் மக்கள் இணைந்த அரசியல் திருமணம் என்றும், அவை வெவ்வேறு விதமாய் அவை வர்ணித்து எழுதின. அந்தக் கல்யாணத்தை ஒரு பொது விஷயமாக ஆக்கக்கூடாது என்ற கருத்துடன் மகாத்மா காந்தி, செய்தி நிருபர்கள் யாரும் மண விழாவுக்கு வரக் கூடாது என்று சொல்லி யிருந்தார். ஆயினும் பல நிருபர்கள் அவருடைய விருப்பத்துக்கு மாறாக வந்து, எட்ட நின்று பார்த்தும், கேள்விப்பட்டதைக் கொண்டும், ''செய்திக் கதைகள்'' புனைந்து, தத்தம் பத்திரிகைகளுக்கு அனுப்பத் தான் செய்தார்கள். கல்கி ஒருவர் தான் உடன் இருந்த ''நிருபர்''. பெண் வீட்டாரில் ஒருவர் என்ற காரணத்தால் அவருக்கு அந்த நிருபர் பதவி மறைமுகமாய்க் கிடைத்தது. அந்தப் பதவியுடன் அவர் நேர்முகமாய் எழுதிய செய்திக் கட்டுரை, ''காந்தி மகன் கல்யாணம்'' என்ற தலைப்புடன், அடுத்த மாதம் முதல் தேதிய ஆனந்த விகடன் இதழில் வெளிவந்தது. ''மணமக்களுக்குள்ள பொருத்தம், விவாகம் நிச்சயிக்கப்பட்ட முறை, கல்யாணம் நடந்த விதம் — இவையெல்லாம் இந்த விவாகத்தை ஓர் இலக்கிய விவாகமாகச் செய்கின்றன என்பது என் கருத்து'' என்று அதில் அவர் கூறினார். எட்டுப் பக்கங்கள் கொண்ட அந்தக் கட்டுரையும் ஓர் இலக்கியக் கட்டுரை என்பது இந்நூலாசிரியனின் கருத்து.

அதிலிருந்து சில பகுதிகளைப் பார்ப்போம்:

★ ''இரண்டு பெண்டாட்டிக்காரர்கள்!'' ஸ்ரீ தேவதாஸ் காந்தியும், ''கல்கி''யும்.



மணமக்கள் ஒருவருக்கொருவர் எல்லா விதத்திலும் பொருத்தமானவர்கள். மணமகன் ஒப்பற்ற பாரதத் தலைவரின் புதல்வர்; மணமகள் அத்தலைவரின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான தென்னாட்டுத் தலைவரின் புதல்வி. இருவரும் குழந்தைப் பருவத்திலிருந்து சுக போகங்களை வெறுத்துத் தியாக வாழ்க்கை நடத்துவதற்கென்றே பெற்றோரால் பயிற்சி செய்யப்பட்டவர்கள். இருவரும் பள்ளிக்கூடம் போனது கிடையாது; ஆனால் கல்வியின் பயனைப் பூரணமாய் அடைந்தவர்கள். உயர்ந்த கலை ஞானங்களை அனுபவிக்கவும், உண்மை தேசத் தொண்டு செய்யவும் தக்க கல்வி, அவர்களிடம் உள்ளதை விட அதிகமாக எனக்குத் தெரிந்த யாரிடமும் நான் பார்த்ததில்லை...

கல்யாணத்தில் முக்கிய பாத்திரங்களான மணமகனையும் மணமகளையும் கேளாமல், அவர்கள் சம்மதம் கொடுப்பதற்குரிய பருவம் வரும் முன்னே, மற்றவர்களால் பிணைத்து வைக்கப்படும் பொம்மைக் கல்யாணம் அன்று இது. க்ஷண நேரத்து மோகத்தில் ஆழ்ந்து தக்க யோசனையின்றியும், பெரியோர்களைக் கலந்து கொள்ளாமலும் விவாகம் செய்து கொண்டு, மூன்று நாளைக்கெல்லாம் தவறு செய்து விட்டோம் என்பதை உணர்ந்து தவிக்கும் 'நாகரிக' மணமும் அன்று இது. மணமக்களின் பரஸ்பர விருப்பமின்றி இக்கல்யாணப் பேச்சே எழுந்திராது. ஆனால் பெற்றோர்களில் ஒருவர் சம்மதம் கொடுத்திரா விட்டாலும் கல்யாணம் நடைபெற்றிராது; தேவதாஸ் பிரம்மச்சாரியாகவும், லக்ஷ்மி கன்னிகையாகவும் இருந்திருப்பார்கள். கல்யாணத்தின்போது மகாத்மா தேவதாஸைப் பார்த்து, ''நீங்கள் இருவருமே எல்லா முடிவும் செய்து கொண்டீர்கள்; எனக்கும் ராஜாஜிக்கும் ஒரு வேலையும் வைக்கவில்லை'' என்று பரிகாசமாகச் சொன்னதாக ஒரு பத்திரிகை நிருபர் தெரிவித்திருந்தார். இந்தக் கற்பனை நாவல்களுக்குப் பொருத்தமாய் இருக்கலாம். ஆனால் நடந்ததற்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.

பின்னர் நடந்தது என்ன? இந்தக் கல்யாணம் கூடாதென்று காந்திஜி தடை செய்யவும் இல்லை; உடனே ''சரி'' என்று சம்மதம் கொடுக்கவும் இல்லை. முட்டுக்கட்டைகள் மட்டும் கொஞ்சம் பலமாகவே போட்டார். ஐந்து வருஷப் பரீட்சையும் பல நிபந்தனைகளும் ஏற்படுத்தினார். அவ்வளவு காலமும் அவர்கள் ஒருவருக்கொருவர் கடிதம் கூட எழுதாமலிருந்து, பின்னரும் இதே உறுதியுடனிருந்தால் கல்யாணத்துக்குச் சம்மதம் தருவதாகக் கூறினார். இல்வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றிக் காந்தியடிகளின் கொள்கைகளை அறிந்தவர்கள் அவர் இத்தகைய சோதனைகள் ஏற்படுத்தியது பற்றி ஆச்சரியப்பட மாட்டார்கள்.

ஐந்து வருஷமும் சென்றது. லக்ஷ்மியும் தேவதாஸும் பரீட்சையில் தேறினார்கள். ஆனால் அப்போது அவர்கள் கண்டதென்ன? காந்திஜியின் பரீட்சை போதாதென்று, பகவானே ஏற்படுத்திய சோதனையைத்தான்! மகாத்மா இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்ததும் ஏரவாடா சிறைக் கதவு தயாராய்த் திறந்து வைக்கப் பட்டிருந்தது. யதாஸ்தானத்துக்கு எழுந்தருளினார். சில நாளைக்கெல்லாம் ராஜாஜியும் சிறை புகுந்தார். பிறகு ஸ்ரீமதி கஸ்தூரி பா சிறை சென்றார். பின்னர் தேவதாஸும் அரண்மனை விருந்தாளியானார். லக்ஷ்மி மட்டும் நோயாளியான தன் சகோதரிக்குப் பணிவிடை செய்து கொண்டு வெளியில் இருக்க நேர்ந்தது.

''குழந்தைகளுக்கு விதிக்கப்பெற்ற நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றிவிட்டார்கள். அவர்களுக்கு மணம் செய்து வைக்க வேண்டிய பொறுப்பை நாம் நிறைவேற்றக்கூடவில்லையே?'' என்ற கவலை பெற்றோர்களுக்கு இருந்தது இயல்பேயல்லவா? இங்ஙனமாக, யாரும் எதிர்பாராத காரணங்களினால் சென்ற ஜூன் மாதத்தில், மகாத்மா, கஸ்தூரி பா, ராஜாஜி, தேவதாஸ் ஆகியவர்கள் சிறைக்கு வெளியில் இருக்க நேரவே, மகாத்மா இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விடாமல் கல்யாணத்தை நடத்திவிட வேண்டும் என்று தீர்மானித்தார்.


''ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்'' -என்னும் முதுமொழிக்கு உதாரணமாய் நேர்ந்த விவாகம் இது. மகாத்மா தமது உபவாசத்தின் முதற் பலன்களில் ஒன்றாக இதைக் குறிப்பிட்டார். ''எனது அன்புக்கு உரியவர்கள் எல்லாருடைய நன்மையையும் கருதி நான் தவம் புரிந்தேன். அதன் பலனை முதலில் நீங்கள் அநுபவிக்கிறீர்கள்'' என்றார். மகாத்மாவின் அன்பு மாந்தர் அனைவரையும் தழுவி நிற்பது. ஆனால் அவரிடம் அன்பு கொண்டவர்களில் இந்த மணமக்களை மிஞ்சியவர்கள் யார்?...

ஸ்ரீ தேவதாஸுக்கு வந்த வாழ்த்துக் கடிதங்கள், தந்திகள் எல்லாவற்றையும் நான் பார்க்க நேர்ந்தது. அவர் 'காதும் காதும் வைத்தது போல்' நடத்த விரும்பிய விஷயம் ஏற்கனவே பத்திரிகைகளில் பகிரங்கப்படுத்தப் பெற்றுவிட்டபடியால், அருகிலிருந்து நேரில் எல்லாவற்றையும் பார்த்த எனக்கும் எழுத அநுமதி கேட்டுப் பெற்றுக் கொண்டேன். கல்யாணத்தன்றும் மறுநாளும் அரை மணிக்கு ஒரு முறை தந்திச் சேவகன் பர்ண குடிக்கு வந்து ஒரு கட்டுத் தந்திகளைக் கொடுத்துப் போனான். தலைவர்கள், சிநேகிதர்கள், சீர்திருத்த நோக்கம் கொண்ட சபைகள் முதலியோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. இடமின்மையால் அவைகளையெல்லாம் இங்கு உபயோகப்படுத்த இயலாமைக்கு வருந்துகிறேன். இந்திய ஊழியர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீமான் ஜி.கே. தேவதார், பம்பாய் ஆஸ்பத்திரியில் நோய்ப் படுக்கையிலிருந்து அனுப்பிய செய்தியை மட்டும் இங்கே குறிப்பிட்டு முடிக்கிறேன்:

''இரண்டு உத்தம ஆத்மாக்கள் ஒன்று சேர்வதினால் எப்போதும் நற்பலன்களே விளையும். இந்தக் கல்யாணத்தினால் ஒன்றுபடப் போகிற உத்தம ஆத்மாக்கள் இருவருமோ, தற்சமயம் நமது நாட்டில் உள்ள இரண்டு உத்தமோத்தம ஆத்மாக்களின் குழந்தைகள். அத்தகைய உங்களை வாழ்த்துகிறேன்.''


கைத்தறி வாரம்

மார்ச் 29 முதல்
ஏப்ரல் 14 வரை



தள்ளுபடி

அகில இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட பட்டு மற்றும் நூல் புடவைகள், கண் கவர்பவை. வாஷ்-அண்டு-வேர் புடவைகள். சீர்-சக்கர், காஜ்ரக், உ.பி. ரகத்தில் தயாரான மாக்ஸி மற்ற ரெடிமேட் ஆடைகள் உள்ளன.



எழும்பூர் பொருட்காட்சி
ஹேண்ட்லூம் ஹவுஸ்
அரங்கத்துக்கு வாருங்கள்.

ஹேண்ட்லூம் ஹவுஸ்

9, ரத்தன் பஜார்,
சென்னை 600003

ADWAVE/HH/27/TAM


கோடையில்—
சாதாரணமான சருமம்...
வாடிவிடும் வியர்க்குருவினால்..
Glaxo
nycil
PRICKLY HEAT
POWDER
SOOTHES AND
PROTECTS THE SKIN
நைஸில்*
கிளாக்ஸோ தயாரிப்பு
*டிரேடு மார்க்
காலையிலே குளித்தபின்...
மேனிமீது தூவித் தெளிப்பீர்
நைஸில் பவுடரை
வேர்க்குரு என்றால்
வீசை என்ன விலை
என்று கேட்பீர்கள்!
அபரிமிதமான வியர்வையினால் சருமத் துவாரங்கள் அடைபடும் போது, யாரும் வியர்க்குருவினால் அவதிப் படுவார்கள் என மருத்துவ ஆராய்ச்சிகள் காட்டுகின்றன, எரிச்சலும் அரிப்பும் ஏற்படுகின்றன; சருமம் பாதிக்கப் படுகிறது. இதனை எதிர்த்துப் போராடும் குளோர் பென்னின் மற்றும் போரிக் பவுடர் அடங்கியது நைஸிலில் 'ப்ளூ' ஒன்றுதான்-அதோடு உங்கள் சருமத்திற்குப் பாதுகாப்புத் தரும் ஸிங்க் ஆக்ஸைடும் அதில் அடங்கியுள்ளது.
SISTA'S-GN-410-TAM B

அந்தத் திருமணத்துக்குச் சுமார் நாலு ஆண்டுகளுக்குப் பிறகு, காந்திஜி ராஜாஜி ஆகியோருடன் ரயில் பிரயாணம் செய்யும் வாய்ப்பும், அவர்களுடன் தேவதாஸ் காந்தி தம்பதியரின் இல்லத்தில் தங்கி யிருக்கும் வாய்ப்பும் கல்கிக்குக் கிடைத்தன.

ஆனந்திக்குக் கல்கி கடிதம் டெல்லி 15—3—37:

இரண்டு நாள் ரயில் பிரயாணம் செய்து விட்டு, இன்று காலையில் டில்லிக்கு வந்து சேர்ந்தேன். வழியில் வர்தாவில், அண்ணாவும் காந்தித் தாத்தாவும் ரயிலில் வந்து ஏறினார்கள். காந்தித் தாத்தாவுக்கு நேற்று மௌன விரதம். அதாவது யாரோடும் பேச மாட்டார். வாரத்துக்கு ஒரு நாள் அவர் அப்படி மௌன விரதம் இருக்கிறார். நீகூட ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் யாரோடும் பேசாமல் மௌனமா யிருந்தால் ரொம்ப நல்லது.

நான் இங்கு, ஸ்ரீ தேவதாஸ் காந்தியும் லக்ஷ்மி அக்காவும் இருக்கிற வீட்டில் தங்கி இருக்கிறேன். காந்திஜியும் அண்ணாவும்கூட இந்த வீட்டிலேயேதான் இருக்கிறார்கள். இன்று இங்கே காரியக் கமிட்டியின் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

நீ அம்மாவைத் தொந்தரவுபடுத்தாமல் சமர்த்தாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், நான் அங்கே வந்ததும், உன்னுடன் பேசாமல், மௌனவிரதம் எடுத்துக் கொண்டு விடுவேன்!

(இந்தக் கடிதத்துக்குரிய ஆனந்திக்கு அப்பொழுது வயது நான்கு. அவ்வளவு சிறு குழந்தைக்கும் படிக்கத் தெரியுமா, என்ன? இதற்கு விடையை இத்தொடரில் பின்னால் வரும், ''நீலகிரி'' என்ற அத்தியாயத்தில் காணலாம்.)

தேவதாஸ் காந்தி அதற்குச் சிறிது காலத்துக்கு முன்னர்தான் ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்'' என்னும் தினப் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் பொறுப்பை ஏற்றிருந்தார். அதே பதவியை அவர் இறுதிவரை வகித்திருந்தார்.

1947 ஏப்ரல் மாதத்தில், அகில இந்தியப் பத்திரிகாசிரியர் மகாநாட்டின் ஆறுவது ஆண்டுக் கூட்டம் சென்னையில் நடந்தபோது, அதற்கு தேவதாஸ் காந்தி தலைமை வகித்தார். அவரைக் கல்கி, வரவேற்புக் குழுவில் ஒருவர் என்ற தோரணையில் விமான நிலையத்தில் எதிர் கொண்டு அழைத்தார். மகாநாட்டின் தொடக்கத்தில் மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேச, கல்கி மட்டும் தமிழிலேயே பாராட்டுரை நிகழ்த்தினார். ''பத்திரிகாசிரியர்களில் பெரிய ஆசிரியர் காந்தி மகன் காந்தி'' என்பது அப்போது அவர் சொன்ன வாக்கியங்களில் ஒன்று. மகாநாட்டின் இறுதியில் கல்கி, காந்தி மகன் காந்திக்குத் தமது அலுவலகத்தில் விருந்தளித்தார். அதில் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

உச்சரிப்பு பற்றி நச்சரிப்பு!



காலஞ்சென்ற நாவலாசிரியர் **wodehouse** பெயரை 'உட்ஹவுஸ்' **woodhouse** என்றுதான் உச்சரிக்க வேண்டும்.

உமன் - கே. ஆர்.

''பேனா மன்னர்கள்'' என்ற தலைப்புடன் அந்த மகாநாட்டைப் பற்றித் தொடர்ந்தாற்போல் மூன்று கல்கி இதழ்களில், அதன் ஆசிரியர் விவரக் கட்டுரை ஒன்றை எழுதினார். ஏப்ரல் 27ம் தேதிய இதழில் வெளியான அதன் முதல் பாகத்திலிருந்து சுவையான பகுதி ஒன்றைப் பார்ப்போம்:

காந்தி மகாத்மா காந்தி மகாத்மாதான் : என்றாலும் தம் வாழ்க்கைத் துணைவியை நடத்தும் விதத்தில் மகாத்மா அவ்வளவாகச் சிறந்து விளங்கினார் என்று சொல்ல முடியாது. அன்னை கஸ்தூரிபா தெய்வத்தை மகாத்மா சில சமயங்களில் படாதபாடெல்லாம் படுத்தி வைத்தார் என்பதை அவருடைய சுய சரிதத்தில் படித்திருக்கிறோம் அல்லவா ?

எனவே இந்த ஒரு துறையில் ஸ்ரீ தேவதாஸ் தமது மாபெரும் தந்தையைக் காட்டிலும் நிச்சயம் சிறந்து விளங்குவார் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டிருந்தது.

ஆனால் என்ன அதிசயத்தைச் சொல்ல ? தமிழ் நாட்டின் புதல்வியை மணந்துகொண்ட சில வருஷங்களுக்கெல்லாம், ஸ்ரீ தேவதாஸ் மறுமணம் செய்து கொள்ளப் போகிறார் என்ற செய்தியைக் கேட்டுத் திகைத்துப் போனேன். சீக்கிரத்திலேயே அது உண்மையாகவும் நடந்துவிட்டது. ஸ்ரீ தேவதாஸ் புது டில்லி நகரில், ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்'' என்னும் தினப் பத்திரிகையை மணம் புரிந்து கொண்டார் !.....

எனினும், பிற்பாடு புது டில்லிக்கு நான் போக நேர்ந்த சமயங்களில், மேற்படி சம்பவத்தைப் பற்றி ஸ்ரீமதி லக்ஷ்மி தேவதாஸ் அதிகமாய்க் கவலைப்படவில்லை யென்றும், குதூகலமே அடைந்திருக்கிறார் என்றும் தெரிந்து கொண்டேன். பின்னர், நமக்கென்ன வந்தது என்று கவலைப்படுவதை விட்டுவிட்டேன். அது மட்டும் அல்லாமல், ''நம்முடைய தொழிலுக்கு ஸ்ரீ தேவதாஸ் வந்துவிட்டாரல்லவா ?'' என்று மகிழ்ச்சியும் அடைந்தேன். அந்தத் தொழிலில் அவர் மேலும் மேலும் அடைந்து வந்த வெற்றியைப் பற்றி அறிந்த போது என்னுடைய மகிழ்ச்சியும் அதிகமாகி வந்தது.

பத்திரிகையைக் ''கல்யாணம் செய்து கொண்டார்'' என்று மேலே குறிப்பிட்டேன் அல்லவா ? அதில் என்ன பொருத்தம் இருக்கிறது என்று நேயர்கள் சிலர் கருதக் கூடும். பொருத்தம் ஓரளவு இருக்கத்தான்

செய்கிறது. ஒரு குடும்பத்தை நடத்துவதற்கு வேண்டிய பொறுமையைப் போல் பத்து மடங்கு பொறுமை ஒரு பத்திரிகையை நடத்துவதற்கு வேண்டும். கோபம் வரும்போது சாந்தமாக இருப்பதாகவும், சாந்தமாயிருக்கும்போது கோபம் வந்தது போலும் பாசாங்கு செய்யத் தெரிய வேண்டும். கஷ்டம் வரும்போது நண்பர்கள் எல்லாராலும் கைவிடப்படுவதற்குச் சித்தமாயிருக்க வேண்டும். குடும்பத்துக்குள்ளே எத்தனையோ சண்டை சச்சரவுகளைத் தீர்க்கத் தெரியவேண்டும்; அவசியமான சமயங்களில் தனிக் குடித்தனம் அனுப்பவும் தெரிய வேண்டும்!

இதை எழுதிய கல்கிக்கே இது பெரும் அளவில் பொருந்தும். ஒரு மணப் பூட்டாகப் பத்திரிகை இருந்தது என்பதோ முற்றிலும் பொருந்துவதாய் இருந்தது.

ஆனந்த விகடனில் சேர்ந்தபோது கல்கியின் சம்பளம் நூறு ரூபாய்; சுமார் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு அவர் விலகியபோது, நானூற்று இருபத்தைந்து ரூபாய். அந்தக் காலத்துப் பண மதிப்பின்படி, ஆரம்பச் சம்பளமும் சம்பள உயர்வுகளும் மிகச் சிறப்பானவை. சம்பளம் தவிர, பிரயாணச் செலவுகள், படிகள் முதலியவற்றையும் தாராளமாகவே வாசன் கொடுத்தார். கல்கியின் தனி உபயோகத்துக்கென ஒரு காரும் கொடுத்திருந்தார் — முதலில் ஒரு ஃபோர்டு, பின்னர் ஹன்ஸா என்ற ஜெர்மன் கார்.

கல்கிக்குக் கிடைத்த ஊதியம் அதிகம் தான்; ஆனால் அவருடைய உழைப்பின் பெறுமானம் அதைவிட அதிகமானது. சம்பளத்துக்காக மட்டும் என்றால், அவர் உழைத்ததில் நாலில் ஒரு பங்கு போதுமானதாய் இருந்திருக்கும். அதிலேயே அவர் வாங்கிய சம்பளம் ஜீரணம் ஆகியிருக்கும்; அதைக் கொடுத்த முதலாளியும் திருப்தி அடைந்திருப்பார்.

ஜீவன உபாயமாகத்தான் சம்பளத்தைக் கல்கி கொண்டாரே யன்றி ஜீவ இலட்சியமாக அல்ல. தேசிய இயக்கத்துக்கும் சமூக சீர்திருத்தங்களுக்கும் உதவியாகப் பிரசாரம் செய்வது, இலக்கியப் பணி செய்வது — இவை இரண்டையும்தாம் அவர் இலட்சியங்களாகக் கொண்டிருந்து, அவற்றை ஈடேற்றுவதற்காக ஓய்வு ஒழிவின்றி ஆவேசத்துடன் உழைத்தார். கல்கியாக எட்டுப் பக்கம் கதை, ரா. கி.யாக ஆறு பக்கம் கட்டுரை, கர்நாடகமாக நாலைந்து பக்கம் ஆடல் பாடல் விமரிசனம், பெயரில்லாமல் நாலிலிருந்து எட்டுப் பக்கம் வரை தலையங்கம் — ஒவ்வொரு இதழிலும் கிட்டத்தட்ட இந்தக் கணக்கில் அவர் எழுதிக் குவித்தார். கடிகாரத்துடனும் அச்சு எந்திரத்துடனும் பந்தயம் போட்டுக் கொண்டு எழுதினார். எழுத்தை அவர் ஆண்டாரா, அல்லது அவரை எழுத்து ஆண்டதா?

இதழுக்கு இதழ் அவருடைய எழுத்தில் வலிவும், வனப்பும் கூடிக்கொண்டே இருந்தன; அவருடைய வாசகர் தொகையும், அவர்களிடையே அவருடைய செல்வாக்கும் பெருகிக் கொண்டே யிருந்தன. அதைக் கண்டு அவர் மகிழ்ச்சியும் ஊக்கமும் கொண்டார்; ஆயினும் அவை கலப்பற்றதாய் இருக்கவில்லை; மகிழ்ச்சியினூடே வேதனையும், ஊக்கத்தினூடே சோர்வும் உண்டாயின. எதனால் அப்படி என்பது அப்போது மீண்டும் சிறையிலிருந்த ராஜாஜிக்குக் கல்கி ஆங்கிலத்தில்எழுதிய இரண்டுகடிதங்களிலிருந்து தெரியவரும்:

சென்னை 10-11-'33

தங்கள் 1–11–1933 தேதியக் கடிதம் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்..... ''விகடன்'' வேலையில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கிறேன். என் நேரம் எல்லாம் அதற்கே சரியாய் இருக்கிறது. ஆயினும் தங்களுக்குக் கடிதம் எழுத முடியாதபடி அல்ல.

இங்கே தாயும் குழந்தையும் ஒருவரையொருவர் மகிழ்வித்துக் கொண்டிருக்கிறார்கள்; அதைக் கண்டு நான் மகிழ்ந்து கொண்டிருக்கிறேன்.

தாங்கள் விரும்பியபடியே, ஆனந்த விகடன் பிரதிகளையும் திருக்குறள் புத்தகம் ஒன்றையும் தனியாக அனுப்பி இருக்கிறேன். இந்தப் பிரதிகளிலிருந்து ஆனந்தவிகடனின் விற்பனை அமோகமாய்ப் பெருகி இருப்பதைக் காண்பீர்கள். அதிர்ஷ்ட எண்கள், சொற் புதிர்ப் போட்டிகள் ஆகிய பரிசுத் திட்டங்களே, இதற்குப் பெரும்பாலும் காரணம். தமிழ்ப் பத்திரிகை உலகில் போலியும் அநியாயப் போட்டா போட்டியும் மிகுந்துள்ளன. இந்நிலையில், பரிசுத் திட்டங்களை நிறுத்திவிடும்படி (வாசனிடம்) சொல்ல முடியும் எனத் தோன்றவில்லை. அப்படியே நான் சொன்னாலும் அதை அவர் நிச்சயம் ஏற்க மாட்டார். இலக்கியத் தரம் கொஞ்சமும் இல்லாத விஷயங்கள் அடங்கிய மிக மட்டமான பத்திரிகைகள் இப்போது தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கில் விற்கின்றன. போலி நகைச்சுவைக்கும் பரிசுப் போட்டிகளுக்கும் இப்போதுள்ள மோகம் தானாகவே மடிந்து போகும் என்று நினைக்கிறேன்.

இந்த மாதத்திலிருந்து ஆனந்தவிகடன் வார இதழாக வெளியாகிறது.....

சென்னை 8-12-'33

தங்கள் 23ஆம் தேதிய அன்பான கடிதம் என் மனத்துக்கு ஒரு டானிக் கொடுத்தது போல் இருந்தது. ஆனந்தவிகடனின் இலக்கியத் தரம் அப்படியே ஒரே சீராய் இருக்கிறது

எனத் தாங்கள் கருதுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். பின்னர் வெளியான இதழ்களையும் அனுப்பி வைக்கட்டுமா ?

பரிசுப் போட்டிகளை நினைத்து வேதனைப் பட்டுக் கொண்டேயிருக்கிறேன்.

இவை பற்றி மிஸ்டர் வாசனின் கொள்கை நிலை இதுதான் : இந்தப் போட்டிகள் சட்ட விரோதமானவை அல்ல; வெளிநாடுகளில் பல பத்திரிகைகள், விற்பனைப் பெருக்கத்துக்காக இவற்றை நடத்துகின்றன. பத்திரிகை உலகில் இவை நியாயமான உபாயங்களாய்க் கருதப்படுகின்றன. இந்தியாவிலும், ''தி இலஸ்டிரேடட் வீக்லி'' பல வருடங்களாய் இவற்றை நடத்தி வருகிறது. இவற்றில் மோசடியோ, நெறிக் கேடோ கிடையாது; ஒளிவு மறைவின்றிப் பகிரங்கமாய் இவை நடத்தப்படுகின்றன. ஒரு வியாபாரமாகவே தாம் பத்திரிகையை நடத்துவதாகவும், வேறு ஏதும் தமது இலட்சியம் அல்ல என்றும் அவர் சொல்கிறார்.

இவ்விதம் பரிசுப் போட்டிகளை நடத்திப் பார்த்துத் தோல்வியுற்ற பத்திரிகைகள் சில, விகடனுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதால், நிலைமை சிக்கலாகிவிட்டது; உரிமையும் மதிப்பும் சம்பந்தப்பட்ட பிரச்னையாகி விட்டது. இந்தப் பரிசுப் போட்டிகள் பற்றிய தங்கள் கருத்தை மிஸ்டர் வாசனிடம் தெரிவிக்கவே செய்தேன். ஏற்கனவே சொன்னது போல் இப்போதும் அவர், இந்த விஷயத்தைத் தங்களுடன் விவாதிக்கத் தயாராய் இருப்பதாகச் சொல்கிறார் ; அதன் விளைவாகத் தமது நிலையைத் தாங்கள் ஒப்புக் கொள்ளும்படி செய்வாராம் ; அல்லது தங்கள் வாதத்தை அவர் ஒப்புக் கொள்வாராம். தாங்கள் சிறையிலிருந்து வெளியே வந்த பிறகு, இந்த விஷயத்தின் எல்லா அம்சங்களையும் தயவுசெய்து ஆராய்ந்து, நான் செய்ய வேண்டியது என்ன என்பதற்கு ஆலோசனை கூற வேண்டுகிறேன்.....

பின்னர் ராஜாஜிக்கும் வாசனுக்கும் இடையே விவாதம் நடக்கவே செய்தது என்று தெரிகிறது. அதில் ராஜாஜியின் வாதத்தை வாசன் ஒப்புக்கொள்ளவில்லை என்பது, பல ஆண்டுகளுக்குப் பிறகு கல்கி பத்திரிகையில் அதன் ஆசிரியர் எழுதிய குறிப்பு ஒன்றிலிருந்து புலனாகிறது.

''போட்டிப் பந்தயம் ரொம்பத் தீமை ; ஜனங்களைக் கெடுப்பது ; அதை நிறுத்தி விடுங்கள்'' என்று ராஜாஜி சொன்னார்.

'' நிறுத்த முடியாது'' என்று விகடன் மறுதளித்ததுடன், ஆயிரம் ரூபாயிலிருந்து இருபதினாயிரம் ரூபாய் வரையில் (பரிசுத் தொகையை) உயர்த்திக்கொண்டே போனார்.

ஆனாலும், ''ஆனந்த விகடனை'' ராஜாஜி பகிஷ்கரிக்கவில்லை; அதற்குக் கட்டுரைகள் எழுதி ஆதரவும் கொடுத்து வந்தார்.

போட்டிப் பந்தயங்கள் கெடுதல் என்றாரே, போட்டிப் பந்தயம் போடும் பத்திரிகைக்குக் கட்டுரை எழுதியது சரியா ? முன்னுக்குப் பின் முரண் இல்லையா ? ஜனங்களை ஏமாற்றும் காரியம் இல்லையா ?

போட்டிப் பந்தயம் கெடுதலான போதிலும், மற்றப்படி ''ஆனந்த விகடன்'' தேசத்துக்கும் தமிழுக்கும் செய்து வந்த சேவை பெரிய நன்மை என்பதாக நம்பியபடியால் தான் ஆனந்தவிகடனைத் தள்ளி விடவில்லை.

(கல்கி இதழ் 21-5-'42)



கல்கி ஏன் போட்டிப் பரிசுகளை ஆட்சேபித்து ஆனந்தவிகடனை விட்டு விலகவில்லை என்பதற்குக் காரணமும் இதே குறிப்பில் இருக்கிறது. விலக வேண்டும் என்று அவர் தீவிரமாய் எண்ணினார், முயற்சியும் செய்தார் என்பதில் சந்தேகம் இல்லை. பெருந் தொகையான பரிசுகளை அறிவித்து ஆசை காட்டிப் பல்லாயிரக் கணக்கான மக்களிடமிருந்து பணம் பறிப்பதை அவர் வெறுத்தார். அவர் போற்றிப் பிரசாரம் செய்து வந்த நெறிகளுக்கு நேர் மாறாக இருந்தன அந்தப் போட்டிப் பந்தயங்கள்.

ஒரு சமயம் அவருடைய பாலிய நண்பர் ஆர். கே. சுப்பிரமணியம் மாயூரத்திலிருந்து வந்திருந்தபோது, தமது மன வேதனையைக் கல்கி அவரிடம் தெரிவித்து, ''நான் ராஜிநாமா செய்துவிடலாம் என்று எண்ணுகிறேன்'' என்றார்.

ஆர். கே. எஸ். திகைத்துப்போய், ''அப்படி ஏதும் அவசரப்பட்டுச் செய்து விடாதே'' என்று கூறினார். ஆயினும், கல்கி பிடிவாதமாய் இருந்ததைக் கண்டு, ''அப்படியானால் உன் விருப்பம் போல் செய்'' என்று சொன்னார். ''வேறு எங்கேனும் வேலை தேடிக் கொண்டால் போகிறது. உனக்கா வேலை கிடைக்காது?... நான் ஏதேனும் உதவி செய்ய வேண்டுமானால் சொல்.''

'' உன்னுடைய உதவி உடனே வேண்டியிருக்கிறது'' என்றார் கல்கி. ''வாசனிடம் மூவாயிரம் ரூபாய் கடன் வாங்கியிருக்கிறேன். அதைத் திருப்பிக் கொடுத்து விட்டு ராஜிநாமாக் கடிதத்தை நீட்ட வேண்டும்.''

அன்றிரவே சுப்பிரமணியம் மாயூரம் சென்று மூவாயிரம் ரூபாயுடன் திரும்ப

வந்து கல்கியிடம் கொடுத்தார். பணத்தையும் ராஜிநாமாக் கடிதத்தையும் எடுத்துக் கொண்டு வாசனைப் பார்க்கச் சென்ற கல்கி, மாலையில் திரும்பி வந்து, ''உன் பணம் உன்னிடமே இருக்கட்டும்'' என்று நண்பரிடம் அதைத் திருப்பிக் கொடுத்தார்.

''என்ன ஆச்சு?'' என்று நண்பர் கேட்டார்.

''போட்டிப் பரிசுகள் ஏதும் இல்லாமல், எனக்காகத் தனியாய் ஒரு பத்திரிகையை ஆரம்பித்துக் கொடுப்பதாய் வாசன் சொல்கிறார்.''

''நல்லதாய்ப் போச்சு'' என்றார் நண்பர். ''இனி வீணே மனசைக் குழப்பிக் கொள்ளாமல் நிம்மதியாய் இரு'' என்றார்.

அப்படியே சுமார் ஆறு மாத காலம் கல்கி நிம்மதியாய் இருந்தார் — வாக்களித்தபடி வாசன் புதுப் பத்திரிகை ஒன்றைத் தொடங்குவார் என்ற நம்பிக்கையில். ஆனால் வாசன் அதைத் தொடங்கவே இல்லை. ஆகவே, நிம்மதி இன்றியேதான் கல்கி தொடர்ந்து வேலை பார்க்க வேண்டியதாயிற்று.

ஆனந்தவிகடனில் கல்கி சேர வந்த போதே அதில் பரிசுப் போட்டிகள் நடந்து கொண்டுதான் இருந்தன. கல்கிக்கும் அது தெரியும்; அவருக்கு அனுமதி அளித்த ராஜாஜிக்கும் தெரியும். ஆனால் அப்போது அது சிறு பரிசுத் தொகைகள் கொண்டனவாயும், பத்திரிகையின் விற்பனையைப் பெருக்குவதற்கான உபாயமாகவும்தான் இருந்தன. பின்னர்தான் வாசன் பரிசுத் தொகைகளை அதிகமாக்கி, அவற்றையே பொருளீட்டும் உபாயமாகக் கொண்டார். பத்திரிகைக்காகப் போட்டிகள் என்ற நிலைமை மாறி, போட்டிகளுக்காகப் பத்திரிகை என்ற நிலைமையே வந்தது. அந்த நிலைமையிலும் வாசன், பத்திரிகையின் வாசிப்புப் பகுதியைப் புறக்கணிக்கவில்லை. அந்தப் பகுதி மேலும் மேலும் சிறப்படைய வேண்டு மென்றுதான் விரும்பினார். அதற்கென நிறையப் பணச் செலவை அனுமதித்தார். கல்கி கோரிய உதவியாளர்களையும் சித்திரக்காரர்களையும் நியமித்தார். கல்கியின் தேசியப் பணியும் இலக்கியப் பணியும் செம்மையாய் நடக்க மிகத் தாராளமாய் உதவி செய்தார். கல்கியின் எழுத்தும் இன்னும் எத்தனையோ பேர்களின் எழுத்தும் பரவவும், நவீனத் தமிழ் இலக்கியம் வளம் பெறவும் வாசன் வகை செய்தார். இதற்காக அவர் பெரும் பாராட்டுக்கு உரியவர்.

ஆனந்தவிகடனை விட்டுக் கல்கி விலக வேண்டும் என்று அக்காலத்தில் சொன்னவர்களில், நல்ல எண்ணம் கொண்டவர்களும் உண்டு; கெட்ட எண்ணம் கொண்டவர்களும் உண்டு. பிந்தையவர்கள், கல்கியின் வளர்ந்து வரும் புகழைக் கண்டு பொறாமைப் பட்டவர்கள். தம்மைப் போல் அவரும் நிலையில்லாமலும், நிலைக்காமலும் திண்டாடட்டுமே என்பது அவர்களுடைய எண்ணம். ஆனால் அவர் ஆனந்த விகடனை விட்டு அப்போது விலகியிருந்தாலும், அவர்கள் எண்ணியது போல் திண்டாடி யிருக்க மாட்டார்.

நல்லெண்ணம் கொண்டவர்கள், சூதாட்டம் நடத்தும் பத்திரிகை ஒன்றில் கல்கி சம்பந்தப்பட்டிருக்கக் கூடாது என்று, அவர்மீதுள்ள மதிப்பினாலும் அன்பினாலும் கருதினார்கள். அவர்களில் ஒருவர் கல்கியின் பழைய நண்பர் ரா. நா. என்ற ரா. நாராயண அய்யங்கார். அவரைக் கல்கி எப்படி நடத்தினார் என்பதை அவரே சொல்லக் கேட்போம்:

நான் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டதற்கு மறைமுகமாகக் கல்கிதான் காரணம். அவர் விகடனில் இருந்தபோது போட்டிப் பரிசை எதிர்த்து ஒரு கட்டுரை எழுதினேன். அதன் விளைவாக (பரிசு பெற்றோரின் பட்டியலை வெளியிடுவதற்காக நடந்த) ''நாரதர்'' பத்திரிகையில், ''ரா. நாராயணன் பி.ஏ. பி.எல். அவர்களுக்கு, 'தங்கள் மனச்சாட்சியை அனுப்பி வையுங்கள்' '' என்று ஒரு பகிரங்கக் கடிதம் பிரசுரிக்கப்பட்டது. அதற்கு நான் எழுதிய பதில், ''காந்தி'' எனும் பத்திரிகையில் பிரசுரமாயிற்று.

இதைக் கண்ணுற்ற சுதந்திரச் சங்கின் சொந்தக்காரர், அந்தப் பத்திரிகைக்கு என்னை ஆசிரியராகும்படி அழைத்தார். எட்டு மாதம் அதன் ஆசிரியராய் இருந்து, அபிப்பிராய பேதம் காரணமாய் அதை விட்டு விலகினேன். இது பற்றிக் கேட்ட கல்கி போனில் என்னை அழைத்துப் பாராட்டி விட்டுத் தம் வீட்டுக்கு விருந்துக்கு வரும்படி அழைத்தார். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது விகடனுக்கு எழுதும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். எதைப் பற்றி எழுதுவது என நான் கேட்டதற்கு, ''நீங்கள்தான் வக்கீலாய் இருக்கிறீர்களே. நீதி ஸ்தல ஹாஸ்யம் பற்றி எழுதுங்கள்'' என்றார். ''நியாயம் பலவிதம்'' எனும் தலைப்பில் ஆறு ஏழு கட்டுரைகள் எழுதியதும் அல்லாமல், தொடர்ந்து வேறு பல கட்டுரைகளும் எழுதினேன். போட்டிப் பரிசு சம்பந்தமாக எங்களுக்குள் ஏற்பட்ட விவாதத்தால் அவர் துணுக்குற்றிருப்பார் என எண்ணிய எனக்கு, அவருடைய அன்பு இன்பமான ஆச்சரியத்தை அளித்தது.

(ஈழகேசரி 26-12-'74)

(தொடரும்)



கோடை ஜோக்

''இந்த முறை கோடை லீவை நானும் என் மனைவியும் சந்தோஷமாக அனுபவித்தோம்!''
''இரண்டு பேருமாக எங்கே போனீர்கள்?''
''நான் எங்கும் போகவில்லை; அவளை மட்டும் பிறந்த வீட்டுக்கு அனுப்பி விட்டேன்!''

(ஜனத்தொகை இப்படிப் பெருகிக் கொண்டே போனால் இன்னும் சில ஆண்டுகளில் 'மெரீனா பீச்' சில் இப்படி ஓர் உரையாடல் கேட்டாலும் கேட்கலாம்!)
''சார், இது நான் உட்கார்ந்திருந்த இடம், கொஞ்சம் வாங்க எழுந்து போனேன்.''
''அதெல்லாம் எழுந்திருக்க முடியாது; 'கர்சிப்' போட்டு விட்டுப் போவது தானே!''

''நான் கோடையில் கூடக் குளிப்பதில்லை என்று நீ பலரிடம் சொன்னாயாமே, அது உண்மையா?''
''அது உண்மைதான்; ஆனால் நான் அதை யாரிடமும் சொல்லவில்லை!''

''அப்பாடா! இனி ஐஸ் வாட்டருக்காக அலைய வேண்டிய அவசியமில்லை.''
''ஏன்? 'ரெஃப்ரிஜிரேட்டர்' வாங்கியாகி விட்டதா?''
''ஆமாம்!...பக்கத்து வீட்டில்!''

ஒரு 'பார்ட்டி'யின் போது மனைவி கணவனிடம் கேட்டாள்:
''பதினேந்தாவது முறையாக இப்படி 'கூல் டிரிங்க்' வாங்கி வந்து குடிக்கிறீர்களே, அவர்கள் உங்களைப் பற்றித் தவறாக நினைத்துக் கொள்ள மாட்டார்களா?''
''மாட்டார்கள்.''
''ஏன்?''
''நான் உன் பெயரைச் சொல்லியல்லவா ஒவ்வொரு முறையும் வாங்கி வருகிறேன்!''

நீச்சல் குளத்தினருகே தயக்கத்துடன் நின்றிருந்த ஒரு ஹிப்பியிடம் ஒருவன் சொன்னான்:
''வேண்டாம், இந்தக் குளத்தில் குளிக்காதீங்க!''
''ஏன், தண்ணீர் அழுக்காக இருக்கிறதா?'' என்றான் ஹிப்பி.
''இல்லே, சுத்தமாக இருக்கிறது. அதனால்தான்!'', என்றான் அவன்!

- கே. வி. முரளி


கட்சி மாறும் பட்சி
கதை: குட்டி கிருஷ்ணன்
படம்: ராஜு
1
ஒரு காரியாலயத்தில் டைப்பிஸ்ட்டாக வேலை செய்து வந்த பட்சி ராஜுவுக்குச் சில நாட்களாக வேலையே ஓட வில்லை.
காரணம், எதிர் ஸீட்டில் புதிதாக வேலைக்கு வந்து அமர்ந்த கீதா தான்!
ஸார்!... ஸார்!... ஸார்!
ஸார்! என்ன கண்ணைத் திறந்துகிட்டே தூங்கறீங்க? மானேஜர் அர்ஜண்டா கூப்பிடறார்!
மானேஜர் அறை:
பட்சி! இந்த லெட்டர் ரொம்ப அர்ஜண்ட். மெஸஞ்சர் கிட்டே அனுப்பணும். அஞ்சு நிமிஷத்திலே ரெடியாகணும்!
அஞ்சு நிமிஷத்திலே முடியாது ஸார்...
நாலே முக்கால் நிமிஷத்திலே தயார் பண்ணிடறேன்!
நீயும் உன் ஜோக்கும்! போய் வேலையைக் கவனி.
பட்சி சுறு சுறுப்பாய் இயங்குகிறான்.
அன்புடையீர், வணக்கம். தங்கள் 24.3.75 கடிதத்தில் கண்டபடி... கண்டபடி காதல் அல்ல... கண்டதும் காதல்! கீதா டார்லிங்! இன்று மாலை பீச்சில் மீட் பண்ணலாமா? ஐஸ்கிரீம் சுவைத்தபடியே காதலும் டேஸ்ட் பண்ணலாமா?....


மானேஜர் வருகிறார்...
எங்கேப்பா லெட்டர்? நேரமாச்சு.
முடிஞ்சிருச்சு ஸார்!
மானேஜர் அவசரத்துக்குக் கடிதத்தை மிஷினிலிருந்து உருவி எடுத்துக் கையெழுத்துப் போடுகிறார். பிறகு....
என்வலப் அடியேன், சீக்கிரம்!
... கடிதத்தை நோட்டம் விடும்போது....
டார்லிங் கீதா! பீச்சிலே மீட் பண்ணலாமா? என்னய்யா நாடகம் இது?
எதிர் ஸீட் கீதா....
நல்லா கேளுங்க ஸார்! எப்பப் பாரு என்னை ஆந்தை முழி முழிச்சுக்கிட்டிருக்கார்!
கடிதாசில் கையெழுத்துப் போட்டிருக்கிறது யாரு? அதைப் பார்த்துட்டுப் பேசு!
அதிகப் பிரசங்கி! யூ ஆர் ஸஸ்பெண்டட்! கெட் அவுட்!
ஸஸ்பென்ஷன், விசாரணை டிஸ்மிஸல் எல்லாம் எதுக்கு ஸார்? இதோ இப்பவே காம் கடிதாசு எழுதித் தரேன்!
அடடா, கொஞ்சமும் மனம் கலங்கலையே! என்ன கம்பீரம்!

தொடரும்



தண்மைமிகு தமிழ்நாடு



திருவண்ணாமலை

மழை பெய்து ஓய்ந்திருக்கிறது. சிலர் இன்னும் குடையைக்கூட மடக்கவில்லை. சிலர் அண்ணாந்து தூற்றல் மழையாக வலுக்குமோ என்று நோட்டம் விடுகிறார்கள். அருணாசலேசுவரர் கோவில் பிராகாரத்தில் ஒரு காட்சி. இறைவனின் கருணையின் தன்மைக்கு ஈடு இணை ஏது?



உதகமண்டலம்

உதகைக் குளிர்ச்சியில் உல்லாசப் படகேறி உலா வருவது எத்தனை இனிய அநுபவம். அந்த ஏரியில் காலை, மதிய, மாலை வேளைகளில் கதிரவன் புரியும் வர்ண ஜாலங்கள்தாம் எத்தனை அற்புதமானவை! ஒரு சமயம் பொன்னை உருக்கி வார்த்தாற் போலிருக்கும். இன்னொரு சமயம் வெள்ளித் தூள்களைச் சொரிந்தாற்போல் தகதகக்கும். இந்த மனமோகனச் சூழலில் உங்கள் உள்ளம் கவர்ந்தவளும் உடனிருந்து விட்டால்... கந்தர்வ லோகம் இதைவிடச் சிறந்ததா என்ன?



வெம்மைமிகு கோடையில் தமிழகத்தின் சில தண்மைமிகு காட்சிகளைப் பார்க்கலாமே!

முதுமலை

முதுமலை வனத்துக்குள் நுழைந்துவிட்டால் தண்ணென்று இருக்கக் கேட்பானேன்? அடர்ந்த மரங்கள் எங்கு பார்த்தாலும் நிழல் பரப்பிக் கொண்டிருக்க ஆங்காங்கே வன விலங்குகள் தன்னிச்சையாக வளைய வந்து கொண்டிருக்கின்றன. சரணாலயம் அல்லவா? அவற்றுக்கு எந்த விதமான ஆபத்தும் இல்லை. இங்கு செல்பவர்கள் யானைமீது அமர்ந்து காட்டுக்குள் போய் மிருகங்களைப் பார்க்க வசதிகள் உண்டு. ஆனால் அதிகாலையில் கிளம்பினால்தான் தரிசனம் கிடைப்பது எளிது என்பதை மறக்கக் கூடாது! படத்தில் இரு காட்டு யானைகளைப் பார்க்கிறோம்.

ஹொகனக்கல்

காவிரி அன்னை காட்டும் வண்ணச் சித்திரங்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை. பாய்கின்ற ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு தனி எழில் கோலம் காட்டுவாள். ஹொகனக்கல்லில் பாறைகளில் முட்டி மோதிக்கொண்டு விரையும்போது நீர்த் திவலைகள் புகை மண்டலமாக எழும். ஹொகனக்கல் என்று பெயர் வரவே இதுதான் காரணம். (புகையும் பாறைகள்) ஹொகனக்கல் விஜயம் வாழ் நாள் முழுவதும் நினைவிருக்கக் கூடிய ஒரு பயணமாக விளங்கும்.

புகைப்படங்கள் உதவி:

தமிழ்நாடு சுற்றுலா வாரியம்



தீவுகள்

இந்திரா பார்த்தசாரதி

1

"ஆன்ட்டி, ஆன்ட்டி!" என்று கூவினாள் ரூபி.

விஜயா திரும்பிப் பார்த்தாள். பனியின் ஊடே மஞ்சளாய்ப் பொலிந்த சூரியனைத் தன் பிஞ்சு விரலால் குழந்தை சுட்டிக் காட்டிக்கொண்டிருந்தாள். முகமே வியப்பாய் மலர்ந்து, ஒரு புது மலர் போல் ரூபி நின்று கொண்டிருந்த தோற்றம், தான் இங்கு வேலைக்கு அமர்ந்ததின் உண்மையான ஊதியம் இதுதான் என்பதை உணர்த்துவது போல் இருந்தது.

பச்சைக் கம்பளியை விரித்தாற் போன்ற புல்வெளி சாம்ராஜ்யத்தில் கூடை நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த அவள், எழுந்து குழந்தை சுட்டிய மேற்குத் திசையை நோக்கி, "இப்பொழுது உனக்கு என்ன தோன்றுகிறது ரூபி?" என்று கேட்டாள்.

ரூபி பதில் சொல்லவில்லை.

விஜயா அவள் அருகில் சென்று நின்றாள். "இதைப் பார்த்ததும் உன் மனசில் என்ன நினைவு உண்டாகிறது? ரூபி, சொல்ல மாட்டாய்?"

குழந்தை அவளைத் திரும்பிப் பாராமலேயே முணுமுணுத்தாள். "ஒன்றுமில்லை."

ரஸானுபவத்தில் மூழ்கித் திளைப்பதற்கு இதைக் காட்டிலும் வேறு என்ன அத்தாட்சி வேண்டுமென்று தோன்றிற்று விஜயாவுக்கு. ரூபி சொற்களை விரயம் செய்ய விரும்பவில்லை.

இக் குழந்தையின் படிப்பு, ஒழுக்கம் ஆகியவற்றுக்கு அவள்தான் பொறுப்பு. தான் வந்த ஆறு மாதங்களுக்குள் ரூபியின் ரஸனையை இவ்வாறு தான் உருவாக்கிவிட்டதாக விஜயா நினைக்கவில்லை. ரஸனை சொல்லிக் கொடுத்து வருவதில்லை என்பது அவளுக்குத் தெரியும்.

அப்பொழுது 'ஹார்ன்' ஒலிக்கும் சப்தம் கேட்டது. வீட்டு எஜமானி அம்மாளாகத் தான் இருக்க வேண்டும். வேறு யார் தன் வருகையை இப்படி ஆவேசமாக அறிவிப்பார்கள்?

விஜயா கேட்டைத் திறக்கச் சென்றாள்.

அவள் நினைத்தபடியே மோகினி கபூர் தான். விஜயா கதவைத் திறந்ததும், ஒரு லேசான புன்னகையுடன் கூடிய தலையசைப்புடன் நன்றியைத் தெரிவித்துவிட்டுக் காரை உள்ளே விரைவாகச் செலுத்தி, 'போர்டிகோ'வில் போய் அதை நிறுத்தினாள்.

"ரூபி... நானி வந்துவிட்டார்கள் பார்" என்றாள் விஜயா.

'நானி'யின் வருகை குழந்தையை எந்த விதத்திலும் பாதித்ததாகத் தெரியவில்லை. அவள் தொடர்ந்து சூரியனையே பார்த்துக் கொண்டு நின்றாள். ஆனால் இது மோகினியைப் பாதித்திருக்க வேண்டும். அவள் வீட்டுக்குள் புகாமல், ரூபியை நோக்கி நடந்தாள்.

இவளுக்கு யார் ஐம்பது வயசு என்று சொல்வார்கள் என்று நினைத்தாள் விஜயா. முப்பது வயசுக்காரி மாதிரி இருக்கிறாள். அசோகா ரோட்டில் ஏதோ ஒரு யோகாசனப் பயிற்சிக் கூடத்துக்குத் தினந்தோறும் போகிறாள். பணத்தின் செழுமை உடம்பில் குறுக்கு வாட்டத்தில் படரவில்லை என்பது இவள் செய்த அதிர்ஷ்டம்தான்.

"விஜயா...!"

மோகினிக்கு இனிமையாகப் பேசத் தெரியாது என்பது விஜயாவுக்குத் தெரிந்திருந்தாலும், வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாகவே அவள் குரல் இப்போது ஒலிப்பது கண்டு அவள் சற்றுத் திடுக்கிட்டாள்.

மோகினி ரூபியின் கால்களைச் சுட்டிக் காட்டினாள். சாக்ஸ், பூட்ஸ் இரண்டும் இல்லை.

"எத்தனை தடவை போட்டாலும் கழற்றி எறிந்து விடுகிறாள் மேடம்."

"குழந்தைகள் அப்படித்தான் எறியும்.. குளிர்காலத்தில் 'ஷூஸ்' இல்லாமல் நடக்கக்

கூடாது என்பதைக் குழந்தையின் மனசில் படும்படியாக நமக்குச் சொல்லிக் கொடுக்கத் தெரிந்திருக்கவேண்டும்'' என்றாள் மோகினி.


விஜயா 'ஷூலேஸை'யும் 'சாக்ஸை'யும் தேடி எடுத்துக் கொண்டு வந்தாள்.

மோகினி விஜயாவின் கைகளிலிருந்து அவற்றை வாங்கி ரூபிக்குப் போட்டு விடுவதற்காகக் குனிந்தாள்.

ரூபி அங்கிருந்து வேகமாக உள்ளே ஓடி விட்டாள். மோகினி அலுப்புடன் தோள்களைக் குலுக்கினாள்.

''அவற்றை இப்படிக் கொடுங்கள் நான் உள்ளே போய்ப் போட்டுவிடுகிறேன்'' என்றாள் விஜயா.

''சின்ன வயசிலிருந்தே குழந்தைக்கு ஒழுங்கான நடவடிக்கைகள் வேண்டும் என்பதற்காகத்தான் அவளைப் பள்ளிக்கூடத்துக்குக்கூட அனுப்பாமல், உன்னை ஏற்பாடு செய்தேன். நீ வந்து ஆறு மாதமாகிறது. குழந்தைக்குப் பாட்டி



யிடம்கூட மரியாதையாக நடந்து கொள்ளத் தெரியவில்லையே!''

விஜயா பேசாமல் நின்று கொண்டிருந்தாள். 'உன் வேலையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்' என்று போய்விடலாமா என்று அவள் நினைத்தாள். மோகினி அவளைத் தூக்கி எறிந்து பேசியது இது முதல் தடவையில்லை. வேலைக்கு வந்த நாள் முதற்கொண்டு இப்படித்தான் பேசுகிறாள். திரும்பிப் போய் விடுவது சுலபந்தான். ஆனால் யார் இரண்டு வேளை சாப்பாடு போட்டு, சிற்றுண்டி கொடுத்து, இருக்க இடம் தந்து, மாசம் சொளையாக அறுநூறு தருவார்கள்? — சீட்டாட்டத்திலும் குடியிலும் சம்பாத்தியத்தையெல்லாம் இழந்துவிட்டுத் திடீரென்று மாரடைப்பால் மண்டையைப் போட்டுவிட்ட ஒருவருடைய குடும்பத்தில் மூத்த பெண்ணாகப் பிறந்த துரதிர்ஷ்டம், அவளுக்கு இந்தப் பணம் மிகவும் தேவையாக இருக்கிறது.

மோகினி தன்னிடம் மட்டும்தானா இப்படிப் பேசுகிறாள்? வீட்டில் எல்லாரிடத்திலும் இப்படித்தான் பேசுகிறாள். அவள் கணவனிடத்தில் அவளுக்கு மரியாதை இருந்தால்தானே? 'பாட்டியின் குணம் பேத்திக்கு வந்திருக்கலாம்' என்று தன்னால் சொல்லி விட முடியும். ஆனால் தன் கூடப் பிறந்த மூன்று சகோதரிகளையும் தாயையும் யார் காப்பாற்றுவார்கள்?

கபூர் தொழில் துறை ஆலோசகர்; பொருளாதார விற்பன்னர். எந்த நிறுவனத்துடனும் தம்மைப் பிணைத்துக் கொள்ளாமல் அநேகமாக எல்லாப் பெரிய நிறுவனங்களுக்கும் அவர் ஆலோசனை கூறி வந்தார். மாத வருமானம் ஏராளம். அவரை இவள் ஆட்டி வைக்கும் நிலையைப் பார்க்கும்போது...



அந்தப் பெரிய பங்களாவில் ரூபியைத் தேடுவது என்பது சுலபமான காரியமல்ல. எங்கு வேண்டுமானாலும் ஒளிந்து கொண்டிருக்கலாம். ஒவ்வொரு அறைக்குள்ளும் சென்று அவளைத் தேடிப் பார்க்கவும் முடியாது.... அந்த வீட்டில் கபூரின் மூன்று பிள்ளைகளும், இரண்டு பெண்களும் இருந்தார்கள். இரண்டு பிள்ளைகள் கல்யாணமானவர்கள். ஒரு பெண் கல்யாணமாகிக் கணவனைப் பலி கொடுத்துவிட்டு 'வீட்டுக்கு வந்திருப்பவள்'. அவளுடைய பெண்தான் ரூபி. ரூபியின் அம்மாதான் எல்லார்க்கும் மூத்தவள். வீட்டிலிருந்த எல்லாருக்குமே தனித் தனி அறை உண்டு. கதவைத் தட்டிவிட்டு உள்ளே போக வேண்டும். அப்புறம் 'இங்கே ரூபி வந்தாளா?' என்று கேட்டுவிட்டு அவர்கள் பதில் சொல்லும்வரை காத்திருக்க வேண்டும். ஏனென்றால் அந்த வீட்டிலிருந்த ஒவ்வொருவருக்கும் 'மூட்' ஒரு மாதிரி. எப்பொழுது சிரிப்பார்கள், எப்பொழுது கோபிப்பார்கள் என்று சொல்ல முடியாது. வீட்டுக்கு வந்த மருமகள்களும் அப்படித்தான். எல்லாருக்கும் கடைக்குட்டியான அஞ்சலியைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். பதினெட்டு வயதுதான் இருக்கும். உலகத்தைச் சுருட்டித் தன் பையில் போட்டுக் கொண்டிருப்பது போலத்தான் எண்ணம். அவளுக்கும் அவளுடைய அம்மாவுக்கும் ஏற்படுகிற நேரடி மோதல்கள் மிகவும் சுவாரசியமாக இருக்கும்.

வீட்டில் வாயையே திறக்காதவர் கபூர் ஒருவர்தான்.

விஜயா முதலில் ரூபியின் அறைக்குள் சென்று பார்த்தாள். அவள் அங்கு இல்லை. அது ஒரு சின்ன 'நர்ஸரி' அறை. அங்கு அவள் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கலாமோ என்று விஜயா நினைத்தாள். பிறகு ரூபியின் அம்மா ஸ்வர்ணாவின் அறைக்குச் சென்று இலேசாகக் கதவைத் தட்டினாள்.

பதில் இல்லை.

இலேசாகக் கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தாள். யாருமில்லை. அவள் எங்கே போகிறாள், எப்போது வருகிறாள் என்பது யாருக்கும் தெரியாது. இதுபற்றி மோகினிக்கும் அவளுக்கும் 'அடிக்கடி சண்டை ஏற்படுவதுண்டு.

பக்கத்து அறை அஞ்சலியினுடையது. விஜயா கதவைத் தட்டினாள்.

''கம் இன்.''

அஞ்சலி ஒரு நீல நிற ஜெர்கின்னைப் போட்டுக் கொண்டு கண்ணாடியின் எதிரே அழகு பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மை ப்ளஸ்ஸெட் மதர், ஹாஸ் ஷி கம்?'' என்று கேட்டாள் அஞ்சலி.

''இங்கே ரூபி வந்தாளா?''

''நான் கேட்ட கேள்விக்குப் பதில்.''

''வந்து விட்டார்.''

''ரூபி இங்கு வரவில்லை. சரி, கதவைத் தாளிடு.''

''எதற்கு?''

''சொன்னபடி கேள்.''

தன்னைவிட ஐந்து வயசு சின்னவளாக இருப்பாள். என்னை இவள் விரட்டுகிருள்!

விஜயா கதவைத் தாளிட்டாள்.

அஞ்சலி அவளிடம் ஒரு சிகரெட்டை எடுத்து நீட்டினுள்.

''நோ... ப்ளீஸ்... நான் சிகரெட் குடிப்ப தில்லை'' என்ருள் விஜயா.

அஞ்சலி ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டாள். ''என் அம்மாவைப் பற்றி நீ என்ன நினைக்கிருய்?''

''ஏன்?''

''நீ ஒருத்திதான் தொடர்ந்து ஆறு மாச மாக இங்கு வேலையில் இருக்கிருய். உனக்கு முன்னுல் நாலு பேர் இருந்தார்கள். எல்லாரும் வந்த அடுத்த மாதமே போய்விட்டார்கள்.... ஒன்று, உனக்கு அளவற்ற பொறுமை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் உனக்கு இந்தப் பணம் மிகவும் தேவையாக இருக்க வேண்டும்... நான் சொல்வது சரிதானே?''

விஜயா பதில் சொல்லவில்லை.

''எங்கம்மாவைச் சமாளிக்க வேண்டுமென்ருல், அவள் போடும் கூச்சலைவிட அதிகமாகக் கத்த வேண்டும். தெரிந்ததா?''

அவள் புகையை நெஞ்சுக்குள் இழுத்துப் பிறகு வளையம் வளையமாக அதை வெளியே விட்டாள்.

''இரண்டு நாட்களுக்கு முன்புதான் வளைய மாக விடக் கற்றுக் கொண்டேன். ஷம்மி கற்றுக் கொடுத்தான். ஷம்மியைத் தெரியுமா உனக்கு? மை பாய் ஃப்ரெண்ட்.... நல்ல பையன்... எங்கே போகிருய்? உட்கார் இங்கே...''

''ரூபியை நான் இப்போது தேடியாக வேண்டும். அவளுக்கு இந்த 'ஷூலை'...''

''நீ டீச்சரா, வேலைக்காரியா? உன்னைப் பார்த்தால் படித்தவள் மாதிரி தெரிகிறது.... சுய கௌரவம் வேண்டாமா உனக்கு?''

விஜயா அறையை விட்டு வெளியேறினுள்.

அடுத்தபடியாக மூத்த மருமகள் பாபியின் அறை. ஆள்காட்டி விரலால் இலேசாகக் கதவைத் தட்டினுள்.

''கோன் ஹை?''

''விஜயா...''

''என்ன வேண்டும்?''

''ரூபி இருக்கிருளா?''

''இல்லை.''

கதவைத் திறந்து அவள் பதில் சொல்லியிருக்கலாம். ஆனுல் பாபியின் செருக்கு அதற்கு இடம் கொடுக்காது என்பதும் அவளுக்குத் தெரிந்ததுதான்.

இரண்டாவது மருமகள் சசியின் அறையை நோக்கிச் சென்ருள் விஜயா. கதவைத் தட்டினுள்.

சசி கதவைத் திறந்தாள்.

''ரூபி இங்கிருக்கிருளா?''

''இல்லை... உள்ளே வாயேன்.''

சசி வெளியே போவதற்கு ஆயத்த மாய் 'டிரஸ்' செய்து கொண்டிருந்தாள்.

''ரூபியைத் தேடிக் கண்டுபிடித்தாக வேண்டும். வெறுங் காலுடன் சுற்றிக் கொண்டிருக்கிருள்.''

''எனக்காக ஒன்று செய்கிருயா?''

''சொல்லுங்கள்.''

''அஷோக் சீக்கிரம் வருவதாகச் சொன்னுர். இன்னும் வரவில்லை. 41765க்கு டெலிஃபோன் செய்து என்ன ஆயிற்று என்று பார். நான் அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். வெளியே போக வேண்டும்.''

டெலிஃபோன் ஹாலில் இருந்தது. விஜயா ஹாலுக்குச் சென்றபோது சோபாவில் உட்கார்ந்து கொண்டு மோகினி ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். விஜயா டெலிஃபோன் அருகே சென்றதும் அவளை ஏறிட்டு நோக்கினுள்.

''கையில் 'ஷூலை' வைத்துக்கொண்டு ஏன் சுற்றிச் சுற்றி வருகிருய்? குழந்தைக்கு இன்னுமா போடவில்லை?'' என்று அவள் கேட்டாள்.

''ரூபியைக் காணவில்லை.''

''போலீஸுக்கு டெலிஃபோன் செய்யப் போகிருயா?'' விஜயா புன்னகை செய்தாள்.

''ரூபி...'' என்று வீடே அதிரும்படியாகக் கூப்பிட்டாள் மோகினி.

விஜயாவின் அதிர்ஷ்டம் 'டயல்' செய்ததும் நம்பர் கிடைத்து விட்டது. இப்பொழுதெல்லாம் தில்லியில் 'டயல்' செய்யும் எண் கிடைக்க வேண்டுமென்ருல் அதிர்ஷ்டம் தான் வேண்டும்.

''ரூபி...'' மறுபடியும் வீடு அதிர்ந்தது.

''விஜயா பேசுகிறேன்... மிஸஸ் அஷோக் உங்களைச் சீக்கிரம் வரச் சொன்னுர்கள்.''

''விஜயா!''

''எஸ்... மேடம்.''

''அஷோக்கைச் சீக்கிரம் வரச் சொல்ல நீ யார்? அவனுக்கு ஆபீஸில் வேலை இருக்கலாம்.... இத்தகைய விஷயங்களில் நீ தலையிடுவது சரியல்ல.''

''மிஸஸ் அஷோக்தான் டெலிஃபோன் செய்து சொல்லச் சொன்னுர்கள்.''

''அவளைக் கூப்பிடு.''

'' 'டிரஸ்' செய்து கொண்டிருக்கிருர்கள்...''



அழகிய வசந்தம் அடைவோம்!



ஆதிநாள் நமது முன்னோர்
அடைந்தநற் பெருமை என்னும்
பாதையைப் பிரிந்தோம்; உழைப்பின்
பார்வையை இழந்து பாழும்
சாதியை நினைந்தோம்; அதற்கே
சண்டைகள் புனைந்தோம்; தெய்வ
நீதியை மறந்தோம்; நெஞ்சின்
நேர்மையைத் துறந்தோம்; அதனால்
வேதனை யடைந்தே இன்று
வினைப்பயன் உணர்கின் றோமே!

'மாண்டன துயரம்' என்று
மறந்துநாம் மகிழ்ந்து இன்று
பூண்டநற் புதிய ஆண்டைப்
பொய்யில்லாத் தெய்வங் காக்க
ஈண்டினி நமது வாழ்வின்
எதிர்வருங் காலம் எல்லாம்
ஆண்டவன் அருளால் என்றும்
'அழகிய வசந்தம்' ஆக
வேண்டுதல் செய்வோம்; வாரீர்!
வேட்கையே விடியு மாறே.

கி. பாலதண்டபாணி

''சரி... நான் அவனைப் பார்த்துப் பேசிக் கொள்கிறேன். நீ போய் உன் வேலையைக் கவனி.''

ரூபி ஒருவேளை மாடிக்குப் போயிருக்கலாம் என்று விஜயாவுக்குத் தோன்றியது. மாடியில் தான் ராகேஷின் அறை இருந்தது. அஞ்சலிக்கு மூத்தவன். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான்.

அவன் அறை நல்ல வேளையாகத் திறந்திருந்தது. தட்ட வேண்டியதில்லை என்பது அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

ராகேஷ் டிரான்ஸிஸ்டரில் ரேடியோவை ரிப்பேர் செய்து கொண்டிருந்தான்.

''ரூபி இங்கு வந்தாளா?''

''கட்டிலுக்குக் கீழே பார்.''

அவன் நிஜமாகவே சொல்லுகிறானா? அல்லது வேடிக்கைக்காகச் சொல்லுகிறானா என்று விஜயாவுக்குப் புரியவில்லை. தயங்கி நின்றாள்.

''கம் ஆன்... கட்டிலுக்குக் கீழே பார்.''

ராகேஷ் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் அவள் வயதுதான் இருக்கும். நல்ல உயரம். களையான முகம். இதழோரத்தில் சிகரெட் ஒட்டிக்கொண்டிருந்தது. ஒரு கம்பளி ஸ்போர்ட்ஸ் சட்டை அணிந்திருந்தான்.

விஜயா கட்டிலுக்குக் கீழே குனிந்து பார்த்தாள். அவன் சொன்னது வாஸ்தவம் தான். ரூபி கட்டிலின் கீழேதான் இருந்தாள். ஆனால் தூங்கி விட்டாள்.

''மை காட்!.... தூங்குகிறாள்'' என்றாள் விஜயா.

அவள் ரூபியைக் கட்டிலுக்கு வெளியே சற்று இழுத்து அப்படியே தூக்கிக்கொண்டாள். ரூபி ஒரு விநாடி கண்களைத் திறந்து விஜயாவைப் பார்த்துவிட்டு, மறுபடியும் மூடிக்கொண்டாள்.

''ஏன் தூக்கமுடியாமல் கஷ்டப்படுகிறாய்! அவளைக் கீழே இறக்கி நடத்தி அழைத்துக் கொண்டு போ'' என்றான் ராகேஷ்.

''இவள் அப்படியொன்றும் கனமில்லை'' என்றாள் விஜயா.

''தென்னிந்தியப் பெண்களுக்கே பலம் அவ்வளவு கிடையாது என்று நினைக்கிறேன்'' என்றான் ராகேஷ்.

''எங்களுக்கு மனோபலம் உண்டு.''


''இது எச்சரிக்கையா?'' என்று கேட்டு விட்டுச் சிரித்தான் ராகேஷ்.

விஜயா அறையை விட்டு வெளியே வந்தாள். ராகேஷ் ஒரு விசித்திரமான வாலிபன். வீட்டில் இருந்தானானால் தன் அறையை விட்டு வெளியே வரவே மாட்டான். இப்பொழுது டிரான்ஸிஸ்டரை ரிப்பேர் செய்து கொண்டிருப்பது போல் ஏதாவது செய்து கொண்டேயிருப்பான். பல சமயங்களில் சாப்பாடோ, சிற்றுண்டியோ அவன் அறைக்கே போய்விடும். தன் தாயுடன் அவன் பேசி விஜயா பார்த்ததே கிடையாது. பல தீவுகளுக்கிடையே தான் இருக்கிறோமோ என்ற சந்தேகம் அவளுக்குத் திடீரென்று ஏற்பட்டது.

அவள் கீழே இறங்கி வந்தபோது ஹாலில் சசிக்கும் மோகினிக்கும் பெரிய வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது.



இப்போது!
வறுத்தெடுக்கும் கோடை நாட்களில் குளுமையாகப் புதுமலர்ச்சியுடன் விளங்குங்கள்



மற்றொரு மின்வெட்டு! இக் கோடை மிகவும் கடுமையாகவும், வெப்பமாகவும், இருக்கப்போகிறது. ஆனால் கவலைவேண்டாம்: அப்போது குளுமையாகப் புதுமலர்ச்சியுடன் விளங்கிட இதோ ஒரு புதிய வழி. நீங்கள் குளித்தவுடன் உடம்பு முழுவதும் ஜான்ஸன்ஸ் மென்தொலேட்டெட் பவுடரைத் தூவிக்கொள்ளுங்கள். ஜான்ஸனில் மட்டுமே அடங்கியுள்ள **மென்தால்** உங்களுக்குக் குளுமையும் புதுமலர்ச்சியும் அளித்து, கோடையில் உரசுவதால் ஏற்படும் புண்ணிலிருந்தும், வேர்க்குருவிலிருந்தும் உங்கள் சருமத்திற்கு சுகமளிக்கிறது.

கோடைகால நாட்களைக் குளுமையுடன் கழியுங்கள், ஜான்ஸன்ஸ் மென்தொலேட்டெட் பவுடர் உபயோகியுங்கள்.



ஜான்ஸன்ஸ்*
மேன்தோலேட்டேட் பவுடர்

'75 கோடையில் மென்தால்-குளுமை தரும் ஒரே பவுடர்.

OBM 4320

Trademark © J&J 75

Johnson & Johnson*

''அஷோக் என் கணவர்... அப்புறந்தான் உங்கள் பிள்ளை.... ஆபீஸிலிருந்து வரும்படி சொல்ல எனக்கு உரிமை உண்டு. இதைப் பற்றி நீங்கள் கேட்பதையோ அல்லது எங்கள் விஷயங்களில் நீங்கள் குறுக்கிடுவதையோ நான் விரும்பவில்லை'' என்றாள் சசி.

''அப்படியானால் இந்த வீட்டை விட்டுப் போய்விடுங்கள்'' என்றாள் மோகினி.

''அஷோக்கின் அப்பா இதைச் சொன்னால் நாங்கள் போகத் தயார்.''

''நான் சொல்லுகிறேன்... அவர் வேறு எதற்காகச் சொல்ல வேண்டும்?''

''அவர்தான் இந்த வீட்டின் தலைவர்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனாள் சசி.

''விஜயா...'' என்று கோபத்துடன் கத்தினாள் மோகினி.

''எஸ் மேடம்!''

''நீ இந்த வீட்டில் உள்ளவர்கள் என்னென்ன சொல்கிறார்களோ அதையெல்லாம் கேட்க வேண்டுமென்ற அவசியமில்லை. நீ எனக்குத் தான் கட்டுப்பட்டவள் தெரிந்ததா?''

''எஸ் மேடம்.''

''குழந்தைக்கு ஏன் இன்னும் ஷூஸ் மாட்டி விடவில்லை?''

''தூங்குகிறாள்.... படுக்கையில் விடலாமென்று...''

''அதற்குள் என்ன தூக்கம்? எழுப்பு அவளை! ரூபி....''

''அயர்ந்து தூங்குகிறாள்.... இன்னும் கொஞ்ச நேரம் கழித்து....''

மோகினி வேகமாக அவள் அருகில் வந்து குழந்தையை உலுக்கி எழுப்பினாள்.

ரூபி கண்களைக் கசக்கிக் கொண்டே அவளைப் பார்த்தாள்.

''கீழே இறங்கு.''

'முடியாது' என்பது போல் தலையை அசைத்துவிட்டு ரூபி மறுபடியும் கண்களை மூடிக்கொண்டாள்.

''அவளைக் கீழே இறக்கிவிடு'' என்று குரலைச் சற்று உயர்த்தி அதட்டலாகச் சொன்னாள் மோகினி.

கீழே இறக்கி விட்டதும் குழந்தை அழ ஆரம்பித்தாள்.

''நல்ல பெண் அழலாமா?'' என்று கேட்டுக்கொண்டே விஜயா ரூபியைக் கன்னத்தில் தட்டினாள்.

''இந்த இடத்தில் கண்டிப்பு வேண்டும், கொஞ்சக் கூடாது'' என்றாள் மோகினி.

''குழந்தைதானே?''

''ஷட் அப்... எனக்கா நீ சொல்லித் தருகிறாய்?''

அப்பொழுது அஷோக் உள்ளே வந்தான். மோகினி கத்துவதைக் கண்டு அவன் ஒரு கண நேரம் விஜயாவை உற்றுப் பார்த்து விட்டுப் பிறகு தன் அறையை நோக்கி நடந்தான்.

''அஷோக்...''

''உன் அருமை மனைவி என்னை என்ன பேசப் போகிறாள் என்று இவளைக் கேள்.''

''மறுபடியும் சண்டையா? இட் ஈஸ் ஹெல்'' என்றான் அஷோக்.

''விஷயம் என்னவென்று கேட்காமல் என்னடா நரகம் கிரகம் என்கிறாய்?''

''நரகம் இல்லாமல் வேறு என்ன? இந்த வீட்டில் சண்டையைத் தவிர வேறு என்ன இருக்கிறது? வீட்டுக்கு ஏன் வருகிறோம் என்றிருக்கிறது.''

''இதற்கு யார் காரணம்?''

''நீதான்... நீ யாரையும் சந்தோஷமாக இருக்க விடமாட்டாய்... அதோ அந்தச் சின்னக் குழந்தையை விரட்டுகிறாய். பாவம், இந்த வீட்டுக்கு வேலைக்கு வந்த இந்தப் பெண்ணின் கஷ்ட காலம் இவளுக்கும் நரக வேதனைதான்... ஒரு படித்த பெண்ணைப் பார்த்து, 'ஷட் அப்' என்கிறாயே, இதுவா மரியாதை?''

''உனக்கு இந்த நரகத்தில் இருக்க விருப்பம் இல்லையென்றால், உன் மனைவியை அழைத்துக் கொண்டு தாராளமாக வெளியேறலாம். நான் குறுக்கே நிற்க மாட்டேன். இந்தப் பெண்ணை நான் எப்படி நடத்த வேண்டும் என்பதைப் பற்றி உன் யோசனை தேவையில்லை.''

''இந்த வீட்டில் இருப்பதா இல்லையா என்பது என் முடிவாகத்தான் இருக்குமே தவிர, உன் ஆலோசனை தேவையில்லை. உன் இஷ்டப்படி நீ யாரையும் ஆட்டி வைக்க முடியாது, தெரிந்துகொள்.''

அஷோக் உள்ளே போய்விட்டான். மோகினியின் உடம்பு கோபத்தால் படபடத்தது. அவள் சோபாவில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

விஜயா ரூபியை அழைத்துக் கொண்டு அவள் அறைக்குச் சென்றாள்.

அடுத்த இதழில்...



தலைவர் தரிசனம்
எம். ஜி. ஆர்.
வண்ணப் படத்துடன்

நண்பர்களை நாசுக்காகக் கிண்டல் செய்வது எப்படி?

கிண்டல் களஞ்சியம்





ஆர். வி. எழுதிய அருமையான சிறுகதை

ஒரு வெள்ளிக்கிழமையில் ஒரு கன்னிப்பெண்

சர்வேசுவரர் கும்பாபிஷேகம்

நாகபுரி, ராம்நகர் பகுதியில் காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் ஆணையைச் சிரமேற்கொண்டு அற்புதமானதொரு சர்வேசுவராலயம் எழுந்துள்ளது. பகவத்பாத சபா என்று பெரியவர்களால் பெயர் சூட்டப்பெற்ற ஸ்தாபனம் இப்பணியைச் சிறப்புற நிறைவேற்றி, வருகிற சித்திரை மாதம் 10ந் தேதி (23-4-75) அன்று ஸ்ரீ சித்தி விநாயகர், ஸ்ரீசுப்ரமணியர், ஸ்ரீ கோபால கிருஷ்ணர், ஸ்ரீ சங்கர பகவத் பாதர் ஆகிய திருக்கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற விருக்கிறது. ஆத்திக அன்பர்கள் தங்கள் பங்குக்குத் தாராளமாகப் பொருள் வழங்கக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீசர்வேசுவர தேவாலயக் கமிட்டி, ராம்நகர், நாக்பூர்.

அறைக்குச் சென்றதும் ரூபி சொன்னாள்: "நானியைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லே."

"அப்படிச் சொல்லக் கூடாது" என்றாள் விஜயா.

"எல்லாரையும் திட்டுகிறாள்."

'உஷ்' என்று ஆள்காட்டி விரலை மூக்கில் வைத்துக் கொண்டு புன்னகையுடன் கண்டித்தாள் விஜயா.

மோகினியின்பால் திடீரென்று அவளுக்கு ஒரு பச்சாதாப உணர்ச்சி ஏற்பட்டது. தான் இவ்வாறு நடந்து கொள்வது தவறு என்று அவளுக்கு ஏன் புலப்படவில்லை? அவள் இப்படி இருப்பதற்குக் கபூர் மீதுதான் குற்றம் சாட்ட வேண்டும். அவர் ஆரம்பத்திலிருந்தே அவளைக் கண்டித்திருந்தாரானால், அவள் ஒருவேளை தன்னை மாற்றிக்கொண்டிருக்கக் கூடும். ஆனால் அவர் அவள் முன்னிலையில் ஏன் இப்படி ஒரு தாழ்வு மனப்பான்மையினால் கஷ்டப்படுகிறார்? நிரம்பப் படித்தவர், மேதை, கலாரஸிகர் என்றெல்லாம் அவரை எல்லோரும் பாராட்டுகிறார்கள். ஆனால் மோகினி கூட இருக்கும்போது அவர் வாயைத் திறப்பதில்லை. பெட்டிப் பாம்பாக இருக்கிறார். இன்று அவர் வீடு திரும்பியதும் ஒரு பெரிய யுத்தம் காத்திருக்கிறது. மோகினி அவரிடம் மகன் தூக்கி எறிந்து பேசியதைப் பற்றிக் கூறப் போகிறாள். மகனையும் மருமகளையும் வெளியேற்ற வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கப் போகிறாள். ஆனால் கபூர் வழக்கம் போல் வாயைத் திறக்கப் போவதில்லை. இது அவள் கோபத்தை இன்னும் கிளறும்.

கதவை யாரோ தட்டுகிறார்கள். விஜயா எழுந்து போய்த் திறந்தாள். ரூபியின் அம்மா ஸ்வர்ணா.

"ஏன் அம்மா 'உர்'ரென்று இருக்கிறாள்? என்னைப் பற்றி ஏதாவது கேட்டாளா?"

"இல்லையே..."

அவள் உள்ளே வந்து ரூபியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். குழந்தை முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டது.

"ஏன் உனக்கு என்ன கோபம்?" என்று கேட்டுக் கொண்டே ரூபியை அணைத்துக் கொண்டாள் ஸ்வர்ணா.

ரூபி எழுந்து போய் விஜயாவின் மடியில் உட்கார்ந்தாள்.

"ரூபி... நீ சமர்த்துப் பெண்ணாயிற்றே, அம்மாவிடம் போ" என்றாள் விஜயா.

"குழந்தை என்னிடம் வர உன் சிபாரிசு வேண்டுமா?"

"மன்னிக்கவும். நான் சிபாரிசு செய்ததாக நினைத்துக் கொள்ளாதீர்கள்."

ரூபி விஜயாவின் மடியிலிருந்து எழுந்து போய்க் கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

"இன்று வீட்டில் ஏதாவது சண்டையா?" என்று கேட்டாள் ஸ்வர்ணா.

இதற்குப் பதில் சொல்வதா கூடாதா என்று விஜயாவுக்குப் புரியவில்லை. சண்டை என்றால் துருவித் துருவி மேலே கேள்விகள் கேட்பாள். எல்லாவற்றுக்கும் பதில் சொல்லியாக வேண்டும். சண்டை இல்லை என்றால், 'பொய் சொல்கிறாயா?' என்று சீறுவாள். அவளுக்குச் சண்டை என்று விஷயம் தெரிந்திருக்கலாம்.

"என் மௌனமாய் இருக்கிறாய்? சண்டை தானே?"

"உங்கள் இரண்டாவது தம்பிக்கும் அம்மாவுக்கும் ஏதோ மனஸ்தாபம் போல் தெரிந்தது. நான் அங்கு நிற்கவில்லை. வந்துவிட்டேன்.."

"இந்த வீடு ஒரு நரகம். என்ன சொல்கிறாய்?"

விஜயா பேசாமல் இருந்தாள்.

"என்ன பேசாமல் இருக்கிறாய்?"

"என்னைப் பொறுத்தவரையில் சொர்க்கம். எனக்கு வேறு எங்கே இலவசச் சாப்பாடும், அறுநூறு ரூபாய் சம்பளமும் கிடைக்கும்?"

ஸ்வர்ணா சிரித்தாள். "நானும் கிட்டத்தட்ட உன்மாதிரிதான். இந்த வீட்டில் தஞ்சம் புகும்படியாகத்தானே நேர்ந்திருக்கிறது?"

"இந்த வீட்டுக்கு வர உங்களுக்கு உரிமை உண்டு."

"ரூபியின் அப்பாவை நான் மணக்கவே விரும்பவில்லை. நான் விரும்பியவரை மணக்க அம்மா சம்மதிக்கவுமில்லை. கட்டாயமாக என்மீது சுமத்தப்பட்ட கல்யாணம். அம்மாவுக்குத் தெரிந்தவருடைய பிள்ளையாம்.... என்னை வற்புறுத்தி மணப் பந்தலில் உட்கார வைத்தார்கள். எனக்கு இப்பொழுது சந்தோஷம்தான்... இயற்கை அம்மாவைப் பழி வாங்கி விட்டது.... நான் இப்பொழுது சுதந்திரமானவள்."

அவள் குடித்திருக்கிறாள் என்பது அவளிடமிருந்து வீசிய நெடியினின்றும் தெரிந்தது.

"நான் என்ன செய்கிறேன், எங்கே போகிறேன் என்பது பற்றியெல்லாம் அம்மாவால் இனிக் கேட்க முடியாது.... கேட்டால்... அவளைக் கொன்றுவிடுவேன். எஸ். ஐ வில் கில் ஹர்" ஸ்வர்ணாவின் தாடை இதைச் சொல்லும்போது இறுகியது. (தொடரும்)

இந்த இதழிலும் இதைத் தொடர்ந்து வரும் இதழ்களிலும் இந்த நாவலுக்கென்றே பிரத்தியேகமாகத் தில்லி சூழல்களைப் புகைப்படம் எடுத்து அளித்தவர்: தில்லி ராஜு.

வடியாது படியும் கேசச் சாயம்



புதிய ட்ரூ-டோன் ஜெல்

கெட்டியானது,
ஜெல்லி போன்றது...
நரைக்கும் கேசத்திற்கு
வெகு இலேசுவாக, ஒருசீரான
கருமைச் சாயமேற்ற மிக
நாசூக்கான வழி—சிந்தல்
சிதறல் இல்லை

தரமானதோர் தயாரிப்பு:
ஜே. கே. ஹெலன் கர்ட்டிஸ் லிட்.
பம்பாய் 400 038

சாயத்தோடு டெவலப்பரைக் கலக்கும்போது இறுகலாகி விடுகிறது ட்ரூ-டோன் ஜெல். கேசத்திலிருந்து நழுவி விழாது... சாயம் ஆழ ஊடுருவும் ஆதலால் இயற்கைப் பொலிவு தத்ரூபமாக அமையும். கேசப் பராமரிப்பிலே உலகத் தலைமை வகிப்போரான ஹெலன் கர்ட்டிஸ் அவர்களின் நிபுணத்துவத்தோடு உருவாக்கிய தயாரிப்பு இது.

* தவிரவும் கிடைப்பவை: ட்ரூ-டோன் லிக்விட் டைய் (திரவச் சாயம்)

இலவசம்
ரப்பர் கையுறைகள்:
விசேஷ அறிமுகச் சலுகையளிப்பு... சரக்குகள் இருப்பிலுள்ளவரை.

ட்ரூ-டோன் ஜெல்லிலும் இருக்கிறது உள்ளமைப்பான ஒரு ஹேர் கண்டிஷனர்!

தென்னிந்தியாவுக்கான விநியோகஸ்தர்கள்:
பாரி & கம்பெனி லிட்.

everest/39/JKH-tm

○ 'அஸனி ஸங்கேத்' என்ற படத்துக்கு 1973 பெர்லின் திரைப்பட... எழுத்தாளரும் ஆவார். இந்தக் கதையில் குற்றமற்ற ஹாஸ்யம் குதி நடை...



பர்ஸ் போயிற்று; கதை கிடைத்தது!


• சத்யஜித் ரே.

எழுத்தர்தான் என்றாலும் பதன் பாபு கற்பனை வளம் நிறைந்த மனிதர். கர்ஜன் பார்க்கில் அமர்ந்து அவர் எத்தனை கதைகளுக்கு அடிபோட்டிருப்பார். ஆயினும் அவருக்கு எழுத வேண்டும் என்ற ஆசை எழுந்ததில்லை. அதற்காக அவர் கதைகள் வீணாகின என்றும் சொல்வதற்கில்லை. ஏனென்றால் அவரது மகன் பில்டுவுக்குக் கதைகள் என்றால் உயிர். ஊனமான உடல் படைத்த அவனை மகிழ்விக்க அவருக்கும் ஒரே சாதனம் கதை. படித்த கதைகளுக்குப் பஞ்சம் வந்துவிடவே, அவரே கோதாவில் இறங்கிக் கதைகள் புனையும்படி ஆகிவிட்டது.

அன்று தமது கற்பனைக்கு உரம் கூட்ட, கங்கைக் கரையிலே ஏகாந்தமான இடம் தேடிச் சென்று அமர்ந்தார். கதையைக் கேட்டு மகிழ்கிற கோலத்தில் பில்டுவின் முகம் அவரது மனத் திரையில் நிழலாடவே, அவரது முகத்திலும் மகிழ்வு இழை ஓடியது.

''வணக்கம்!''

குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்; பூனை வேலியில் கரடி எங்கே புகுந்தது என்று! ஒல்லியாக ஒருவன் வந்து எதிரே நின்றுகொண்டிருந்தான். ஐம்பது வயது இருக்க





விழாவில் பெற்ற தங்கக் கரடி பரிசுடன் படத்தில் காணப்படும் ஸ்ரீ சத்யஜித்ரே, வங்க மொழியில் சிறந்த போடுகிறது என்றால் நையாண்டித்தனமும் நளினமாகவே இடம் பெற்றிருக்கிறது! புகைப்படம்: மதி

லாம் அவனுக்கு. பழுப்பு வண்ணக் கோட்டும் பேண்டும் உடுத்தியிருந்த அவன் தோளில் ஒரு சித்தான் பை தொங்கிக் கொண்டிருந்தது. மாலை மங்கலில் முகம் நன்றாகத் தெரியவில்லை. ஆயினும் விழிகளில் விசித்திர ஒளி பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. கழுத்தில் 'ஸ்டெதாஸ்கோப்' போன்றதொரு கருவி தொங்கிக் கொண்டிருந்தது. அதிலிருந்து இரண்டு ரப்பர்க் குழாய்கள் காதுகளில் பொருத்தப்பட்டிருந்தன. வந்தவன் உதடுகளில் புன்முறுவல் இழையோட, ''உங்களை 'டிஸ்டர்ப்' செய்துவிட்டேனோ? மன்னிக்கணும். உங்களை இதற்கு முன்பு இங்கு பார்த்ததாக நினைவில்லையே!'' என்றான்.

பதன் பாபுவுக்குக் கோபம் வந்தது, தமது தனிமையையும் கற்பனையையும் கலைக்க இப்படி ஒருவன் வந்து வலுக்கட்டாயமாக அறிமுகம் செய்து கொண்டு கழுத்தை அறுக்கிறானே என்று! வீட்டுக்குப் போய் பில்டுவுக்குக் கதை சொல்ல முடியாததற்குச் சாக்குப் போக்கு சொல்லியாக வேண்டுமே என்ற கவலை வேறு பிடித்துக் கொண்டது. ''இந்தப் பக்கம் நான் வந்ததில்லைதான்! வந்திருந்தாலும் இத்தனை பெரிய நகரத்தில் யாரை யார் அடையாளம் கண்டு கொள்ள முடியும்?'' என்றார்.

''அப்படியில்லை. இந்தப் பக்கம் நாலு வருஷங்களாக நான் வந்து கொண்டிருக்கிறேன்!'' என்றான் அவன்.

''அப்படியா?''

''அதுவும் இதே இடத்துக்கு. உண்மையில் இது என் சோதனைக் கூடம் ஆகும்!''

பதன் பாபுவுக்கு வியப்பான வியப்பு! கங்கைக் கரையிலே, திறந்த வெளியிலே சோதனைக் கூடமா? அப்படி என்ன சோதனை? இந்த ஆளுக்கு மறை இறை கழன்று இருக்குமோ? இல்லை, கடாவடிக்காரனாக இருப்பானோ? துஷ்டனைக் கண்டால் தூர விலகுவதே நல்லது! அதுவும் இன்று... இப்படிச் சிந்தித்தவராய் எழுந்தார்.

''என்ன எழுந்துட்டீங்க? தவறாக நினைத்துக்கொண்டு விட்டீர்களா, நான் கூறியதை!''

''இல்லே, இல்லே!''

''அப்புறம் என்ன அவசரம்? இப்பொழுது தானே வந்தீங்க!''

'குழந்தைகளைப் போலப் பயப்படுவதாவது? பக்கத்திலேயே பல படகோட்டிகள் இருக்கும்பொழுது?' என்று பதன் பாபுவுக்கு ஒரு சமயம் தோன்றியது. இருந்தாலும் ''நேரமாகிறது. இப்பொழுது புறப்பட்டால் தான் ஏழு மணிக்காவது வீடு போய்ச் சேரலாம்!'' என்றார்.

''அது மெய்தான்!'' வந்தவன் கம்பீரமாகக் கூறினான். ''நிமிஷம் மணி இந்தக் கணக்கையெல்லாம் நான் தாண்டியவன். உட்காருங்கள், சொல்கிறேன்!... சாதாரணமானவராக இருந்தால் உங்களை நான் உட்காரச் சொல்லப் போவதில்லை. உங்கள் முகத்தைப் பார்த்தாலே உணர்ச்சி மிக்கவர், கற்பனை செறிந்தவர் என்று தெரிகிறது. உலகத்தில் வாழும் தொண்ணூற்றொன்பது சதவிகித மனிதர்கள் போல நீங்கள் பணம் காசிலே குறியானவரோ, கணக்குப் பார்ப்பவரோ அல்ல. என்ன, நான் சொல்வது? மெய்தானே? நான் பொதுவாக யாரையும் பாராட்டுவதில்லை. என்னிடம் இல்லாத குணங்கள் பிறரிடம் அப்படி என்ன இருக்கின்றன, நான் அவர்களைப் பாராட்டுவதற்கு?''



என்று கேட்ட வண்ணம் காதுகளில் செருகியிருந்த குழாய்களைக் கழற்றினான். கருவியோடு அதைத் தரையின்மேல் வைத்து, ''தப்பித் தவறிப் பொத்தான் மேல் கை பட்டுவிட்டால் அனர்த்தம்தான்!'' என்றும் சொல்லி வைத்தான்.

வெகு நேரமாக உதட்டளவிலே ஒரு கேள்வியை உருட்டிக் கொண்டிருந்த பதன் பாபு தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு கேட்டார்: ''இது ஸ்டெதாஸ்கோப்பா, அல்லது....?''

''இலேசாகச் சொல்லி விட்டீர்களே! இந்தச் சோதனையில் நான் கண்டிருக்கிற சாதனைக்கு எழுத்து வடிவம் கொடுத்தால், வருங்காலத்துக்கு எத்தனையோ கொடுத்தவன் ஆவேன்.''

'சோதனை! சாதனை! இவன் என்ன சொல்ல விரும்புகிறான்?' — பதன் பாபு பிரமிப்பிலிருந்து மீளவில்லை. ''நீங்கள் எத்தனை வகைப் பயணிகளைப் பார்த்திருப்பீர்கள்?'' என்று அவன் அவரிடம் ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டான்.

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

''பயணிகளில் பல வகையா? ஆச்சரியமாயிருக்கிறதே! பயணிகள் என்றால் பயணிகள்! ஒரு வகைதானே?'' என்றார் பதன் பாபு.

''அதெப்படி? சின்னக் குழந்தையைக் கேட்டாலும் சட்டென்று சொல்லும், மூன்று வகை என்று! நீர்ப் பயணி, நிலப் பயணி, விண் பயணி! வாஸ்கோடி காமா, கேப்டன் ஸ்காட், கொலம்பஸ் முதலியவர்கள் நீர்ப் பயணிகள். ஹுவேன் ஸாங், லிவிங்ஸ்டோன், சொல்லப் போனால் நம்ம உமேஷ் பட்டா சாரியைக்கூடச் சேர்த்துக் கொள்ளலாம்.— இவர்கள் நிலப் பயணிகள். பலூனின் உதவி கொண்டு ஐம்பதினாயிரம் அடிகள் உயரம் பறந்தாரே புரொபஸர் பிகார்ட், அவர் முதற்கொண்டு நேற்றைய ககாரின் வரை விண் பயணிகள்! — என்னைக் கேட்டால் இவர்கள் எல்லாம் சாதாரணப் பயணிகள். நான் சொல்கிற பயணி நிலம், நீர், வெளி இவற்றையும் தாண்டியவர்கள்!''

''அவர்கள் யார்?''

''காலத்தைக் கடந்தவர்கள்!''

''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?''

''காலத்தோடு விளையாடி வருகிறவர்கள்! கடந்த காலத்துக்குப் போவார்கள். வருங் காலத்துக்கு வருவார்கள். அதாவது தங்கள் இஷ்டத்துக்கு இறந்த காலம், எதிர்காலம் எதிலுமே சஞ்சரிப்பார்கள். நிகழ்காலத்தில் நான் இருப்பதால் அதைப் பற்றிச் சிந்திக்கவில்லை!''

பதன் பாபுவுக்கு ஓரளவு புரிந்தாற்போலிருந்தது. ''ஓகோ! நீங்கள் எச். ஜி. வெல்ஸைப் பற்றிச் சொல்கிறீர்களா? அவர் குறிப்பிட்ட காலக்கருவி சைக்கிளின் வடிவத்தில் இருக்கும். அதில் உட்கார்ந்து கொண்டு ஒருபுறத்துக் கைப்பிடியை அழுத்தினால் கடந்த காலத்துக்குப் போகலாம். இன்னொரு கைப்பிடியை அழுத்தினால் எதிர்காலத்துக்குப் போகலாம். வெளி நாட்டிலே இதைப் படம்கூடப் பிடித்திருக்கிறார்கள் என்பதாக நினைவு!'' என்றார்.

வந்தவன் வினையாகச் சிரித்து, ''அது வெறும் கதை. நான் கூறுவதோ உண்மை நிகழ்ச்சி. என் சொந்த அனுபவம். எனது இந்தக் கருவி யாருடைய கற்பனையில் உதித்த கதையும் அல்ல!'' என்றான்.

கவிந்து வந்த இருளிலே அவனது விழிகளை எடை போட முயன்றார் பதன் பாபு.

வானத்தை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே அவன் கூறினான்: ''ஏறக் குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால், இங்கே, நாம் அமர்ந்திருக்கும் இதே இடத்தில் ஒரு முதலையும், அதன் முதுகில் ஒரு கொக்கும் உட்கார்ந்து வெய்யில் காய்ந்து கொண்டிருந்தன. தொலைவில் நின்று கொண்டிருந்த கப்பலின் மேல் தளத்திலிருந்து கப்பலோட்டி ஒருவன் முதலையைக் குறிபார்த்துச் சுட்டான். முதலைக்கு அந்தத் துப்பாக்கி ரவை யமனாக முடிந்தது. ஆனால் பதறிப் பறந்த கொக்கின் சிறகொன்று என் காலடியிலே வந்து விழுந்தது.'' தன் கூற்றுக்குச் சான்றாகத் தன் பையிலிருந்து ஒரு வெள்ளைச் சிறகை எடுத்து வைத்தான். அதைப் பார்த்த பதன் பாபு, ''இறக்கையில் இந்தச் சிவப்புப் புள்ளிகள் எங்கிருந்து வந்தன?'' என்று கேட்டார்.

''முதலையின் இரத்தம் தெறித்ததனால் கொக்கின் சிறகில் இக்கறை படிந்துள்ளது!'' என்றான் அவன்.

ஒருமுறை இறக்கையை எடுத்துப் பார்த்து விட்டு, பதன் பாபு அவனிடம் கொடுத்தார். இருட்டு வளரத் தொடங்கியது. வந்தவன் சட்டென்று ஒரு பொருளை எடுத்துக் கொடுத்து, ''இது என்ன, தெரியுமா?'' என்றான்.

முக்கோண வடிவில் ஓர் இரும்புத் துண்டு அது. ஒரு முனை கூராக இருந்தது.

''இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கடலில் பாய்மரக் கப்பல் ஒன்று சென்று கொண்டிருந்தது. வியாபாரக் கப்பல். பொருள்களுடன் பாலித் தீவுக்குப் போய்க் கொண்டிருந்தது....''

''நீங்கள்... நீங்கள்... அப்பொழுதும் இருந்தீர்களா?'' என்று பதற்றத்தோடு கேட்டார் பதன் பாபு.

''நிச்சயம். நான் இல்லாமல் வேறு யார் இருந்தார்கள்? இதே இடத்தில் அப்பொழுது ஓர் அரச மரம் இருந்தது. அதனடியில் நான் மறைந்து நின்று கொண்டிருந்தேன்!''

''மறைந்து நிற்பானேன்?''

''வேறு வழி? பயங்கரமான இடம். வரலாற்று ஏடுகளில் இதைப் பற்றி எங்கே எழுதியிருக்கிறார்கள்?''

''புலி, சிங்கம் நிறைந்த இடமா?''

''இல்லை, இல்லை! அதைக் காட்டிலும் பயங்கர... மனிதன் வாழும் இடமாக இருந்தது இது. உயரத்தில் நம் இடுப்புக்குக்கூட வரமாட்டான் அந்த மனிதன். சப்பட்டை மூக்கு. கறுப்பு நிறம். காதுகளில் கடுக்கன். மூக்கிலே இரும்பு வளையம். உடல் முழுவதும் பச்சை குத்தி யிருந்தது. கையிலே வில்லும் அம்பும். நஞ்சு தோய்ந்த அம்பு. இரும்பு சட்டி; ஒரே காட்டுமிராண்டி...''

''உங்கள் கண்களால் பார்த்தீர்களா?''

''ஆமாம். கேளுங்கள். வைகாசி மாதம். பெருத்த புயல் அடித்தது. புயலில் சிக்கிய கப்பல் என் கண்களுக்கெதிரிலேயே கடலில் மூழ்கியது.''

''அப்புறம்...?'' பதன் பாபு ஆவலை அடக்க மாட்டாமல் கேட்டார்.

''அந்தக் கப்பலில் இருந்த ஒருவன் எப்படியோ பலகை ஒன்றைப் பற்றிக்கொண்டு உயிருக்காகப் போராடியவாறு கரை சேர்ந்தான். ஆனால் அப்புறம்... ஐயோ...!''

''என்ன ஆயிற்று, என்ன ஆயிற்று?''

''அந்தக் காட்டுமிராண்டி அவன் மேல் பாய்ந்து கிழித்துப் போட்டான். அதைக் கடைசிவரையில் என்னால் பார்க்க முடியவில்லை. என் கருவியின் பொத்தானை அமுக்கி நான் நிகழ்காலத்துக்குத் திரும்பிவிட்டேன்!''

இதையெல்லாம் கேட்டு பதன் பாபுவுக்குச் சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை. ஒரு சாதாரணக் கருவி. இரண்டு ரப்பர்க் குழாய்கள்! அது இவ்வளவு இந்திர ஜாலங்கள் செய்யுமா?

வந்தவன் பதன் பாபுவின் மனநிலையைப் புரிந்து கொண்டான். ''ரப்பர்க் குழாய்களைக் காதுகளில் பொருத்திக் கொண்டு, வலது புறத்துப் பொத்தானை அழுத்தினால் நீங்கள்

வருங்காலத்துக்குப் போகலாம். இடதுபுறத்துப் பொத்தானை அமுக்கினால் கடந்த காலத்துக்குச் செல்லலாம். எந்த யுகத்தில் எந்தக் காலத்துக்குச் செல்ல விரும்பினாலும் அதற்கு இதோ குறியீடுகள் இருக்கின்றன. பாருங்கள், இவற்றில் வருஷம், மாதம், தேதி பொறித்திருக்கின்றன. உங்கள் இஷ்டத்துக்கு முள்ளைச் சுழற்ற வேண்டும். சில சமயம் இருபது முப்பது ஆண்டுகள் இப்படி அப்படி மாறிவிடக் கூடும். அதென்ன பெரிய விஷயம்? இது கொஞ்சம் விலை மலிவானதால் அவ்வளவு 'அக்யூரேட்'டாக இல்லை'' என்றான்.

''மலிவா?'' பதன் பாபு உண்மையிலேயே மலைத்தார்.

''பணத்தைக் கொண்டு பார்த்தால் இது மலிவுதான். ஆனால் இதை உருவாக்க ஐயாயிரம் விஞ்ஞானிகளின் கல்வியறிவு பயன்பட்டிருக்கிறது. இந்நாட்களில் மக்கள் மேலைநாடுகளில்தான் விஞ்ஞானம் வளர்ந்திருப்பதாக நினைக்கிறார்கள். அவர்கள் மடமையை என்னவென்பேன்? நம் நாட்டிலே அரிய பெரிய செயல்கள் பல செய்தாலும் தம்பட்டம் அடித்துக் கொள்வதில்லை. இங்கு புகழ் தேடும் ஆசை இருந்ததே கிடையாது. அன்றும், இன்றும், என்றுமே. இங்கு எந்தக் காரியமும் பிறர் கண்களில் படாமல் இலைமறை காய் மறைவாகவே செய்யப்படுகின்றன. அதனால்தான் எந்தச் சிறப்பியல்பு கொண்டவனையும் இனம் காண முடிவதில்லை. வரலாற்றை எடுத்துக் கொள்ளுங்களேன். அஜந்தாக் குகைகளைச் சமைத்தது யார்? அவன் பெயரைக் கூற இயலுமா? ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, மலையில் எல்லோராக் கோயில் எழுப்பிச் சிற்பங்கள் சமைத்தவர் யார்? யாராவது அவர்கள் பெயரைக் கூற முடியுமா? பைரவி ராகத்தைப் படைத்தவன் யார்? ருக்வேதத்தை இயற்றியவர் யார்? மகாபாரதம் வியாசர் பெயரால் வழங்குகிறது. ராமாயணம் வால்மீகியின் பெயரால் புழங்குகிறது. என்றாலும் இந்த இரண்டு மகா காவியங்களும் உருவாவதில் எத்தனை பெயரற்ற பெரியோர்களுக்குப் பங்கு உண்டு என்பதற்கு ஏதாவது ஒரு கணக்கு வழக்கு உண்டா? மேலை நாடுகளில் கணிதத்தின் பெரும் கோட்பாடுகளைப் பின்பற்றிப் பல அற்புதக் கண்டுபிடிப்புகள் நிகழ்கின்றன. ஆனால் அந்தக் கணிதத்துக்கெல்லாம் ஆணிவேர் எது என்பது உங்களுக்குத் தெரியுமா?''

கணிதத்துக்கு ஆணிவேரா? — பதன் பாபுவுக்குச் சல்லி வேர் கூடத் தெரியவில்லை.

''பூஜ்யம்'' அவனே முந்திக் கொண்டு விடையளித்தான்.

''பூஜ்யமா?''

''ஆமாம், பூஜ்யமேதான். ஒன்று இரண்டு மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பூஜ்யம். இந்தப் பத்து எண்களைக் காட்டிலும் பெரிய எண்கள் கிடையாது. பூஜ்யம் என்றால்... 'சூன்யம், ஒன்றும் இல்லை' என்று பொருள். ஒன்றுமில்லாத இந்தப் பூஜ்யத்துக்கு உள்ள மதிப்பு? ஒன்றுக்குப் பின் ஒரு பூஜ்யத்தைப் போட்டால் பத்து; ஒன்பதைக் காட்டிலும் பெரியது. யோசிக்கப் போனால் உங்களுக்கு எதுவும் விளங்காது. ஆனால் கணிதத்தில் இந்த விதி முறையைத்தான் பின்பற்றி வருகிறோம். ஏன் பின்பற்றுகிறோம்? இதன் காரணத்தை நம்மால் கூறமுடியாது. ஆனால் உலகத்துக் கணக்கு வழக்குகள் அனைத்தும்—கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக்கல், தசாம்சம், அல்ஜீப்ரா, பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, அஸ்ட்ரானமி, அணு, ராக்கெட், ரேடியோ விடி — எதை எடுத்தாலும் பத்து என்னும் இந்த எண் இல்லாமல் காரியம் நடைபெறாது. இந்த எண் எங்கிருந்து வந்தது, தெரியுமா? நமது இதே இந்தியாவிலிருந்து. இங்கிருந்து அரேபியா, அரேபியாவிலிருந்து ஐரோப்பா, அப்புறம் உலகம் முழுதும் பரவிவிட்டது. புரிந்ததா? இதற்கு முன் என்ன இருந்தது, சொல்லுங்கள்!''

பதன் பாபு 'ஒன்றுமில்லை' என்பதுபோலத் தலையசைத்தார். உண்மையில் தமக்கு அறிவு 'பூஜ்யம்' என்பதை எண்ணும்போது அவருக்கு உள்ளத்தை ஏதோ நெருடியது.

''முன்னால் ரோமன் முறை இருந்தது. எண்ணிக்கை ஏதும் இல்லை. ஓர் எழுத்து, அதுவும் ஒரு கோடு. இந்தக் கோட்டைக் கூட்டிப் பெருக்கி வகுப்பதென்றால் விஞ்ஞானிகளின் தலை வழுக்கை விழுந்துவிடும். சந்திரனுக்கு ராக்கெட் அனுப்புவது கூட ஆயிரம் ஆண்டுகள் அப்பால் தள்ளிப் போயிருக்கும். யோசித்துப் பாருங்கள்! நம் நாட்டு ஊர் பெயர் தெரியாத ஒரு மனிதனது மூளை பலம் கணிதத்துக்கு விதிமுறை வகுத்து விஞ்ஞானத்தையே வளர்த்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது!'' வந்தவன் இதைக் கூறி நிறுத்தினான்.

இதே சமயம் மாதா கோயில் மணி அடித்து நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது என்பதை நினைவுறுத்தியது. ஆயினும் வந்தவன் விடவில்லை. ''முன்காலத்தைப் போலவே இந்தக் காலத்திலும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களைப் பற்றி யாருக்கும் எதுவுமே தெரியாது. அவர்கள் மேலை நாட்டு விஞ்ஞானிகளில் எவருக்குமே தாழ்ந்தவர்கள் அல்ல. காகிதம், பென்சில், நோட்டுப் புத்தகம், சோதனைச் சாலை எதுவுமே அவர்களுக்குத் தேவையில்லை. பேசாமல் உட்

வாக்குச் சாதுரியம்!



இரண்டாம் சார்லஸ் மன்னர் ஒரு சிறந்த கவிஞரை அழைத்து அவரிடம் தாம் எழுதிய 'கவிதை'யைக் கொடுத்துக் கவிஞரின் கருத்தைக் கேட்டார்.

கவிஞர் கூறினார்: ''பெருமை மிக்க மன்னர் அவர்கள் விரும்பினால் எந்தச் செயலைத்தான் நிறைவாகச் செய்து முடிக்க முடியாது? தரக் குறைவான கவிதையை எழுதியே தீரவேண்டும் என்று முடிவு செய்து அப்படியே எழுதியும் விட்டீர்களே!''

(ஆதாரம்: திரு தே. ப. பெருமாள் எழுதிய ''அறிஞர்களின் வாழ்விலே'' - ''ராதா''



சிரிப்புக்கள் பலவிதம்!

லார்ட் செஸ்டர் ஃபீல்டிடம் ஒருவர் கூறினார்: ''கடவுளின் படைப்பில் மனிதன் ஒருவன்தான் சிரிக்கும் தன்மை பெற்றிருக்கிறான்.''

செஸ்டர் ஃபீல்ட் கூறிய பதில்: ''உண்மைதான். சிரிப்புக்கு உள்ளாகிறவனும் மனிதன் ஒருவன் தான்!''
-சி.ஆர். திருவேங்கடத்தான்

கார்ந்து சிந்தனை செய்வார்கள். சிந்தையில் தேக்கிப் பெரும் பெரும் பிரச்னைகளுக்குமே தீர்வு காண்பார்கள்!'' என்றான்.

''அவர்களில் நீங்களும் ஒருவரோ?'' என்று மெதுவாகக் கேட்டார் பதன் பாபு.

''இல்லை. ஆனால் அதிர்ஷ்டவசமாக அத்தகைய ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இளமையில் நான் தனியனாகக் காடு மலைகளில் எல்லாம் கால் நடையாகவே சுற்றினேன். அங்கே கணிதானந்தர் என்ற பெயருள்ள பெரியாரது தரிசனம் கிடைத்தது. அவர் கணக்கில் வல்லுநர். எழுதியே எத்தனையோ கணக்குகளுக்கு விடை கண்டிருக்கிறார். முப்பது மைல் சுற்றளவுக்குப் பாறைகளில் எல்லாம் அவர் விடை கண்ட பல கணக்குகள் கிடைத்தன. அவர் தமது குருவின் அருளினால் கடந்த காலத்தில் பயணம் செய்யும் இரகசியங்களை அறிந்திருந்தார். அவர் மூலம் எவரெஸ்டைக் காட்டிலும் ஐயாயிரம் அடி உயரமுள்ள மலைச் சிகரம் இருந்ததையும், ஏறக்குறைய எழுபத்து நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த பயங்கரப் பூகம்பத்தினால் அம்மலைச் சிகரம் உடைந்து விழுந்ததையும், அதன் பலனாக இமயத்தின் வடபுலத்தில் ஒரு பிளவு ஏற்பட்டிருப்பதையும், அதிலிருந்து பெருகிய அருவிதான், இதோ எதிரே ஓடும் ஆற்றுக்குப் பிறப்பிடம் என்றும் கேட்டு அறிந்தேன்.''

''உண்மையில் ஆச்சரியமான விஷயம் தான்!'' நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு பதன் பாபு கேட்டார்: ''இந்தக் கருவி அந்தக் கணிதானந்தர் தந்ததுதானோ?''

''ஆம், ஆனால் தந்தார் என்று கூறக் கூடாது. இதை உருவாக்கும் முறையை அவர் எனக்குக் கற்றுத் தந்தார் என்றுதான் கூற வேண்டும். அவர் சொன்னபடி இதைச் செய்தவன் நான்தான். இந்தக் குழாய்கள் இருக்கின்றனவே, இவை ரப்பரால் ஆனவையல்ல. மலைப் பகுதியில் காணப்படும் ஒருவகை மரத்தின் விழுதுகள். இந்த இயந்திரத்தின் எந்த உறுப்புக்காகவும் எந்தக் கடைத் தெருவுக்கும் போய்த் திரிய வேண்டியதில்லை. முற்றிலும் இயற்கை அளித்த உறுப்புக்களே. டயலில் சில குறிகள் தென்படுகின்றனவே, அவற்றை நானேதான் போட்டேன். கருவி முற்றிலும் கையால் செய்யப்பட்டது. அதனால் சிற்சில சமயம் பழுதுற்று விடுகிறது. பல நாட்களாக வருங்கால 'ஸ்விட்ச்' இயங்கவில்லை.''

''நீங்கள் வருங்காலத்துக்கும் சென்றிருக்கிறீர்களா?'' பதன் பாபு கேட்டார்.

''ஒரே ஒரு முறை போயிருக்கிறேன். அதுவும் வெகு தொலைவுக்கு அல்ல; முப்பதாவது நூற்றாண்டுக்குக் கிட்டத்தட்ட....''

''அங்கு என்ன கண்டீர்கள்?''

''என்ன பார்க்கிறது? இங்கே, இதே இடத்தில் அகலமான சாலை ஒன்று உருவாகியிருந்தது. அகலம் என்றால் எத்தனை அகலம்! நான் சாலையில் தனியனாக நின்று கொண்டிருந்தேன். ஒரு விசித்திர வாகனத்தின் கீழ் நசுங்கிப் போக விருந்தேன். நல்ல வேளை, என் உயிர் கெட்டியாக இருந்தது; பிழைத்தேன். அத்தனை அகலச் சாலையிலும் ஒரு வனைக் குறி பார்த்து வரக் கூடிய அளவுக்கு வாகன வசதி பெருகியிருப்பதைக் காண எனக்குத் தலை சுற்றியது. அதற்கு மேல் போக எனக்குத் துணிவு ஏற்படவில்லை.''

''கடந்த காலத்தில் எவ்வளவு தூரம் போனீர்கள்?''

''கூறுவது சிரமம். ஏனென்றால் படைப்பின் அடியைத் தொட்டுப் பார்க்க இன்னும் இந்தக் கருவியால் முடியவில்லை. ஆனாலும் மிகவும் முயன்று வெகு தொலைவுக்குப் போய்ப் பார்த்திருக்கிறேன். அப்பொழுது பூமியிலே ஊர்வன தோன்றியிருந்த காலம்.''

பதன் பாபுவுக்குத் தொண்டை வறண்டது.

''பாம்பா?'' என்று கேட்டார்.

''இல்லை. பாம்பு என்ன பெரிசா?''

''பின்னே?''

''பிருந்தோசரஸ், டைனோசரஸ்...''

''அப்படியானால் நீங்கள் வெளிநாட்டுக்கும் போனீர்களா?''

''வெளிநாட்டுக்குப் போவானேன்? இந்தப் பிராணிகள் நம் நாட்டில் இருக்க முடியாது என்று உங்கள் நினைப்பா?''

''அப்படியானால் இருந்தனவா?''

''கட்டாயம் இருந்தன. இதோ இந்த இடத்திலேயே!''

பதன் பாபுவுக்குக் குலைநடுக்கம் எடுத்தது.

''அப்பொழுது கங்கை நதி கைலாசத்திலிருந்து இறங்கி வராத காலம். இங்கு கரடுமுரடான பாறைகள் மட்டுமே இருந்தன. நாற்புறமும் காடுகள். பாசி நிறைந்த சின்னஞ் சிறு குட்டை ஒன்று இருந்தது. இருட்டில் பேருடல் படைத்த ஒரு பிராணியின் இரண்டு வட்டக் கண்கள் பளிச்சென்று பல்புபோல் சுடர் விட்டன. சில 'டிராகு'வின் படம் பார்த்திருக்கலாமே நீங்கள்? அதே போன்று ஒரு பிராணி, 'ஸ்டெகோசரஸ்.' இலைகளை மேய்ந்தவாறு நீரில் நீந்திக் கொண்டிருந்தது. அது ஆட்கொல்லி அல்ல என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் பயத்தில் உயிர் உதடுகளுக்கு வந்துவிட்டது. நிகழ்காலத்துக்கு வந்து விடலாம் என்ற எண்ணத்தில் பொத்தானை அமுக்கப் போனேன். தலைக்கு மேலே இறக்கைகள் அடிப்பது போன்ற ஒலி கேட்டது. அண்ணாந்து பார்த்தேன். ஒரு 'டெரோடைக்டில்' பறந்து வந்து கொண்டிருந்தது. அது மிருகம் இல்லை, பறவையும் இல்லை. இன்னும் சொல்லப் போனால், வௌவாலும் இல்லை. அந்த டெரோடைக்டில் ஸ்டெகோசரஸ் மீது பாய்ந்தது. நான் காரணம் தேடிக் கண்டு

பிடிப்பதற்குள்ளாகப் பாறை மீது பளபளக்கும் முட்டை ஒன்றைக் கண்டேன். அந்த இரண்டும் சண்டை போடுவதை மறந்து ஆசை வசப்பட்டு முட்டையைப் பதுக்கிக் கொண்டேன். ஹ...ஹ...ஹ !'' அவன் வாய் விட்டுச் சிரிக்கலானான்.

பதன் பாபுவுக்குச் சிரிப்பு வரவில்லை. 'கதை உலகத்துக்கு வெளியிலும் கூட இது போன்ற நிகழ்ச்சிகள் நிகழ்வது உண்டா?' என்று அவர் யோசிக்கலானார்.

''பரிசோதித்துப் பார்க்க இந்தக் கருவியை நான் உங்களுக்குத் தரத் தயார். ஆனால்...''

''ஆனால் என்ன?''

''பலன் கிட்டுமா என்பது சந்தேகம். ஆயினும் தீமை எதுவும் நிகழ்ந்து விடாது என்பது மட்டும் நிச்சயம். கையில் எடுத்துப்பாருங்கள்'' என்று கூறி அவன் குழாய்களை பதன் பாபுவின் காதுகளில் பொருத்தினான்.

பதன் பாபு கண்களை மூடிக் கொண்டு கடவுளைப் பிரார்த்தித்தார். 'எனக்கு ஏமாற்றம் தராதே, ஆண்டவனே!' என்றும் வேண்டிக்கொண்டார்.

குழாய்களை பதன் பாபுவின் காதுகளில் செருகிய பின் அவன் ஸ்விட்சைப் போட்டான். அவரது வலது கை மணிக்கட்டைப் பிடித்துக் கொண்டு ''சிறிது உங்கள் நாடித் துடிப்பைக் கணக்கெடுக்க வேண்டும்!'' என்றான்.

பதன் பாபு நடுங்கும் குரலில், ''எங்கே போக? கடந்த காலத்துக்கா? வருங்காலத்துக்கா?'' என்று கேட்டார்.

''கடந்த காலத்துக்கு; கிறிஸ்துவ சகாப்தத்துக்கு ஏழுநூற்றாண்டுகளுக்கு முன் போங்கள்! கண்களை மூடிக்கொள்ளுங்கள்!'' என்றான் அவன்.

பதன் பாபு துடிப்புடன் சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். பிறகு, ''ஒன்றும் நிகழக் காணோமே!'' என்றார்.

''நிகழ்ச்சி கோடிக்கு ஒரு முறை நடைபெறுகிறது!'' என்று கூறிய வண்ணம் அவன் கருவியை அவர் கழுத்திலிருந்து கழற்றி விட்டான்.

''ஏன்?'' பதன் பாபு கேட்டார்.

''என் தலைமயிரும் தங்கள் தலைமயிரும் எண்ணிக்கையில் ஒன்றாயிருந்தால் இந்தக் கருவி வேலை செய்திருக்கும்!'' என்றான் அவன்.

பதன்பாபு காற்றுப் போன பலூன் ஆனார். 'பொன்னான தருணம் போய்விட்டதே !' என்ற சிந்தனையில் ஆழ்ந்த அவரிடம், ''இந்தாருங்கள். இதைப் பாருங்கள் !'' என்று பளபளப்பான, வழுவழுப்பான, கனமான உருண்டைப் பொருள் ஒன்றைத் தன் பையிலிருந்து எடுத்து அவர் கையில் கொடுத்தான். அதையே அவர் வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தார்.

''திருப்பித் தாருங்கள். நேரமாகிவிட்டது. நான் போகணும்!'' என்றான் அவன்.

பதன் பாபு விந்தை மிகு டேரோடைக்டில் முட்டையைத் திருப்பித் தந்தார், அரை மனசோடு ! இந்த மனிதன் என்னவெல்லாம் விந்தைகளைக் கண்டிருக்கிறானோ என்று வியந்த அவர், ''மீண்டும் இங்கு சந்திப்போம் அல்லவா ?'' என்று கேட்டார்.

ருஷ்யத் துணுக்குகள்



o ''அப்பா, நான் ஒரு வயலின் செய்திருக்கிறேன்!''

''சபாஷ்! அதற்கான தந்திகள் எங்கேயிருந்து கிடைத்தன?''

''பியானோவிலிருந்து!''

o ''மகனே! நாம் நடக்கலாமா, அல்லது பஸ்ஸில் போகலாமா?''

''நடக்கலாம் அப்பா! என்னைத் தூக்கிக்கொள்ளுங்கள்!''

oooooooooooooooooooooo

''பார்ப்போம். எனக்கு வேலைகள் அதிகம் இருக்கின்றன. வரலாற்று உண்மைகளைச் சோதித்துப் பார்த்தாக வேண்டும். கல்கத்தா எப்படி உருவாயிற்று என்பதை ஆரம்பத்திலிருந்தே ஆராய வேண்டும்! வருகிறேன்—ஜய்ராம்ஜீ கீ!'' என்று விடைபெற்றான்.

பதன் பாபு டிராமில் ஏறினவர், அது அடுத்து நிற்கும் இடத்திலேயே இறங்கும்படி ஆகிவிட்டது. ஆம், சட்டைப் பையிலிருந்த பர்ஸைக் காணோம் !

வீட்டுக்கு நடையைக் கட்டும் பொழுது நீண்ட ஒரு நெடு மூச்சு விட்டுச் சிந்தனையில் இறங்கிய பதன் பாபுவுக்கு ஒரு விஷயம் தெள்ளத் தெளிய விளங்கி விட்டது. கண்களை மூடிக் கொண்டு கிறிஸ்துவுக்கு முன் ஏழாம் நூற்றாண்டுக்கு முந்திய சாலையிலே சுற்றி மகிழ அவர் முயன்று கொண்டிருந்த வேளையிலே நாடி பிடித்துப் பார்க்கும் சாக்கில்....

'சேச்சே! எத்தகைய முட்டாள் ஆகிவிட்டேன், நான் !'

பதன் பாபு அவனை வையவில்லை; தம்மைத் தாம் நொந்து கொண்டார்.

இரவு எட்டு மணிக்கு வீடு சேர்ந்த அவரைக் கண்டதும் பில்டுவின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

பதன்பாபு இதற்குள் தம்மைச் சமாளித்துக் கொண்டிருந்தார். சட்டைப் பொத்தானைக் கழற்றியவண்ணம், தன் மகனைப் பார்த்து, ''இன்று உனக்குப் பெரிய நல்ல கதை சொல்லப் போகிறேன்!'' என்றார்.

''நிசமாகவா, அப்பா ? நல்ல கதையா ? பெரிய கதையா ? யார் கதை அப்பா !'' பில்டு தொண தொணத்தான்.

'' 'டேரோடைக்டிலின் முட்டை,'-உனக்கு ரொம்பப் பிடிக்கும்!'' என்றார்.

உண்மையில் பில்டுவுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைக் கண்ட பொழுது பதன் பாபுவுக்கு ஐம்பத்தைந்து ரூபாய் முப்பத்திரண்டு பைசா திருட்டுப் போனது பெரிதாகவே படவில்லை !

பரதநாட்டிய அரங்கேற்றம்



குமாரி ஷாலினி கோபாலின் பரதநாட்டிய அரங்கேற்றம், 9-3-75 அன்று பம்பாய் - மாதுங்கா, போதார் காலேஜ் ஹாலில் விமரிசையாக நடந்தேறியது. குமாரி ஷாலினி கோபால், ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பரதநாட்டியக் கலாமந்திரின் மாணவி. அவரது உணர்ந்த அபிநயங்களும், லயம் தவறாத பாத எடுப்புகளும், துரிதமான பாவ மாற்றங்களும் ரசிகப்பெருமக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றன. தலைமை வகித்த போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் திரு வி. இ. அருணாசலம் குமாரி ஷாலினியை வாழ்த்தி அவளுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது என்று கூறினார்.

தலைவர் தரிசனம். 12



ஆர். மார்க்கபந்து

வன்னியர் குல க்ஷத்திரிய தாலுக்கா மகாநாடு ஒன்று வேலூரை அடுத்த பள்ளிகொண்டாவில் நடந்தது. அதில் பங்கேற்று உரை நிகழ்த்தப் போனபோதுதான் முதல் தடவையாக திரு மார்க்கபந்து அவர்களைச் சந்தித்தேன்.

அப்போதுதான் அவர் சட்டப் படிப்பை முடித்துக் கொண்டு வேலூர் நகரத்தில் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டிருந்தார்.

மார்க்கபந்து அவர்கள் சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். வேலூர் -பெங்களூர் சாலையில் உள்ள மேல்முகையூர் என்பது இவருடைய கிராமம். வசதியான குடும்பம் என்று சொல்வதற்கு இல்லை. ஆனாலும் இவருக்குப் படிக்க வேண்டும் என்ற ஆசை. விவசாய வேலைகளுக்குக் கூலி ஆள் வைத்துச் சம்பளம் கொடுக்க முடியாத நிலை என்பதால், இவரும் தம் பங்குக்குக் குடும்பத்தின் இதர உறுப்பினர்களுடன் சேர்ந்து காலை வேளைகளில் வயலில் வேலை செய்துவிட்டுப் பிறகுதான் பள்ளிக்கூடம் போவார். கல்லூரியில் படித்த போதும் இதே நிலைதான்.

அதனால் தானோ என்னவோ, பின்னால் உழைப்பாளர் கட்சியின் வட ஆர்க்காடு மாவட்டத் தலைமைப் பதவி அவரைத் தேடி வந்தது. 1972ம் ஆண்டில் மாநிலத் தலைவரானார்.

ஆரம்ப நாட்களில் இப்படி உழைத்து உழைத்துப் பெற்ற அனுபவம் இப்போது பல வகைகளில் இவருக்கு உதவுகிறது. அதிகாலை ஐந்து மணிக்கே தம் தொழில் சம்பந்தமான அலுவல்களை ஆரம்பித்து விடுவார். இரவு இரண்டு மணி வரைகூட சில நாட்கள் தம் வேலையைத் தொடர்ந்து செய்வார்.

பிரபல வழக்கறிஞர், வி.ஸி. சதாசிவ முதலியார் அவர்களிடம் ஜூனியராக இருந்து பெற்ற பயிற்சி இப்போது இவரிடமே பல ஜூனியர் வழக்கறிஞர்கள் வந்து உதவி செய்யும் அளவுக்கு இவரை உயர்த்தியிருக்கிறது.

தாம் படிக்கும் போது பட்ட கஷ்டங்களை மனத்தில் கொண்டு இப்போது முந்நூறு மாணவர்கள் தங்கிப் படிக்க ஒரு விடுதியைக் கட்டி முடிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். வேலூரில் இருக்கும் நாட்களில் தினசரி இரண்டு மணி நேரத்தையாவது ஒதுக்கிக் கொண்டு, அந்த விடுதி மாணவர்களைச் சந்தித்து அவர் குறைகளைக் கேட்டு நிவர்த்திக்க வழி செய்கிறார்.

வட ஆர்க்காடு மாவட்ட வன்னியர் குல க்ஷத்திரிய சங்கத் தலைவர் என்ற முறையில், விரிஞ்சிபுரம், பள்ளிகொண்டா, திருவண்ணாமலை போன்ற இடங்களில் கல்யாண மண்டபங்களைக் கட்டி அவை மூலம் கிடைக்கும் வருவாயை, வன்னிய குல மாணவர்கள் கல்வி வசதிக்குச் செலவு செய்ய வகை செய்திருக்கிறார். ஒரு கல்லூரி கட்டும் யோசனையும் இருக்கிறது. நிலம் வாங்கியாகி விட்டது.

கட்சியின் பெயர் உழைப்பாளர் பொது நலக் கட்சி என்றுதான் இருந்தது. சில ஆண்டுகளுக்குமுன் நடந்த விவசாயிகள் போராட்டத்தைத் தொடர்ந்து, கட்சி நிர்வாகிகளிடையே தோன்றிய சில சிக்கல்களினால் கட்சியின் பெயர் உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி என்று மாற்றப்பட்டது.

நாட்டில், மேட்டுக்குடியினராகவும் இல்லாமல், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தையும் சேராமல், மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ள பெரும்பான்மையான மக்களின் வாழ்வை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டதுதான் எங்கள் கட்சி.

கேட்டு எழுதியவர்:

கோமதி சுவாமிநாதன்.

சொல்பவர் குலசேகரன்



தலைவர் தரிசனம் 13

சத்தியவாணிமுத்து



சொல்பவர்

ஜீ. குசேலர்



எனக்குச் சத்தியவாணி முத்து அம்மையாரின் குடும்பத்தினரை முப்பது வருடங்களுக்கு மேலாகவே தெரியும். இவருடைய பெற்றோர்கள் பௌத்தசமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அந்த நாளைய சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டிருந்தவர்கள். இவர் கணவர் திரு முத்து ஆரம்ப நாட்களில் காங்கிரஸ்காரராக இருந்தவர். ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்தினால் பெரியார்பால் ஈர்க்கப்பட்டவர்.

சத்தியவாணி - முத்து திருமணத்துக்குத் தலைமை தாங்கியவர் திரு வி. க. திருமண நிகழ்ச்சி முடிந்தவுடன் வந்திருந்தோருக்கு வந்தனோபசாரம் கூறியது மணப் பெண் சத்தியவாணி! 1943-ம் ஆண்டில் இந்த மாதிரி ஒரு மணப் பெண்ணே தன் திருமணத்தில் வந்தனோபசாரம் சொல்வது ஓர் ஆச்சரியமான, துணிகரமான நிகழ்ச்சி. திரு வி. க. இந்தப் பெண்ணுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று பாராட்டினார்.

பெரியாரிடமிருந்து பிரிந்து வந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்த போது அம்மையாரும் அவர்கள் கூடச் சேர்ந்து கொண்டார். குடும்ப பாசத்தால் இணைக்கப்பட்டவர்கள் போல் கொள்கையின் அடிப்படையில் ஒன்றுசேர்ந்தார்கள்.

அப்போது கட்சிப் பிரசாரத்துக்காகச் சத்தியவாணி முத்து நிறைய சுற்றுப் பிரயாணங்களை மேற்கொள்வார். அண்ணா அவர்கள்கூட ''ரொம்பத் தள்ளியிருக்கும் குக்கிராமங்களுக்கெல்லாம் கூட்டங்களுக்குப் போக வேண்டாம். தாலூக்கா தலை நகர்களுடன் நிறுத்திக் கொள்ளலாம். அதற்கும் துணையோடு போக வேண்டும்'' என்று கண்டிப்புடன் வற்புறுத்தியிருக்கிறார்.

ஆனாலும் ஒரு சந்தர்ப்பத்தில் திருக்கழுக்குன்றத்துக்கு அருகிலிருக்கும் கிராமம் ஒன்றுக்குப் போய்விட்டு, திரும்பி வரப் போக்குவரத்து வசதி இல்லாத வேளையில், சலவை மூட்டைகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்த கைவண்டிக்காரர், அதில் இவரை அமர்த்தித் திருக்கழுக்குன்றம் வரை இழுத்து வந்தாராம்.

ஆடுதுறை ரயில் நிலையத்தில் இவருக்கு மற்றோர் அனுபவம். சென்னையிலிருந்து பயணச் செலவு கொடுத்து இவரை ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைத்திருந்தார்கள். இவரும் போனார். கூட்டம் முடிந்த பிறகு நிர்வாகிகளில் சிலர் இவரைத் திரும்ப ஊருக்கு அனுப்ப ரயில் நிலையத்துக்கு வந்தார்கள். இவரை ஒரு மரத்தடியில் அமர்த்திவிட்டுத் தாகத்துக்கு ஒரு சோடாவையும் வாங்கிக் கொடுத்துவிட்டு, டிக்கட் வாங்கி வருவதாகப் போனார்கள். போனவர்கள் போனவர்கள்தான்! திரும்பி வரவேயில்லை. வண்டி வருவதற்கான அறிவிப்பும் செய்தாயிற்று. அப்புறம்தான் தன்னைக் கூட்டத்துக்கு அழைத்தவர்கள் நழுவிவிட்டார்கள் என்று தெரிந்தது. ரயில் நிலையத்திலிருந்த மாற்றுக் கட்சிக்காரர்களின் கேலிப் பார்வைக்கு வேறு இலக்காக வேண்டியிருந்தது. காலி சோடா புட்டியைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, சொந்தச் செலவில் டிக்கெட்டும் வாங்கிக் கொண்டு ஊர் திரும்பி வந்தார்.

''இதெல்லாம் அந்த நாட்களில் ரொம்ப சகஜம். அழைக்கும் போது இருக்கும் உற்சாகம் திருப்பி அனுப்பும் போது இருக்காது. இப்படியெல்லாம் அந்த நாட்களில் கட்சியை வளர்த்தோம்'' என்று இவர் சொல்வார்.

கொள்கையின் அடிப்படையில்தான் இப்போது பல காலம் உறவாடிய கட்சியிலிருந்து பிரிந்து வந்து தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தை இவர் உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உள்ளூற இந்தப் பிரிவு வருத்தத்தின் சாயையைத் தோற்றுவித்தாலும் ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட சமூக சகோதரர்கள் இந்த முடிவை ஏற்றுத் தெரிவித்த வாழ்த்துக்களும் உற்சாகமும், அந்த வருத்தத்தைப் போக்கின.

கர்ப்பமாக இருந்த போதும் இவர் சிறை வாசத்தை மேற்கொண்டிருக்கிறார். கைக் குழந்தையுடனும் சிறையில் காலத்தைப் போக்கியிருக்கிறார். ஏழாண்டு காலம் ஹரிஜன நலத் துறை மந்திரியாயிருந்திருக்கிறார்.

மந்திரி பதவி போய்விட்டதே என்று இவர் மனம் உடையவே இல்லை. ஆனாலும் கட்சிக்கு எதிர்த் தரப்பில் இருந்தால் இன்னும் நல்ல முறையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு, அவர்களுடைய நியாயமான உரிமைகளைப் பெற உதவலாம் என்று உறுதியாக நம்புகிறார்.



சென்ற ஆண்டு போலவே இந்த வருஷமும் அமரர் கல்கி நினைவாகச் சிறுகதைப் போட்டி நடத்தத் தீர்மானித்துள்ளோம். எழுத்துத் துறையில் புதிதாக அடியெடுத்து வைக்க விரும்புகிறவர் முதல் முதுபெரும் எழுத்தாளர் வரை அனைவரும் இதில் கலந்து கொண்டு தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தை வளப்படுத்த வேண்டுகிறோம்.

முதல் பரிசு பெறும் சிறுகதை ஆகஸ்டு 3ந் தேதி கல்கி இதழில் பிரசுரமாகும்.

அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப் போட்டி

முதல் பரிசு ரூ. 1000
இரண்டாம் பரிசு ரூ. 500
மூன்றும் பரிசு தலா ரூ. 250 வீதம்
(இரண்டு கதைகளுக்கு ரூ. 500)

பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் இதர கதைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 வழங்கப்படும்

அறிமுக எழுத்தாளருக்கு ஒரு 'போனஸ்' உண்டு!


முடிவு தேதி 30-6-75

கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய தபால் பில்லைகள் ஒட்டித் தம் முகவரியிட்ட உறைகளைக் கதைகளுடன் வைத்து அனுப்புதல் வேண்டும். கடிதப் போக்குவரத்து கிடையாது.

சிறுகதைகள் கல்கியில் நாலு அல்லது ஐந்து பக்கங்களில் அடங்குவதாய் இருப்பது நலம்.

ஆசிரியர், கல்கி
சேத்துப்பட்டு, சென்னை-600031



"யாரு ராகவ்வா? சுந்தரம் பேசறேன்."

"என்னடா கண்டு! ரொம்ப நாளா இனப் பக்கமே ஆளைக் காணோம்? ரம்மியிலே அன்னிக்குப் பத்து ரூபா கோட்டை விட்டதிலே பயந்துட்டியா என்ன?"

"அதெல்லாம் இல்லேடா! அசந்தர்ப்பமா ஒரு காரியம் நடந்து போச்சு!".

"என்னடா, என்ன நேர்ந்தது?"

"சொல்லவே கூச்சமாயிருக்குடா."

"இதைக் கூறவா எனக்கு ஃபோன் பண்ணினே? மனசு விட்டுப் பேசணும்னு தோணித்தானே என்னைக் கூப்பிட்டே?"

"வாஸ்தவம்."

"பிறகு மென்று விழுங்குவானேன், சொல்லித் தொலே!"

"ஒண்ணுமில்லேடா, என் ஒய்ஃப்..."

"வத்ஸலாவுக்கு என்ன? பத்து நாட்கள் முன்னாடி பார்த்தப்போகூட நன்னாத்தானே இருந்தா? கொஞ்சம் உடம்பு பூசின மாதிரி கூட இருந்தது. நாளுக்கு நாள் அழகாயிண்டு வரேன்னு என் பெண்டாட்டிகூடச் சொல்லிச் சந்தோஷப்பட்டாளே!"

"வாஸ்தவம்தான். அப்படி அவள் தேகம் பொலியத் தொடங்கியதற்குக் காரணம்...."

"ஓகோகோ! புரிஞ்சு போச்சு! இதுக்கா இத்தனை சங்கோசம் உனக்கு? கங்கிராஜுலேஷன்ஸ்! வத்ஸலாவைக் கூப்பிடு. இங்கே அலமுவைப் பேசச் சொல்றேன்."

"அவசரப்படாதேடா. கன்கிராஜுலேட் பண்ற மாதிரி நான் நடத்துக்கலே."

"என்னடா சொல்லறே? ஏதாவது அசட்டுப் பிசட்டுக் காரியம் பண்ணி வைச்சியா, என்ன?"

"ஆமாம்டா. ஏற்கனவே இரண்டு குழந்தைகள். கடைக்குட்டிக்கு இன்னும் இரண்டு வயசுகூடப் பூர்த்தியாகலே...."

"அதனாலே......?"

"இப்பத்தான், அபார்ஷனைச் சட்டபூர்வமாகவே அரசு அனுமதிக்கிறதே...."

"அடப்பாவி!"

"பாவம்னு அப்போ எனக்குத் தோணலே. ஒரு லேடி டாக்டரைப் பற்றி விசாரிச்சுத் தெரிஞ்சுண்டு போனேன். அவள் இதிலே எக்ஸ்பர்ட்டாம்!"

"சரி, காரியம் முடிஞ்சு போச்சோ இல்லையோ? விட்டுத் தள்ளு. பகவானைப் பிரார்த்திச்சுக்கோ. இனிமே முன்ஜாக்கிரதையா இரு. இதுக்கெல்லாம்இடம் தராதே!"

"போடா, நீயும் உன் அருள்வாக்கும்! இங்கே வயிறு பற்றி எரியறது. சொல்றதை முழுக்கக் கேட்டுக்காமே குறுக்கே குறுக்கே உபதேசம் பண்ண ஆரம்பிச்சுடறே!"

"மளமளன்னு சொல்லித் தீர்த்தால் தானே? இழுத்துப் பறிச்சிண்டு நின்னு நான் இடையிலே இரண்டு வார்த்தை பேசாமல் எப்படி இருக்கிறது?"

"அந்த லேடி டாக்டர் என்கிட்டே அரை மணியிலே காரியம் முடிஞ்சுடும். நீங்க ஆபீசுக்குப் போகலாம். சாயந்திரம் நீங்க

வாழும் உரிமை வேண்டாமா?

ஜெயந்தி

வீடு திரும்பும்போது இங்கே வந்து மனைவியை அழைச்சிண்டு போயிடுங்கன்னு சொன்னா.''

''நீயும் அவளை அங்கே விட்டுட்டு ஆபீஸுக்குப் போயிட்டியாக்கும்.''

''ஆமாம், அரை மணி நேரத்திலே ஃபோன் வந்து, 'உங்க மனைவி 'சீரியஸ்ஸா இருக்காங்க. சீக்கிரம் வாங்க'ன்னு எனக்கு எப்படி இருந்திருக்கும் ?''

''அட பாவமே ! பதறித் துடிச்சிண்டு நர்ஸிங்ஹோமுக்கு ஓடினியாக்கும் !''

''ஆமாம். ஏகமா பிளீட் ஆச்சாம். ரத்தப் பெருக்கைத் தடுக்கவே முடியலையாம். அதனுல் கர்ப்பப் பையின் சுவரை ஆயுதம் துளைத்துவிட்டிருக்கிறது என்று டாக்டர் முடிவு பண்ணி ஆபரேஷனுக்குத் தயாரா விட்டா. என் அனுமதிக்காகத்தான் காத்திருந்தா.''

'' நீ போய்ச் சேர்ந்ததும் அனுமதி கொடுத்துட்டே......''

''ஆமாம். அப்புறம் நெற்றியைப் பிடிச்சுண்டு ஆபரேஷன் தியேட்டர் வாசல்லே உட்கார்ந்திண்டிருந்தேன். உள்ளே, கர்ப்பப் பையில் தையல் போடலாம்னு நினைச்சு வயிற்றைக் கிழித்துப் பார்த்திருக்கா டாக்டர். ஆனுல் காயம் ரொம்பப் பெரிசாக இருந்திருக்கு. தையல் போட்டுப் பிரயோஜனம் இல்லேன்னு தோணிப் போச்சு.''



''அட கடவுளே! பிறகு?''

''கர்ப்பப் பையையே எடுத்துவிட வேண்டியதுதான்னு முடிவு பண்ணி அப்படியே செய்துட்டா.''

''சிவ சிவா !''

''டாக்டர் வெளியே வந்து 'ஆபரேஷன் ஸக்ஸஸ்ஃபுல்; உங்க மனைவிக்கு ஓர் ஆபத்தும் இல்லே' அப்படீன்னு சொல்லிட்டுப் பிறகு சாவகாசமா இந்த விவரத்தை வெளியிட்டாள்.''

'' அப்படின்னு இனிமே உங்களுக்குக் குழந்தைகளே பிறக்காது !''

''இதைக் கேட்டதுக்குத்தான் அந்த டாக்டர், 'அதான் ஏற்கனவே இரண்டு குழந்தைகள் இருக்கே, கவலை என்ன ?' என்ருள். ரொம்பக் கூலா பேசரு.''

''அவ தலையில் இடி விழ !''

''அதோடு போச்சா ? கருச் சிதைவுக்குத்தான் முதலில் ஃபீஸ் பேசினுளாம். ஆபரேஷன் ஃபீஸ் தனின்னு சொல்லி பில் கொடுத்தா !''

''இப்படிக்கூட பெண்கள் இந்தக் காலத்திலே இருக்கா பாருடா! ராட்சத வருஷமோ இல்லியோ ?''

''அதோடு போனுலும் பரவாயில்லியே. பில் பணத்தைக் கொடுத்துட்டு இந்த மட்டும் பெண்டாட்டி பிழைச்சாளேன்னு ஆறுதலுடன் வீட்டுக்கு வந்திருப்பேன். அப்புறமா கேள்விப்பட்ட ஒரு விஷயம்தான் மனசை ரொம்ப உலுக்கிவிட்டது !''

'' என்ன? என்ன ?''

''ஆபரேஷன் தியேட்டர் அட்டெண்டெண்ட் சொன்னுள். அந்தத் தியேட்டரிலே ஒரே சமயத்தில் மூன்று கேஸ்களைக் கவனிக்கலாமாம். ஒரு பிரசவ கேஸை அவசரமா கவனிக்கப் போன டாக்டர் இந்த அபார்ஷன் கேஸைத் தன் அஸிஸ்டெண்ட் ஒருத்தி கிட்டே விட்டுட்டாளாம். 'அவள் கத்துக்குட்டி. அனுபவம் போதாது. அதனுல்தான் ஆயுதம் கர்ப்பப் பையைக் குத்திக் கிழித்து விட்டது' என்று அந்த அட்டெண்டெண்ட் சொன்னதும்....''

''ஏய் ! கண்டு ! பைத்தியம் ! இடியட்! அழாதேடா ! ஸ்டுபிட் ஃபூல்! நீ அழுதா எனக்கும் அழுகை வரதுடா ! ஸ்டாப் இட்!''

(இது நடந்த கதை:
பெயர்கள் மட்டுமே கற்பனை)



எஸ். ஒய். கே.



செம்பை

ஐம்பது ஆண்டு நட்பு!

"செம்பை அவர்களுக்கு ஆரம்ப காலத்தில் கிடைத்தவை யெல்லாம் தேங்காய் மூடியும் வாழைப் பழமும்தாம். ஆனால் அதை அவர் அப்படி சொல்ல மாட்டார். 'சின்ன வயசில் எனக்கு ஏராளமாய் ஆசீர்வாதங்கள் கிடைத்தன. அவை இன்றளவும் என்னைக் காக்கின்றன' என்பார்!"

செம்பை அவர்களின் படத்தை ரஸிக ரஞ்சனி சபாவில் திறந்துவைத்த ஸ்ரீ எஸ்.ஒய். கிருஷ்ணசாமி செம்பையுடன் ஐம்பது வருஷங்கள் பழகியவர். எனவே, அவரது பேச்சு, ஆலாபனை, நிரவல், ஸ்வரப் பிரஸ்தாரங்களுடன் கூடிய ஒரு மினி கச்சேரி போலவே சுவாரசியமாய் இருந்ததில் வியப்பில்லை.

ஆரம்ப நாளில் மேற்சொன்னவாறு சிரமப்பட்ட செம்பை, ஒரு முறை, கரூரில் பெத்தாச்சி என்ற சங்கீத போஷகர் நடத்தி வந்த இசை விழாவுக்கு அழையா விருந்தாளியாகப் போய்ச் சேர்ந்தார். அங்கே அவருக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்றே தோன்றவில்லை. ஜலதரங்கம் கச்சேரி ஒன்றுக்குப் பக்கவாத்தியம் வாசிக்க வேண்டிய வயலின் வித்வான் தலை காட்டாமல் போகவே அந்த இடத்தை இட்டு நிரப்பச் செம்பை முன் வந்தார். ஜலதரங்கம் கச்சேரி செய்த அம்மையார் இவரது வயலின் வாசிப்பில் பரவசப்பட்டுக் கச்சேரி முடிவில் வாய்விட்டுப் பாராட்டினார். சட்டென்று செம்பை பதில் சொன்னார்: "உங்கள் பாராட்டுக்கு நன்றி. ஆனால் நான் பாடத்தான் ஆசைப்பட்டு வந்தேன். வயலின் வாசிக்க அல்ல!"

இதைக் கேட்டுக் கொண்டிருந்த நிர்வாகிகள் மனம் நெகிழ்ந்து அவர் பாடுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அன்று முதல் செம்பையின் புகழ் படிப்படியாக வளரலாயிற்று. எந்த அளவுக்கு?

எஸ். ஒய். கே. கூறினார்:

திருவல்லிக்கேணியில் ஒரு சபா. அந்த நாளில் பெரிய கச்சேரிகள் டவுனில் கோகலே ஹாலில்தான் நடக்கும். சபாக் காரியதரிசி ஆறரை மணிக் கச்சேரிக்கு ஆறு மணி வரை ஏராளமாய் டிக்கெட்டுக்களை விற்றுவிட்டுத் திருவல்லிக்கேணிக்கே போய்விடுவார். கச்சேரி முடிகிற சமயத்தில் பாடகரைக் கௌரவிக்கத்தான் திரும்புவார். காரணம், உட்கார இடம் இல்லாதவர்கள் தம்மைத் தாக்க ஆரம்பித்துவிடப் போகிறார்களே என்ற பயம்!

புயலின் வேகமும் குற்றாலச் சாரலும்

செம்பையின் மவுசு இப்படி ரசிகர் கூட்டம் பெருகுகிற அளவுக்கு உயர்ந்தது. அதோடு உள்ளமும் உதார குணத்தால் உயர்ந்தது. அதைப் போற்றிய எஸ். ஒய். கே. "பாத்திரமறிந்துதான் உதவுவார்" என்றார்.

கச்சேரி ஏற்பாடு செய்கிறவர்கள், "உங்களைக் கௌரவிக்கப் போகிறோம்; இன்னார் சால்வை போர்த்துகிறார்; பலானவர் வாழ்த்துரை வழங்குகிறார்" என்றெல்லாம் கூறுவார்கள். செம்பையோ, 'எனக்குச் செய்யப் போவதெல்லாம் சரிதான்; என் பாட்டுக்கு என்ன தரப் போகிறீர்கள்?' என்று கேட்பார்!

அப்படிக் கேட்டு வாங்கிய பிறகு வஞ்சனை இன்றியும் சிரமம் பாராமலும் பாடி மகிழ்விப்பார். கடைசி சில ஆண்டுகளில் தமக்குக் கிடைத்ததையெல்லாம் குருவாயூரப்பனுக்கே அர்ப்பணித்தார். ஒரு முறை எழும்பூர் ரயில் நிலையத்தில் செம்பையின் பர்ஸை எவனோ



புயல் வேக வாசிப்பு!

வி. வி. எஸ்.



வி. வி. ரவி

பிக்பாக்கெட் அடித்துக் கொண்டு போய்விட்டான்! ''குருவாயூரப்பன் பணம். அவன் இஷ்டப்பட்டவனுக்குக் கொடுத்தான்'' என்று கூறிப் போலீசுக்குக் கூடப் போகாதிருந்து விட்டார் செம்பை!

செம்பை பல இளம் வித்வான்களை முன்னுக்குக் கொண்டு வந்ததைக் குறிப்பிட்டார் எஸ். வ்ய். கே. அன்று படத் திறப்பு விழாவுக்குப் பிறகு வயலின் கச்சேரி செய்த வி. வி. சுப்பிரமணியம் அவர்களுள் ஒருவர். ஆர். ஆர். சபாவுக்குச் செம்பை படத்தை நன்கொடையாக வழங்கியவர் வி.வி.எஸ்.ஸின் தகப்பனார் வடக்காஞ்சேரி வீரராகவ பாகவதர்.

தகப்பனாருடைய பெயரில் உள்ள வீரம் வி. வி. எஸ்.ஸுக்கு அப்படியே வந்து சேர்ந்திருக்கிறது! சங்கீதக் கோட்டையையே பிடித்துவிடுகிறவர் போல் அன்று ஆவேசத்துடன் வாசித்தார். இத்தகைய தாக்குதலை ஆங்கிலத்தில் ''டேக்கிங் பை ஸ்டார்ம்'' என்று வர்ணிப்பார்கள். அன்று ஆர். ஆர். சபாவில் வீசிய புயலின் வேகத்தில் ரசிகர்கள் பிரமித்து உட்கார்ந்திருந்தார்கள்!

இத்தகைய ஒரு புயல் வேக வாசிப்பைத் தவறு என்று சொல்வதற்கில்லை. அது அவரது பாணி. ஆற்றலிலும் சங்கீத வித்வத்திலும் சிறிதளவும் குறைபடாத விறுவிறுப்புப் பாணி.

நரம்புகளுக்கு முறுக்கேற்றி நாற்காலியில் நம்மை நிமிர்ந்து உட்காரச் செய்யும் வாசிப்பு. அதன் வெற்றியும் தோல்வியும் ரசிகர்களின் விருப்பு வெறுப்புக்களைப் பொறுத்தவை.

சிலருக்குக் குற்றாலத்தின் இளஞ் சாரலில் நனையப் பிடிக்கும். சிலருக்கு வானமே பிளந்தது போல் கொட்டுகிற மழையை ரசிக்கத் தெரியும். ஏன் பாரதியே, மழை பொழிந்திடும் வண்ணத்தைக் கண்டு வியந்து அதனைப் பாடியதோடு, ''மழையும் காற்றும் பராசக்தி செய்கை காண்'' என்று போற்றவில்லையா?

இந்தப் போக்கில் அமைந்த வி. வி. எஸ். கச்சேரி, அவரது தம்பி ரவி தோடி ராக ஆலாபனையை ஆரம்பித்த போது புயலுக்குப் பின் அமைதி என்பது போல் இதமாய் மாறியது. அப்புறம் வலஜியும் சில பஜன்களும் சாந்தி அளிப்பனவாய் இருந்தன.

மிருதங்கத்தில் விளையாடும் உமையாள்புரம் சிவராமனின் விரல்கள் ஸ்ரீ எம். டி. ராமநாதனுக்கும் ஒத்துழைக்கும், வி. வி.எஸ்.ஸின் விறுவிறுப்புக்கும் இலகுவாக ஈடு கொடுக்கும். அவரும் கஞ்சிராவில் நாகராஜனும் சேர்ந்து கொண்டு அமர்க்களமாய் அமைய வேண்டிய கச்சேரியை அமர்க்களப்படுத்தியே விட்டார்கள்!

— வி. ரா..

உலகைச்சுற்றி ஓடுகிறார்கள்!



எவ்வொருவருக்கும் ஒரு விநோத ஆசை இருக்கும். லண்டனில் மாஞ்செஸ்டருக்கருகில் உள்ள ஸ்டோக் ஆன் ட்ரெண்டைச் சேர்ந்த இரு ஆங்கிலேயர்களுக்கு இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவரையில் பத்தாயிரத்து ஐந்நூறு மைல்கள் ஓடவேண்டுமென்ற விநோத விருப்பம் எழுந்தது. கடல் குறுக்கிடும்போது மட்டும் கப்பலேறுவார்கள். பாக்கி தூரமெல்லாம் ஓட்டம்தான். இந்த மாரத்தான் ஓட்டப் பிரியர்களை மவுண்ட்ரோடு அண்ணாசாலையில் தற்செயலாகச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

''உங்கள் விநோத விருப்பத்துக்குக் குறிக்கோள்கள் உண்டா?'' என்று ஓட்ட வீரர்களில் ஒருவரான பாரி பௌலரை வினவினேன்.

''இரு குறிக்கோள்கள் உண்டு. ஒன்று உலகில் இதுவரை யாரும் இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியா வரை ஓடியதில்லை. ஆகவே முதல் சாதனைப் பெருமை எங்களுக்குக் கிட்டுகிறது. இரண்டாவது குறிக்கோள் இங்கிலாந்தில் உள்ள ''**Ladsandads**'' கிளப்புக்கு விளையாட்டுக் கேந்திரம் நிறுவ நிதி சேகரிக்கும் திட்டம். **Ladsandads** கிளப்பில் பதினாறு வயதுக்குட்பட்ட முந்நூறு அங்கத்தினர்கள் உள்ளனர். இவர்கள் பல்வகை விளையாட்டுக்களும் ஆட உதவி செய்யவிருக்கிறோம்! பல நாடுகளிலுள்ள வர்த்தகப் பிரமுகர்களையும் தயாள சிந்தையினரையும் இந்த நல்ல கைங்கரியத்துக்கு உதவக் கேட்டுக் கொள்வோம்!'' என்றார் பாரி பௌலர்.

டிரெய்லருடன் கூடிய வானிலிருந்து இருபத்து நான்கு வயது அழகி லியோனா, மூன்றரை வயதுப் பையன் ஜெங்காவுடன் இறங்கி வருகிறாள்.

லியோனா லண்டனிலிருந்து 7500 மைல்கள் ஓடிவந்துள்ள கெல்வினின் மனைவி. டிரெய்லர் வண்டியில் பின்தொடர்ந்து உணவும் உற்சாகமும் ஊட்டி வருபவள்!

''இதுதான் இந்தியாவுக்கு வருவது முதல் தடவை. ஆனால் இது எங்கள் கடைசிப்பயணமல்ல. பலதடவை வரப் பிரியப்படுகிறோம்!'' என்றார் கெல்வின் பவர்ஸ்.

''இந்தியாவில் ஏற்பட்ட அனுபவம் எப்படி?''

''இந்திய விஜயத்தில் மகிழ்ச்சி. ஆனால் சீதோஷ்ண நிலை எங்களுக்கு ஒத்து வரவில்லை. ஹைதராபாத்திலிருந்து ஓடிவருகையில் முப்பது மைல்கள் ஓடிக் களைத்து ஓய்வெடுக்கும் வேளையில் தண்ணீருக்காக நாங்கள் மேலும் ஐந்து மைல் ஓடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது!''

''இந்திய உணவு உங்களுக்குப் பழக்கப்பட்டு விட்டதா?'' என்ற கேள்வியைக் கேட்டபோது, ''ஓ!'' என்று சப்புக்கொட்டிக் கொண்டு, ''என் மனைவி லியோனா அந்த உணவைச் சமைக்கக் கற்றுக் கொள்ளணும்னு எனக்கு ஆசை!'' என்றார் கெல்வின் பவர்ஸ்.

''நோ! நோ! இந்திய உணவைத் தயாரிப்பது எனக்கு ரொம்பக் கஷ்டம்!'' என்றாள் லியோனா.

— குண்டுமணி





உறவுக்குக் கை கொடுப்போம்

ஏற்கெனவே பலமுறை பல மேடைகளில் நடிக்கப்பட்ட வெற்றி நாடகம் இது. ஆனால் தலைப்பை மட்டும் வைத்துக் கொண்டு நாடகத்தில் சுவையாயிருந்த பகுதிகளை யெல்லாம் எடுத்துவிட்டு வெண்ணெய் எடுத்த பாலாகப் படத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.


நல்ல குடும்பக் கதை. வரவுக்குமேல் செலவு செய்யும் குடும்பத்தின் அவல நிலையைச் சுட்டிக் காட்டும் சுவையான கதை. குடும்பத் தலைவராக (தந்தையாக) வரும் வி. எஸ். ராகவன் மிக நன்றாக நடித்து எல்லோருடைய மனத்திலும் பதிகிறார். மூத்த மருமகளாக, நற்குணவதியாக வரும் சௌகார் ஜானகியின் நடிப்பு உயர்ந்து நின்று படத்துக்குக் கைகொடுத்து உதவுகிறது. நவக்கிரகம் போன்ற கோணலான குடும்ப அங்கத்தினர்களை அவரவர்களுக்குத் தகுந்தபடி பேசி, அடக்க வேண்டியவர்களை அடக்கி, மடக்க வேண்டியவர்களை மடக்கிப் படத்தை விறுவிறுப்பாகக் கொண்டு செல்கிறார். குடும்பத்தில் இரண்டாவது மகன் கீபிட்டராக வரும் சண்முகசுந்தரம் பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார்.

குடும்பத்தில் மூத்தவனாக வரும் ஜெமினி கணேசன் ஹாஸ்யமாகவும், ஸீரியஸ்ஸாகவும் நடித்துப் படத்துக்குச் சுவையூட்டியிருக்கிறார்.

நாடகக் கதையை அலங்கோலப்படுத்திப் பாத்திரப் படைப்பைப் பாழாக்கி, வெந்நீராகவும் இல்லாமல், தண்ணீராகவும் இல்லாமல் கெடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் சேர்த்துத் தொலைத்ததும் அல்லாமல், நடிக நடிகையர்களைச் சொன்மாரி பொழியச் செய்திருக்கும் கொடுமையை என்னவென்று சொல்ல! ஒவ்வொருவரும் மூச்சைப் பிடித்துக் கொண்டு பேசுகிறார்கள், பேசுகிறார்கள், அப்படிப் பேசுகிறார்கள்! இந்தக் கூத்துக்கள் போதாக்குறைக்கு அவலட்சண நடனங்கள் வேறு நிறைய வருகின்றன! இப்படம் கெட்ட கேட்டுக்கு வரலட்சுமி விரதம் ஒன்றுதான் பாக்கியாயிருந்தது! அதையும் காட்டிவிட்டார்கள்!

'மூலக் கதை விசு' என்று படத்தில் காட்டி, பாவம், அவரை அவமதித்திருக்கவேண்டாம்! ஒய். ஜி. மகேந்திரானின் டைரக்ஷனில் குறை சொல்ல என்ன இருக்கிறது? திரைக்கதை, வசனம், டைரக்ஷன் மேற்பார்வை ஆகியவற்றை ஏற்றிருப்பவர் அநுபவம் மிக்க டைரக்டர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்!

சித்ரா புரொடக்ஷன்ஸாரின் ''உறவுக்குக் கைகொடுப்போம்'' வசூலுக்குக் கைகொடுக்கும் என்று தோன்றவில்லை! — காந்தன்





'ராட்சச' என்ற சொல்லுக்கும் பெரும்பான்மையோர் கற்பனை செய்வது போல் பயங்கரப் பொருளே கிடையாது. 'ரட்சிக்கின்ற தகுதியுள்ள' என்பது தான் பொருள். இதே கருத்தில் ''ஸ்வயம் ரக்ஷா மதம்'' என்ற பெயரில் சதுர்வேதி சாஸ்திரி என்பவர் ஒரு அந்தாதி நூலையே எழுதியிருக்கிறார். ராட்சச வருஷம் நம்மை ரட்சிக்கும் வருஷமாக, செழிப்பான வருஷமாக விளங்கும் என நம்பி, வரவேற்போம்.

— கோ. கு.



[ராஜாஜியின் திக்கற்ற பார்வதி கதைக்குத் திரைப்பட வசனம் எழுதிப் பெருமையும் புகழும் பெற்றவர் காரைக்குடி நாராயணன். இவரது அச்சாணி நாடகத்துக்கு மயிலாப்பூர் அகாடமி 1972ல் சிறந்த நாடகாசிரியர் பரிசு வழங்கியது. வேறு பல நாடகங்களும் திரைக்கதை வசனங்களும் எழுதியுள்ளார் நாராயணன். தீர்க்க சுமங்கலி வெற்றிப் படமாகும்.]

ஓரங்க நாடகம்

கைகாட்டி மரம்

காரைக்குடி நாராயணன்



காட்சி 1

(ஹாஸ்டல். காலை நேரம். ஃபாதர் ஞானமுத்து இயேசுவை வணங்குகிறார். ஹாஸ்டலில் வேலை பார்க்கும் பையன் மாதவன் அங்கு வருகிறான்.)

மாதவன்: குட் மார்னிங்...

ஃபாதர்: குட் மார்னிங். ஸ்டுடன்ட்ஸ் எல்லாரையும் எந்திரிக்கச் சொல்லிட்டியா?

மாதவன்: அதெல்லாம் ஏலி மோனிங் ஃபோர் ஓ க்ளாக் எழுப்பிட்டேன் சார்.

ஃபாதர்: வெரி குட்... உன் பேரென்ன சொன்னே?

மாதவன்: நேம் மை ஸெல்ஃப் மாதவன்! (ஃபாதர் சிரிக்கிறார்) ஏன் சிரிக்கிறீங்க?

ஃபாதர்: தப்புத் தப்பா இங்கிலீஷ் பேசினாலும் எப்படியாவது பேசணுங்கிற ஆர்வம் இருக்குதே... ரியலி ஐ அப்ரிஷியேட் யூ...

ஆமா, எதுவரைக்கும்பா படிச்சிருக்கே?

மாதவன்: பத்து மாசம் என் 'மதர்ஸ் ஸ்கூல்லே' படிச்சேன். அப்புறம் என் 'ஃபேமிலி காலேஜ்'லே ஃபெயிலானேன். சுருக்கமாச் சொன்னா என் குவாலிகேஷன் பாவர்டி—வறுமை.

ஃபாதர்: பி ஹாப்பி... பி ஹாப்பி ...இந்த உலகத்தோட உண்மையான விவரத்தைச் சொல்லித் தர வறுமையை விடக் கெட்டிக்கார வாத்தியாரே கிடையாது.

மாதவன்: தாங்க்யூ ஃபாதர்.


ஃபாதர்: மாதவன், நீ இந்த ஹாஸ்டலுக்குப் புதிசாவந்திருக்கிற பையன். நான் சொல்றதைக் கவனமாக் கேட்டுக்கோ.

மாதவன்: சொல்லுங்க சார்!

ஃபாதர்: இன்றைக்குள்ள சூழ்நிலையிலே, மாணவர்கள் மாணவர்களா இல்லே. இந்த ஹாஸ்டல்லேயிருந்து படிச்சு வெளியே போற ஒவ்வொரு மாணவனும் ரத்தினமாத் திகழணும்கிறது தான் என் ஆசை... இங்கே ஜோசப்னு ஒரு பணக்கார வீட்டுப் பையன். அவனுக்கு இந்த உலகத்திலே உள்ள எல்லாப் பெண்களையும் அனுபவிக்கணும் கிறதுதான் ஆசை. அவனை நல்வழிப் படுத்தணும்னுதான் அவன் அப்பா இங்கே கொண்டாந்து விட்டிருக்காரு. அவன் அசிங்கமான புத்தகங்களைக் கேட்டா வாங்கியாந்து கொடுக்காதே.

மாதவன்: ஓ.கே. சார்.

ஃபாதர்: அப்புறம் சலீம்னு ஒருத்தன். சிகரெட், மது, சீட்டுக் கட்டு இவை மூணும் அவன் உயிர். இந்த மூணுலே அவன் எது கேட்டாலும் வாங்கியாந்து கொடுக்கக் கூடாது.



அப்புறம் சவண்டையான்னு ஒரு அரசியல் பைத்தியம். அவன் கிட்டே அரசியல் பேசக் கூடாது.

மாதவன்: ஓ.கே. சார்.

(ஃபாதர் போகிறார். ஜோசப் ஓர் அசிங்கமான புத்தகத்தைப் புரட்டிக் கொண்டே வருகிறான்.)

ஜோசப்: மாதவா... மாதவா...

மாதவன்: என்ன ஜோசப் ஸார்?

ஜோசப்: இன்ப உலகம்னு இது மாதிரி அட்டைப் படம் போட்டிருக்கும். ஒரு புத்தகம் வாங்கிட்டு வா.

மாதவன்: எனக்கு ஒரு சந்தேகம் சார். இந்தப் புத்தகத்தைப் படிச்சா பாஸ் பண்ணிடலாமா?

ஜோசப்: இந்தப் புத்தகத்திலே இல்லாத விஷயம் என்ன இருக்கு? உலகமே இந்த அட்டைப் படத்திலே அடங்கிடுச்சு. போய் வாங்கிட்டு வா.

மாதவன்: மன்னிக்கணும் சார். ஃபாதர் இதெல்லாம் வாங்கியாந்து கொடுக்கக்கூடாதுன்னு உத்தரவு போட்டிருக்காரு.

(சவண்டையா பலமாகச் சிரிக்கும் சத்தம் கேட்கிறது. அவனுடன் சலீம் வருகிறான்.)

சலீம்: சவண்டையா, ஏண்டா இப்படி ராட்சதன் மாதிரி சிரிக்கிறே?

சவண்டையா: சலீம்! எனக்கு இப்படிச் சிரிச்சாத்தான் சிரிச்ச மாதிரி இருக்கும். இல்லேன்னு இருமின மாதிரி இருக்கும்.

சலீ: நீ அரசியல் கூட்டத்திலே பேசிப் பேசி 'சவுண்டை'யா ஆயிட்டே.

சவண்டையா: என்னைப் பத்தி என்ன வேணும்னாலும் பேசு. அரசியலைப் பத்திப்

பேசஉனக்கு ஒன்றும் தெரியாது. மாதவா! நீ நடுத் தெருவுக்குப் போய் இன்னைக்கு எங்கெங்கே யார் யார் பொதுக் கூட்டம் போடுறாங்கன்னு பார்த்துட்டு வர்றியா?

மாதவன்: ஸாரி ஸார்... எனக்கு வேலை இருக்கு.

சலீம்: மாதவா...

மாதவன்: என்ன சலீம் சார்?

சலீம்: இன்னைக்கு ராத்திரி எங்கேயும் போயிடாதே. கொஞ்சம் 'மில்லி' வாங்கிட்டு வரணும்.

மாதவன்: மில்லியாவது பல்லியாவது... காட் பெர்மிஷன் ஃபாதர் ஐ கோ. இல்லே ஐ கொய்ட் கிப்... தட்ஸ் ஆல். ரூமெல்லாம் சுத்தப்படுத்தணும். நான் வர்றேன்.

(மாதவன் போகிறான்.)

ஜோசப்: சவண்டையா!

சவண்டையா: என்ன?

ஜோசப்: இந்த ஹாஸ்டல்லே நம்ம சந்தோஷத்துக்குக் குறுக்கே நிற்கிறது ஃபாதர் ஞானமுத்துவும் பொடிப் பய மாதவனும். இவங்களை இங்கேயிருந்து அனுப்பிணாத்தான் நிம்மதி.

சவண்டையா: கவலைப்படாதே. என் அரசியல் புத்தியைத் தூண்டிவிட்டு இந்த இலாக்காவிலிருந்தே தூக்கிடலாம்.

காட்சி 2

(ஹாஸ்டல். ஃபாதர் படித்துக் கொண்டிருக்கிறார். எம். எல். ஏ. ஆரோக்கியசாமி வருகிறார்)

ஆரோக்கியசாமி: சார்! உள்ளே வரலாமா?

ஃபாதர்: அடடே எம்.எல்.ஏ. ஆரோக்கியசாமியா? வாப்பா. என்ன விஷயம்?

ஆரோக்கியசாமி: சார், உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயமா வந்திருக்கேன்.

ஃபாதர்: சொல்லு.

ஆரோக்கியசாமி: நான் உங்களோட பழைய மாணவன்.

ஃபாதர்: தெரியும். என்ன வேணும், சொல்லு.

ஆரோக்கியசாமி: என் தம்பிக்கு இதே ஹாஸ்டல்லே இடம் கொடுத்து இதே காலேஜிலே படிக்க வைக்கணும்.

ஃபாதர்: என்ன மார்க்குகள் வாங்கியிருக்கான்?

ஆ.: மார்க் என்ன சார் வேண்டியிருக்கு? பணமும், பதவியும் எங்கிட்டே இருக்கு. அந்தத் தைரியத்திலேதான் இங்கே வந்தேன். அத்தோட நான் ஒரு கிறிஸ்தவன்...

ஃபாதர்: கல்வி மதங்களுக்கு அப்பாற்பட்டது. காலேஜைப் பொறுத்தவரை பொரிக்கோ, செல்வாக்குக்கோ இடமில்லே. மதிப்பெண்களையும், மற்றத் தகுதிகளையும் வைச்சுத்தான் இடம் கொடுக்கிறோம்.

ஆ.: சார், நீங்க இடம் கொடுத்துத்தான் ஆகணும்.

ஃபாதர்: துரை... துரை...!

(துரை வருகிறான்)

துரை: ஃபாதர்!

ஃபாதர்: எம்.எல்.ஏ. ஆரோக்கியசாமி... இந்தப் பையன் ஏழை; அனாதை. இதுவரை எத்தனையோ *Merit Cards* வாங்கியிருக்கான். எல்லாத்துலேயும் முதல் ராங்க்! நான் இவனுக்கே இடம் கொடுக்கிறதா முடிவு பண்ணிட்டேன்.

(ஆரோக்கியசாமி துரையை மேலும் கீழுமாகப் பார்க்கிறார்)

ஆரோ: ஒட்டுப் போட்ட சட்டை, பரட்டைத் தலை, செருப்பில்லாத கால்கள்... இவன் படிச்சு என்ன செய்யப் போறான்?

ஃபாதர்: ஆரோக்கியசாமி! பதவி வந்ததும் உனக்கு எவ்வளவு தலைக்கனம் ஏற்பட்டுப் போச்சு... இந்த ஒட்டுப் போட்ட சட்டைக்காரங்கதாம்ப்பா உனக்கு ஓட்டுப் போட்டாங்க. தேர்தலுக்கு முன்னாடி இந்தச் செருப்பில்லாத கால்களைத் தேடி உன் செருப்புள்ள கால்கள் எத்தனை தடவை போயிருக்கும்? யோசித்துப் பார். துரை! நீ கிளாசுக்குப் போ.

(துரை போகிறான். ஆரோக்கியசாமியும் ஃபாதரை முறைத்துவிட்டுப் போகிறார்.)

காட்சி 3

(ஹாஸ்டல். ஜோசப், சலீம், சவண்டையா மூவரும் கூடிப் பேசுகிறார்கள்.)

ஜோசப்: டேய், சலீம்! நம்ம ஃபாதரை எப்படியாவது இங்கேயிருந்து வெளியே அனுப்ப ஏதாவது திட்டம் உண்டா? சீக்கிரம் சொல்லுடா.

சலீம்: ஸ்டிரைக் ஆரம்பிப்போமா?

ஜோசப்: என்ன ஸ்டிரைக் ஆரம்பிக்கலாம்?

சலீம்: பரீட்சை எழுதாமல் பாஸ் போடணும். இல்லே நாங்க பரீட்சை எழுதணும்னு ஃபாதர் இங்கேயிருந்து போகணும்னு ஆரம்பிப்போமே.

ஜோசப்: இது ஒத்து வராது.

சவண்டையா: ஏண்டா மூளையில்லாத உங்க மண்டையைப் போட்டு உடைச்சுக்கிறீங்க? நான் முன்கூட்டியே எல்லாம் செஞ்சுட்டேன்.

ஜோசப்: என்ன செஞ்சே?

சவண்டையா: ஃபாதரோட 'லெட்டர் பேடு'லே ஒண்ணைக் கிழிச்சு அவர் எழுதின மாதிரி ஒரு 'லவ்' லெட்டர் எழுதினேன். நம்ம எம்.எல்.ஏ. ஆரோக்கியசாமி தங்கச்சி பேருக்கு எழுதி அனுப்பிட்டேன். இங்கேயிருந்து அடுத்த லேடீஸ் ஹாஸ்டலுக்கு 'ஆரோ' பண்ணி எறிஞ்சிட்டேன்.

(சார்.... சார்.... எனக் குரல் கேட்கிறது. ஆரோக்கியசாமி வருகிறார்.)

சலீம்: சவண்டையா! எம்.எல்.ஏ. ஆரோக்கியசாமி வந்துட்டாருடா... வாங்க சார்.

ஆரோ: எங்கே உங்க ஃபாதர்?

சவண்டையா: அதோ வர்றாரு.

(ஃபாதர் வருகிறார்)

ஃபாதர்: குட்மார்னிங் எம். எல். ஏ. ஆரோக்கியசாமி!..... ஏம்பா நீங்கள்ளாம் இங்கே நிற்கிறீங்க... போங்க போங்க.

ஆரோ: பரவாயில்லை நிற்கட்டும். அப்பத்தானே உங்க யோக்கியதை தெரியும்?

ஃபாதர்: என்ன சொல்லறே?

ஆரோ: ஏன் சார் அன்னிக்குப் பெரிசா நேர்மையானவர் மாதிரி பேசினீங்க. இப்போ என் தங்கச்சிக்கு 'லவ்' லெட்டர் எழுதியிருக்கீங்களே — அதுவும் உங்க லெட்டர் பேடுலே.... என்ன தைரியமும் திமிரும் இருந்தா இப்படிச் செஞ்சிருப்பீங்க? நீங்கதான் எத்த ஆசையும் இல்லாத துறவியா?


புதுமை குன்றா
பொலிவுடன்
இருங்கள்
CINTHOL
LUXURY
TOILET POWDER
BY
Godrej
சிந்தால் டாய்லெட் பவுடர் சங்கட
மான உடல் துர்நாற்றத்திலிருந்து
உங்களைப் பாதுகாத்து, அதி-
வெப்பமான தினத்திலும், நாள்
முழுவதும் உங்களைப் புத்துணர்ச்-
சியுடன் வைத்திருக்கிறது.
அதன் அருமையான நறுமணம்
உங்களை விட்டு அகலுவதில்லை.
கோத்ரெஜ் அளிக்கும்
சிந்தால்
Interpub/GSP/12/74 Tam

சென்னை :

மிட்லண்ட், ஸ்ரீ கிருஷ்ணா, மேகலா, கமலா

(AIR CONDITIONED)

மற்றும் தென்னகமெங்கும்



இல்லே, ஆசிரியரா? உங்களை உடனே இங்கே யிருந்து 'டிஸ்மிஸ்' பண்ண வைக்கலே, நான் எம். எல். ஏ. இல்லே.

(எம். எல். ஏ. ஆத்திரத்துடன் போகிறார்)

ஃபாதர்: ஃபிரண்ட்ஸ்! இது நீங்க செஞ்ச தப்புன்னு நல்லாத் தெரியும். நீங்க பேசினதெல்லாம் என் காதிலே விழுந்தது. நான் ஏன் தெரியுமா சும்மா இருந்தேன்? உங்களுக்கோ இது பரீட்சை நேரம். இதை நீங்கதான் செய்தீங்கன்னு சொன்னா பிரின்ஸ்பால் உங்களைப் பரீட்சை எழுத அனுமதிக்க மாட்டார். உங்க எதிர்காலம் கெட்டுப் போயிடும். பரவாயில்லே. என் வேலே போனாப் போயிட்டுப் போகுது. 'எல்லாரும் போய்ப் படிங்க... பி ஹாப்பி!

(எல்லோரும் போகிறார்கள்)

காட்சி 4

(ஹாஸ்டல்)

மாதவன்: பாவிங்களா!... மூணு பேருமா சேர்ந்து ஃபாதரோட வேலைக்கு உலை வைச்சு அவர் பேரையும் குட்டிச்சுவரா அடிச்சுட்டீங்களே...!

ஃபாதர்: மாதவா! அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. பிள்ளைகளைப் பெற்றவங்க பட்டை தீட்டப்படாத வைரங்களை எங்க இட்டக் கொடுக்கிறாங்க. சில சமயம் அதுலே ஒன்னு ரெண்டு வைரங்கள் கையை நறுக்கிடுது..... இட் ஈஸ் ஆல்ரைட்!

துரை: ஃபாதர்! இந்த அநாதைக்குக் கல்வி விளக்கை ஏத்திக் கையிலே கொடுத்துட்டு நடுக் காட்டிலே விட்டுட்டுப் போறீங்களே...

(ஃபாதர் அமைதியாக ஹாஸ்டலை விட்டு வெளியேறுகிறார்.)

காட்சி 5

(காலம் ஓடுகிறது. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு சர்ச்சில் ஃபாதர், ஏசு முன் மண்டியிட்டு இருக்கிறார். பிரார்த்தனைப் பாடல் கேட்கிறது. யாரோ தொடர்ந்து கதவு தட்டும் சத்தம் கேட்கிறது. ஃபாதர் கதவைத் திறக்கிறார். சலீம் பதற்றத்துடன் ஓடி நுழைகிறான்.)

சலீம்: ஃபாதர்..... நீங்களா....

ஃபாதர்: சலீமா... நான் இந்த சர்ச்சிலே பிரார்த்தனை பண்ண வந்தேன்.... நீ எதுக்கு வந்தே?

சலீம்: ஃபாதர்... படிக்கிற காலத்திலே நான் பக்குவப்படலே. இப்போ ஒரு குற்றவாளியா இங்கே ஒளிந்து கொள்வதற்காக ஓடி வந்தேன்.

ஃபாதர்: என்னப்பா சொல்றே நீ?

சலீம்: படிக்கிறபோது குடி, சூதுன்னு வாழ்ந்த நான் அதையே தொழிலா மாத்திக்கிட்டேன். இன்னைக்கு ஒரு கூட்டத்தோட மூணு சீட்டு விளையாடினபோது இன்ஸ்பெக்டர் பார்த்துட்டான். என்னை விரட்டிக் கொண்டே வரான். அடைக்கலம் கொடுங்க ஃபாதர்....

ஃபாதர்: சலீம்! இப்பவாவது நீ மனுஷனா மாற முயற்சி செய். போலீஸ் ஸ்டேஷன்லே போய் உன் குற்றத்தை ஒத்துக்க.

சலீம்: எப்படி முடியும்? என்னோட படிச்ச, நான் கலாட்டாப் பண்ணின துரைகிட்டே எப்படிச் சரணடைய முடியும்? ஆமாம் ஃபாதர்! ஒரு ஏழைப் பையனுக்கு வாழ்க்கை கொடுத்தீங்களே அந்தத் துரைதான் என்னை விரட்டிக்கிட்டு வர்ற இன்ஸ்பெக்டர்—அதோ அவனே வந்துவிட்டான்.

(துரை ஓடிவருகிறான்)

துரை: சலீம்! எங்கிட்டே இருந்து தப்பிச்சிடலாம்னு பார்த்தியா? வா என் பின்னாலே.. ஃபாதர்! சௌக்கியமா இருக்கீங்களா?...

ஃபாதர்: எல்லா உயிர்களும் சௌக்கியமா இருக்கணும்னு பிரார்த்தனை பண்ணிக்கிட்டு இருக்கேன்.

துரை: நான் உங்களை அப்புறம் வந்து பார்க்கிறேன், ஃபாதர். எனக்கு முக்கிய வேலை இருக்கு.

ஃபாதர்: கடமைதான் முக்கியம். போய் வா.... பி ஹாப்பி...

(சார்....சார்.... ஏதாவது பிச்சை போடுங்க... என்று குரல் கேட்கிறது. ஃபாதர் குரல் வந்த திசையில் பார்க்கிறார்.)

ஃபாதர்: துரை, அதோ இந்த சர்ச்சுக்கு எதிரே இருக்கிற பஸ் ஸ்டாப்புலே ஒரு குஷ்டரோகி இருக்கிறானே, அவனை நான் எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே....

துரை: ஆமா ஃபாதர். அது வேறு யாருமில்லே. உலகத்திலே உள்ள பெண்களையெல்லாம் அனுபவிக்கணும்னு நினைச்சானே அந்த ஜோசப்தான். இப்போ எல்லோருகிட்டேயும் பிச்சை எடுத்து வாழ்கிறான்!

ஃபாதர்: கர்த்தர் அவனைக் காத்தருளட்டும்.

துரை: பஸ் வந்திடுச்சு. நான் வரட்டுமா?

ஃபாதர்: நானும் வர்றேம்பா. உன்னை வழியனுப்பி வைக்கிறேன்

(பஸ் வரும் சத்தம் கேட்கிறது. ''சார்! சுமை கூலி இருக்குதா?'' என்ற குரல் கேட்கிறது. ஃபாதர் திரும்பிப் பார்க்கிறார். அவன் சவண்டையா என்பது தெரிய வருகிறது.)

ஃபாதர்: சவண்டையா நீயா! ஏம்பா உனக்கு இந்த நிலே? மூட்டை சுமந்துதான் பிழைக்கணுமா?

சவண்டையா: அது நான் செஞ்ச தப்புகளுக்கெல்லாம் தண்டனை, ஃபாதர்! காலேஜிலே பரீட்சை நடக்கிறபோது கட்சி மாநாடு நடந்தது. பரீட்சை எழுதாமே மாநாட்டுக்கு ஓடிட்டேன். பரீட்சையிலே ஃபெயிலாயிட்டேன். என் அப்பா என்னை வீட்டை விட்டு அடிச்சு விரட்டிட்டாரு. மறுபடியும் நான் கட்சிக்காரங்க கிட்டே போயி உதவி கேட்டேன். யாரும் எதுவும் செய்யல்லே. வேறே வழி? மூட்டை தூக்கறேன். ஃபாதர், ஒன்னு மட்டும் நிச்சயம். படிக்கிற காலத்திலே ஒவ்வொரு மாணவனுக்கும் படிப்பைத் தவிர வேறு எதிலேயும் ஈடுபாடு இருக்கக் கூடாது.

ஃபாதர்: நடந்தது நடந்து போச்சு. இனிமே வர்ற மாணவ சமுதாயமாவது நல்லாயிருக்கட்டும். ஹாஸ்டல்லே வழிகாட்டியாயிருந்து நாங்க சொல்லித் தராத பாடத்தை இந்த 'மொபசல்' பஸ் ஸ்டாப்புல சந்திக்கிற 'கைகாட்டி மரம்' உங்களுக்குச் சொல்லித் தந்ததே. எல்லாரும் அவுங்க அவுங்க வழியிலே போயிட்டு வாங்க. பீ ஹாப்பி....

(பொங்கி வரும் கண்ணீரை மறைத்துக்கொண்டு கைகாட்டி மரத்தைப் பிடித்துக் கொண்டு நிற்கிறார் ஃபாதர். பஸ் புறப்படுகிறது.)

வட்டமேஜை

வேலூர் மருத்துவ மனை விவகாரத்தை முதல்வர் ஒரு கௌரவப் பிரச்னையாகவே கருதி வந்திருக்கிறார் என்பதனை அவர் தம் படத்துடன் (வழக்கம்போல்!) கூடிய விளம்பரத்தினைப் பல செய்தித் தாள்களில் வெளியிட்டதன் மூலமாகவும் அறியலாம். சட்ட சபைப் பேச்சை இப்படிப் படத்துடன் விளம்பரமாக வெளியிடுவது முறைகேடானதல்லவா என்று கேட்டபோது, விளம்பரங்களின் மூலமாக அரசாங்கத்தின் நிலையை வட நாட்டில் உள்ளவர்கள் அறிந்துகொள்ளும் நோக்கத்தில் வெளியிட்டதாகக் கூறியிருக்கிறார். ஆனால் அவர் இப்படிச் சட்ட சபையில் பதிலளித்த அதே தினத்தில் வேலூர் நகரமெங்கும் எட்டுப் பக்கங்கள் கொண்ட ஆங்கில விளம்பரத் தாள் ஒன்று தமிழக அரசு செய்தித் துறையினரால் அச்சிட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. வேலூர் என்ன வடக்கே உள்ள நகரமா?

வேலூர்,
27–3–75 பி.எஸ். சுப்பிரமணியன்

கல்கி 16–3–75 இதழில் ஒருமைப்பாடு பற்றிய ஒரு துணுக்கில் ''பிரபல நாதஸ்வர வித்வான் ஷேக் சின்ன மௌலானா சாகேப் குருவாயூர் கோவிலில் அடிக்கடி நாதஸ்வரம் வாசிக்கிறார்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு தவறான கருத்தை ஹிந்து பக்தர்கள் மனத்தில் தோற்றுவித்துவிடக் கூடும். ஷேக் சின்ன மௌலானா அவர்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் குருவாயூர் ஸ்தலத்தில் ஒரு விழாவின்போது வாசித்தார். கோயிலுக்கு வெளியேதான் மேடை அமைந்திருந்தது. ஹிந்துக்கள் அல்லாதவர் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை.

25–3–75 நிர்வாகி, தேவஸ்தானம்
குருவாயூர் நிர்வாகக் கமிட்டி

அரியதே! போற்றுகின்றேன்!

தரிசிலே தங்கம் பூக்கும்
சாதனை கிருஷ்ணன் செய்தல்

உரியதாய்க் 'கல்கி' தன்னில்
உலகுக்குக் குயிலி சொல்லல்!

அரியதே போற்றுகின்றேன்!
அதனையே படிப்போர் தாமும்

பெரியநல் ஆக்கம் காணப்
பெட்புடன் முயல்வர்! வாழ்க!

சென்னை–44
21–3–75 மனசை ப. கீரன்

பல கட்டங்களில் ஒலிக்கும் மட்டரகமான உரையாடல்களினால் படம் 'ஏ' சர்ட்டிபிகேட் பெறத் தகுந்ததாயிருக்கிறது!

ஜெய்சங்கர், ஜெய் சித்ரா இருவருக்கும் ஆடவும், பாடவும், கூடவும், ஊடவும், ஒருவரையொருவர் சாடவும் இடையிடையே ஒருவரையொருவர் நெருக்கமாக நாடவும் நிறையச் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. அப்புறம் என்ன? சக்கைப் போடுதான்!

ஜெய்சங்கரின் நண்பனாக வரும் சண்முக சுந்தரம், காதலர்களை ஒன்று சேர்த்து வைக்க வில்லனாகவே மாறுகிறார். நன்றாய் நடிக்கிறார்.

உப கதையாக மனோரமா, 'சோ'வின் கதை வருகிறது. இரு பொருள் குறிக்கும் 'சோ'வின் அரசியல் கலந்த உரையாடல்கள் வழக்கம்போல் ரசிகப் பெருமக்களின் வரவாறு காணாத வரவேற்பைப் பெறுகின்றன.

மருமகள் மெச்சும் மாமியாராக வந்து எம். என். ராஜம் மிகப் பொருத்தமாக நடித்திருக்கிறார்.



பூவை எஸ். ஆறுமுகத்தின் மூலக்கதைக்கு மதுரை திருமாறன் திரைக்கதை, வசனம் தீட்டி, டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றுத் திறமையாகச் செய்திருக்கிறார்.

எதையுமே 'ஒழிக' என்று கூச்சல் போடும் இந்நாளில் ''சொந்தங்கள் வாழ்க!'' என்று சொல்கிறார்களே அதில் திருப்திப்பட்டு ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்! — **காந்தன்**



கடைசிப் பக்கம்

கண்ணதாசன்

புதியன பிறக்கட்டும்!





புண்ணியம் செழிப்ப தாக
பொய்மைகள் தொலைவ தாக
கண்ணியம் தழைப்ப தாக
கடமைகள் உயர்வ தாக
எண்ணிய நடப்ப தாக
இனியபா ரதத்தில் மீண்டும்
கண்ணியன் கீதைச் செல்வன்
கண்ணனே பிறப்பா னாக !

கற்பெனும் பெருமை ஓங்க
கனிவுறும் தாய்மை வாழ
அற்புதக் கவிதை தோன்ற
ஆனந்த இல்லம் காண
நற்பெரும் தவத்த ராய
நங்கைமார் உயர்ந்து வாழ
கற்புயர் நாட்டில் மீண்டும்
கண்ணகி பிறப்பா ளாக !

தந்தையைப் பணிந்து போற்றி
தாய்மையை வணங்கி யேற்றி
சிந்தையைச் செம்மை யாக்கி
செயல்களை நேர்மை யாக்கி
செந்தமிழ் நாட்டோர் வாழ்வில்
செல்வங்கள் குவிந்து காண
சிந்தையால் உயர்ந்து நின்ற
ஸ்ரீராமன் பிறப்பா னாக !

கணவனே தெய்வ மென்றும்
காடெலாம் சோலை யென்றும்
அணிமணி வேண்டே னென்றும்
அவனையே தொடர்வே னென்றும்
பணிவொடு பண்பும் கொண்டு
பாவலர் ஏற்ற வாழும்
தணலெனும் கற்பின் செல்வி
ஜானகி பிறப்பா ளாக !

ஒவ்வொரு பிறப்பும் இங்கே
உயர்ந்ததாய்ப் பிறப்ப தற்கு
செவ்விதழ் நீலக் கண்ணாள்
திருமகள் தமிழ்மீ னாட்சி
செவ்விதின் அருள்வா ளாக !
தேசத்தை உயர்த்து கின்ற
நல்வழி யாவும் கண்டு
நடக்கட்டும் தமிழ்ப்புத் தாண்டு !

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran


காலைப்புத்துணர்ச்சியும்
நறுமணமும்
நாள் முழுதும்
திகழட்டும்!
குளிர்ந்த நீரில் குளித்த புத்துணர்ச்சியை நீடிக்க வைக்கிறது-பல மணி நேரங்களுக்கு. ஆம், பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் நாள் முழுதும் உங்களை அவ்வண்ணம் திகழச் செய்கிறது. அங்கம் முழுதும் பூசிக்கொள்ளுங்கள். இது பொலிவுடனும், சுத்தமாகவும், குளுமையுடனும் வைக்கிறது. இதன் இதமான நறுமணம் நிலைத்திருக்கிறது. ஈரத்தை உறிஞ்சி உலர்ந்த நிலையில் வைத்து சுகப்படுத்துகிறது. கோடைகாலங்களில் வியர்வையின் துர்நாற்றத்தைப் போக்குவதுடன், 'பிசுக்' என்று ஒட்டுவதைத் தடுக்கிறது. பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் பட்டுப்போன்று இருப்பதால் அதை முகத்தில்கூட பூசிக்கொள்ளலாம்.
பாண்ட்ஸ்
ட்ரீம்ஃப்ளவர்
டால்க்
மீடியம், ஃபேமிலி மற்றும் இப்போது புதிய 196 கிராம்
கிடைக்கிறது
Pond's
Dreamflower talc
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
HT-CP-834

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon